உதயன்

www.onlineuthayan.com

24 பக்கங்கள் சுடர் 28 கதிர் 021 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 02 திங்கட்கிழமை (17/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00




# கோத்தாவுக்கு புனர்வாழ்வு கொடுத்து பல்கலை மாணவரை விடுவியுங்கள்

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

கொழும்பு, டிசெம்பர்.17

வெலிக்கந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக் கழக மாணவர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னரே விடுதலை செய்யப்படுவர் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ள கருத்தை ஏற்கமுடியாது எனக் கூறும் எதிர்க்கட்சிகள், வரம்பு மீறி திமிருடன் செயற்படும் கோத்தபாயவுக்கே புனர்வாழ்வு அளிக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளன.

''நீதிமன்றத்தின் செயற்பாடுகளைத் தன்னிச்சையாகச் செய்வதற்கு கோத்தபாய யார்? அவர் ஒரு சாதாரண அரச அதிகாரி. எனவே, தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார எல்லைக்குள்தான் அவர் செயற்பட வேண்டும்'' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் கண்டித்துள்ளன.

தடுத்துவைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் அக்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 12 பேர் அண்மையில் பயங்கரவாத விசாரணைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வவுனியாவுக்கு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். விசாரணைகள் முடிவடைந்த பின்னர் 8 மாணவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர். நால்

பார்க்க பக்கம் 4

## சர்வதேசத்தின் மீது வைகோ பாய்ச்சல்



கொழும்பு, டிசெ.17

யாழ். பல்கலைக்கழக மாணவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறைகளில் அடைத்து வைத்துள்ள சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்காது ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேசம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு தமிழகத்தின் பழுத்த அரசியல் வாதியும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளருமான வைகோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போராடிய வீரர்களை மட்டுமல்லாமல், ஆயுதம் ஏந்தாத அப்பாவிப் பொதுமக்களையும் இலட்சக்கணக்கில் இலங்கை இராணுவம், இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஆயுத உதவிகளோடு கொன்று குவித்த கொடுமையின் உண்மையும், ஐ.நா. சபை கடமை தவறி வேடிக்கை பார்த்த அநீதியும், சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு வந்துள்ளன.

ஆனால், தமிழ் மாணவர்களைச் சிறைப்படுத்தி கொடுமைப்படுத்துவது உலகில் வேறு எங்கும் நடக்கவில்லை. ஐ.நா. உள்ளிட்ட அனைத்துலக அமைப்புகள் மனசாட்சியை அடகுவைத்து மௌனம் கடைப்பிடிப்பது கண்டனத்திற்குரியதாகும்.

பார்க்க பக்கம் 4

## இலங்கை கண்டனம்



கொழும்பு, டிசெ.17

இலங்கையின் இறுதிப் போரில் ஐ.நாவின் செயற்பாடுகள் தொடர்பான உள்ளக அறிக்கையை மீளாய்வு செய்வதற்காக குழு ஒன்றை அமைப்பது தாமதமாகும் என ஐ.நா. அண்மையில் விடுத்த அறிவிப்புக்கு இலங்கை அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

சாள்ஸ் பெட்றி குழுவின் அறிக்கையை ஐ.நா. பொதுச் செயலர் வெளியிட்ட பின்னர், அதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்த போதிலும், இலங்கை அரசுடன் ஐ.நா. இன்னமும் தொடர்பு கொள்ளவில்லை என்று வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

''இந்த மீளாய்வு அறிக்கை ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்த ஒரு உள்ளக ஆவணம். அவர்கள் பல பரிந்துரைகளைச் செய்துள்ளனர். ஆனால், அவர்கள் எம்மிடம் எதையும் கேட்கவில்லை. எம்முடன் இணைந்து செய்வதற்கு எதுவும் இல்லை.'' - என்றார் அவர் (சி)

## அரசியல் தீர்வுக்கு இதுவரை என்ன செய்தார் டக்ளஸ்?

### கேள்வி எழுப்பினார் விநாயகமூர்த்தி எம்.பி.

யாழ்ப்பாணம், டிசெ.17

அரசுடன் இணைந்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க இதுவரை எந்த வகையில் முயற்சித்திருக்கிறார். இவ்வாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி. யாழ்ப்பாணத்தில் அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்காது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்கிறது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேள்வியெழுப்புகிறார். நாம் கேட்கின்றோம், அரசுடன் இணைந்து அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இதுவரை என்ன செய்திருக்கிறார்?

பார்க்க பக்கம் 4

## முன்னாள் போராளிகள் கைதாகின் அறிவியுங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 17

புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு பெற்று பின்னர் பெற்றோர், உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டவர்களில் யாராவது கடந்த வாரங்களில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தாலோ அல்லது விசாரணைக்கு வருமாறு அழைக்கப்பட்டிருந்தாலோ அது தொடர்பில் உடன் அறியத் தரவும்.

இவ்வாறு கேட்டுள்ளது புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு. இதுதொடர்பில் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஸ்குமார் தெரிவித்ததாவது :-

கைதுசெய்யப்பட்டவர்கள் அல்லது விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்கள் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியாக இருப்பின் அவர்களது பெயர் விவரங்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னர் எந்த இடத்திலுள்ள புனர்வாழ்வு நிலையத்தினால் விடுதலை செய்யப்பட்டனர் போன்ற விவரங்களை 011 2699 796 என்ற தொலைநகல் இலக்கத்துக்கு

பார்க்க பக்கம் 4

## ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியில் வடக்கு, கிழக்கில் 20,000 வீடுகள்

கொழும்பு, டிசெ.17

வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட 20 ஆயிரம் குடும்பங்கள் தமக்கான புதிய வீடுகளைக் கட்டுவதற்கான நிதியுதவியை 2015 ஆம் ஆண்டிற்குள் வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளின் வாழ்வாதாரத்தையும் சமூக - பொருளாதார அபிவிருத்திகளையும் மேற்கொள்வதற்கென 1.9 பில்லியன் ரூபா அல்லது 120 மில்லியன் யூரோக்கள் வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை கூறுகிறது.

மனிதாபிமான உதவியிலிருந்து நீண்டகால நிலையான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியமானது 2016 இல் இலங்கை தனது பிரதான பொருளாதார இலக்குகளை அடைவதற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் எனவும் பேர்ணர்ட் சாவேஸ் மேலும் தெரிவித்துள்ளார்.(சி)

## கசூரினா கடலில் குளித்த இளைஞன் திடீரென மாயம்

### நள்ளிரவுவரை மீட்கப்படவில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 17

காரைநகர் கசூரினா கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் காணாமற் போயுள்ளார். நேற்று நள்ளிரவுவரை அவரைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

புன்னாலைக்கட்டுவன், குப்பிளானைச் சேர்ந்த உதயகுமார் நிதர்ஷன் (வயது-21) கடல்நீரில் மூழ்கி இழுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இவர் ஒரு அரச வங்கி ஊழியர்.

விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை தனது நண்பர்கள் நால்வருடன் கசூரினா கடலுக்குச் சென்ற நிதர்ஷன் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது, பிற்பகல் ஒரு மணியளவில் காணாமல்போனார் என்று அவரது நண்பர்கள் கூறுகின்றனர்.

சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் கடமையி

பார்க்க பக்கம் 4

## சுயாதீன குழு குறித்து மஹிந்த நாடாளுமன்றுக்கு அறிவிக்கட்டும்

### ஐ.தே.கட்சி வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 17

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுக்களை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையை ஆராய சுயாதீனக் குழு ஒன்றைத் தான் நியமிக்கப்போகிறார் என்ற தனது அறிவிப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

பத்திரிகைகளின் ஆசிரியர்களைக் கடந்த வாரம் சந்தித்துப் பேசிய மஹிந்த ராஜபக்ஷ, சுயாதீனக் குழு பற்றிய அறிவிப்பை வெளிப்படுத்தி இருந்தார். ஆனால் இதுவரையில் அதுபற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

எனவே, பிரதம நீதியரசரின் விசாரணை குறித்து சுயாதீனக் குழு ஒன்று ஆராயும் என்பதை ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று ஐ.தே.க. நேற்று விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

## நீதிமன்ற நடவடிக்கைகள் இன்று வழமைக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடமாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் இன்று தொடக்கம் வழமைக்குத் திரும்புகின்றன என்று யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானத்தைக் கண்டித்தும் நீதித்துறையைப் பாதுகாக்குமாறு கோரியும் வடமாகாணத்திலுள்ள சட்டத்தரணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சா/த விஞ்ஞான பாடவினாத்தாள் விவகாரம் சி.ஐ.டி. விசாரணையில் உண்மை வேண்டும்

## ஜனாதிபதியிடம் ஆசிரியர் சங்கம் முறைப்பாடு

கொழும்பு, டிசெ.17

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞானப் பாட வினாத்தாள், குறித்த பரீட்சைக்கு முன்னதாகவே வெளியிடப்பட்டதா என எழுந்துள்ள சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க உடனடியான - உண்மையான விசாரணை நடத்தப்படவேண்டும் எனக் கோரி இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடமும், ஜனாதிபதியின் செயலாளரிடமும் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

இது விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றபோதிலும், இந்த விசாரணைகள் உண்மையானதாக இருக்க வேண்டுமெனக் கோரியே தாம் முறைப்பாடு செய்தார் என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜோசப் ஸ்டாலின் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞானப் பாடப் பரீட்சை நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்றது. இந்தப் பரீட்சை வினாத்தாளில் வழங்கப்பட்ட வினாக்களுள் 18 வினாக்களும் அதற்குரிய படங்களும் உள்ளடக்கப்பட்ட மாதிரி வினாத்தாளொன்று கம்பஹா மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிறுவன ஆசிரியரால் வழங்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானப் பாடப் பரீட்சை வினாத்தாளிலுள்ள கேள்விகள் மட்டுமல்லாது, அதிலுள்ள படங்களும் குறித்த ஆசிரியர் வழங்கியுள்ள மாதிரி வினாத்தாளில் உள்ளடங்குகின்றது.

எனவே, இதனை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது விஞ்ஞானப் பாட வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியிடப்பட்டதா என்ற கேள்வி எழுகின்றது. இது விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இது போதாது. இது தொடர்பில் எமக்கு உடனடியான - உண்மையான விசாரணை இடம்பெறவேண்டும். இந்த விசாரணையை வலியுறுத்தி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடமும், ஜனாதிபதியின் செயலாளரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம்.

மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பரீட்சைகளில் இதுபோன்ற அசம்பாவிதங்கள் இடம்பெறுவதானது, பரீட்சைகள் தொடர்பில் மாணவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இல்லாதொழிக்கின்றது - என்றார்.

இதேவேளை, பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியிடப்படவில்லை. எனது அறிவு, அனுபவத்திற்கேற்பவே நான் விஞ்ஞானப் பாட மாதிரி வினாத்தாளை தயார்செய்து மாணவர்களுக்கு வழங்கினேன் என்று கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த குறித்த தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் தெரிவித்துள்ளார். (சி)

# பட்டப்பகலில் கதவுடைத்து திருடும் முயற்சி படுதோல்வி

## பிடிபட்ட நபருக்கு நல்ல கவனிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

பட்டப்பகலில் வீட்டாரின் கண்ணில் மண்ணைத்தூவிவிட்டு கதவுடைத்துத் திருட முயன்ற திருடர்களில் ஒருவன் அயலவர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டான். மற்றைய இருவர் தலைதெறிக்கத் தப்பி ஓடிவிட்டனர். பிடிபட்டவன் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டான்.

இந்தச் சம்பவம் உடுவில், தொம்மை வீதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வீட்டுக்காரர்கள் வீட்டின் முன்புறமாக இருந்துள்ளனர். அதனை அவதானித்த திருடர்கள் வீட்டின் பின்புறமாக வேலியைப் பிரித்து வளவினுள் நுழைந்து வீட்டின் பின் கதவை உடைத்து உள் நுழைய முயன்றுகொண்டிருந்தனர். சத்தத்தை அவதானித்த வீட்டார் உள்புறமாகச் சென்று அவதானித்த போதே

**பின்புறமாக வேலியைப் பிரித்து வீட்டின் பின் கதவை உடைத்து உள் நுழைய முயன்று கொண்டிருந்தனர்**

திருடகள் வீட்டின் பின் கதவை உடைக்க முயற்சி செய்வதைக் கண்டுள்ளனர்.

சம்பவம் அயலவர்களிற்கு அறிவிக்கப்பட அனைவரும் சூழ்ந்து கொண்டனர். திருடர்களில் இருவர் தப்பியோட ஒருவன் மட்டும் அருகில் இருந்த குடிசைக்குள் ஒழித்துக் கொண்டான். அயலவர்களின் தேடுதலில் சிக்கிய அவன், முறையாகக் கவனிக்கப்பட்ட பின் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

# முன்னாள் போராளிகள் 375 பேர் ஜனவரியில் விடுதலையாவர்

யாழ்ப்பாணம், டிசெ.17

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் 375 பேர் எதிர்வரும் ஜனவரி மாதம் விடுதலை செய்யப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் முன்னாள் போராளிகள் கட்டம் கட்டமாக பெற்றோர், உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றனர்.

இதன்படி தகுதி பெற்றுள்ள முன்னாள் போராளிகள் உட்பட 375 பேர் எதிர்வரும் ஜனவரி மாதம் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

தற்போது வவுனியா, பூந்தோட்டம், மன்னார், மருதமடு, வெலிக்கந்த மற்றும் கந்தகாடு ஆகிய புனர்வாழ்வு நிலையங்களில் 800 இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர். இவ்வாறு புனர்வாழ்வு பெறுபவர்களில் 375 பேர் விடுவிக்கப்படவுள்ளனர்.

**முன்னாள் போராளிகள் உட்பட 375 பேர் எதிர்வரும் ஜனவரி மாதம் விடுதலை செய்யப் படவுள்ளனர்**

புனர்வாழ்வு நிலையங்களில் முன்னாள் போராளிகளில் 63 பேர் இந்த முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் அவர்களுக்கான பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு முன்பாக பாடவிதானம் தொடர்பாக அவர்களுக்கு வகுப்புக்கள் நடத்தப்பட்டன. கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 24 பேர் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்தார்கள் - என்றார். (ஐ-4)

# தப்பிய கைதி கைது

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்ற சிறைக் கைதி ஒருவர் அம்பலாங்கொடை பொலிஸாரால் அப் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கடந்த நவம்பர் மாதம் 11 ஆம் திகதி சிறைச்சாலையில் இருந்து தப்பச் சென்றுள்ளார் என்றும், அவர் கொலைக் குற்றத்துடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

# கஜமுக சங்காரம்

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்ட கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று இரவு 7 மணியளவில் கஜமுக சங்காரம் நடைபெறவுள்ளது. கடந்த 29 ஆம் திகதி இந்த ஆலயத்தில் பிள்ளையார் கதை படிப்பு ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. இன்று நடைபெறவுள்ள கஜமுக சங்கார நிகழ்வைத் தொடர்ந்து நாளை வழமை போல் பிள்ளையார் கதை படிப்பு நடைபெற்று பூர்த்தி யடையும். (ம)



வானில் இருந்து வெலஸ்முல்ல தெற்கு, கனுமுல்தெனிய பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை விழுந்த மர்மப்பொருள் பலாமரத்தை எரித்தது. அதன்போது வானில் இருந்து விழுந்த குறித்த பொருளுடன் வீட்டுப் பெண்.

# தண்டவாளத்தில் பயணித்த பஸ்

சுமார் 40 பயணிகளை ஏற்றிச்சென்ற இ.போ.ச பஸ்ஸொன்று ரயில் தண்டவாளத்தில் பயணித்த சம்பவமொன்று பண்டாரவளையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக குறித்த தண்டவாளத்தினூடாக பணிக்கும் ரயில் சேவைகள் 30 நிமிடத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் நேற்று இடம்பெறவிருந்த பாரிய விபத்து தடுத்த நிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி சுமார் 40 பயணிகளுடன் சென்றுக்கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துக்கு சபைக்கு சொந்தமான பஸ்ஸே தண்டவாளத்தில் சில அடி தூரம் பயணித்துள்ளது.

குறித்த பஸ் பண்டாரவளை கொலனேதென்னவளைவில் திரும்பயபோதே ரயில் தண்டவாளத்திற்குள் சென்றுள்ளது.



சம்பவத்தை அடுத்து விரைந்து செயற்பட்ட ரயில் கடவை பாதுகாப்பு ஊழியர், இது தொடர்பல் பண்டாரவளை மற்றும் ஹப்புத்தளை ரயில் நிலையங்களுக்கு உடனடியாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்து கொழும்பை நோக்கி பயணித்த உடரட்ட மெனிக்கே பண்டாரவளையிலும் மற்றும் பொடிமெனிக்மே ஹப்புத்தளையிலும் 30 நிமிடங்கள் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இ.போ.சபைக்கு சொந்தமான அந்த பஸ் சாரதியின் சாமர்த்தியத்தினாலும் ரயில் கடவை பாதுகாப்பு ஊழியரின் துரித செயற்பாட்டின் காரணத்தினாலும் பாரிய விபத்து இடம்பெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது. (சி)

# கஞ்சா கடத்தியவர் கைது

கொழும்பு, டிசெ.17

சடலங்கள் சிலநாள்களுக்கு பழுதடையாமலும் துர்நாற்றம் வீசாமலும் இருப்பதற்காக தெளிக்கப்படும் 'போமலின்' தெளித்து கஞ்சா கடத்திய ஒருவரை தெல்கந்தை பொலிஸார் சந்தேகத்தின்பேரில் நேற்று கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞன் எம்பிலிப்பபிட்டியவிலிருந்து நுகேகொடைக்கு வாராந்தம் கஞ்சா கடத்துபவர் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனமல்விலவில் 3 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் ஒருகிலோ கஞ்சா, நுகேகொடையில் 18 ஆயிரம் ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. (சி)

# வெற்றுக்கண்களால் சூரியனைப் பார்க்காதீர்

கொழும்பு, டிசெ. 17

வெற்றுக் கண்களால் சூரியனைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக விண்ணில் சில மாற்றங்கள் ஏற்படுவதாக வெளியாகும் செய்திகளை அடுத்துப் பொதுமக்கள் பலர் சூரியனை ஆர்வத்துடன் பார்த்துவருகின்றனர்.

இவ்வாறான நேரங்களில் எந்தவித பாதுகாப்பற்ற முறையில் வெற்றுக் கண்களால் சூரியனைப் பார்ப்பதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆதர் சி.கிளார்க் மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தற்போது வானில் நடைபெற்றுவரும் மாற்றங்கள் இலங்கையில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் வான் பரப்பில் நடைபெற்றுவருவதாகவும் இவற்றுக்கும் சூரியனுக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லாததால் மக்கள் வீணாக அச்சம் அடைய வேண்டாமென அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-16)

# ஓட்டோ வாடகையும் உயர்த்தப்படும்

கொழும்பு,டிசெ.17

ஓட்டோ வாடகைக் கட்டணங்களும் எதிர்வரும் நாள்களில் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலின் விலை கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டதை அடுத்தே கட்டண அதிகரிப்புக்குத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை ஓட்டோ சங்கத் தலைவர் சுனில் ஜயருக் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் , ஒரு கிலோ மீற்றருக்கு 35 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ள கட்டணம் 3 முதல் 5 ரூபா அதிகரிப்புடன் 38 அல்லது 40 ரூபாவாக உயரும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அடிப்படை அறவீட்டுக் கட்டணமாக 50 ரூபாவே தொடர்ந்தும் அறவிடப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். பெற்றோலின் விலை 10 ரூபாயினால் அதிகரித்துள்ளமைகுறிப்பிடத்தக்கது(ஐ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாபிலவு- வற்றாப்பளை வீதி போக்குவரத்துக்கு படையினர் தடை

## மக்கள் காட்டுப் பகுதியூடாக அச்சத்துடன் பயணம்

முல்லைத்தீவு,டிசெ.17

கேப்பாபிலவு வற்றாப்பளை வீதியில் நிலை கொண்டிருக்கும் படையினர் அந்த வீதியூடான மக்களின் போக்குவரத்துக்கு தடை செய்திருப்பதால் அதனைப் பயன்படுத்தும் மக்கள் காட்டுப்பகுதியால் அச்சத்துடன் பயணம் செய்யும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து கேப்பாபிலவு ஊடாக வற்றாப்பளைக்குச் செல்லும் பிரதான வீதியில் கேப்பாபிலவு சந்தியில் இருந்து 4 கிலோ மீற்றர் தூரம் உள்ள சூரியபுரம் சந்தி வரையான வீதியிலேயே இராணுவத்தினர் போக்குவரத்தை தடை செய்துள்ளனர்.

தற்போது நிலவும் சமதான சூழ்நிலையில் இந்த வீதியை பயன்படுத்த விடாது வைத்திருப்பது தொடர்பாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த வீதியை இராணுவத்தினர் தடை செய்து வைத்திருப்பதால் மேலதிகமாக மேலும் 4 கிலோ மீற்றர் தூரம் சுற்றி அடர்ந்த காட்டுப்பகுதி ஊடாக மக்கள் போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக சனநடமாட்டம் குறைந்த காட்டுப் பகுதியூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் யுவதிகள் அச்சத்துடன் பயணத்தை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் காட்டு விலங்குகளின் நடமாட்டமும் காணப்படுவதால் மேலும் அச்சத்துடனேயே காட்டுப் பகுதியூடாக போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து அந்த வீதியூடான போக்குவரத்து தடையை நீக்கி பயணத்தை இலகுபடுத்தும்படி அந்தப் பகுதி மக்கள் இராணுவத்தினரிடம் கேட்டு நிற்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்ந்த மக்களுக்கு மீண்டும் படையினரின் இந்தச் செயற்பாடு அவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

போர்க் காலங்களில் இப்படியான சம்பவங்களுக்கு முகம் கொடுத்த மக்கள் போர் முடிவடைந்து மூன்றாண்டுகள் கழிந்த பின்னரும் மீண்டும் அதே செயற்பாடு காணப்படுவதால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். (எ-410)

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது

மன்னார்,டிசெ.17

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் சுமார் 2 கோடி 25 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தலை மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலைமன்னார் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து தலைமன்னார் பொலிஸாரும், மன்னார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாரும் இணைந்து தலைமன்னார் நடுக்குடா பகுதியில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை 2 கிலோ 250 கிராம் எடை கொண்ட 2 கோடி 25 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த ஹெரோயின் போதைப் பொருள்களுடன் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் நடந்து வருகின்றன என்று தலைமன்னார் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-12)

## சுகாதார வாரத்தை முன்னிட்டு பல்வேறு செயற்றிட்டங்கள்



மன்னார்,டிசெ.17

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஊடாக பல செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று முருங்கன் மாவட்ட வைத்திய அதிகாரி எம்.ஒஸ்மன் சார்ள்ஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் முருங்கன் வைத்தியசாலையில் சிரமதானம், வீட்டுத்தோட்டம், சுகாதார விழிப்புணர்வு, தொற்றா நோய்களை பரிசோதித்தல் போன்ற பல்வேறு செயற் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-12)

## பண்டிகைக்கால வியாபாரத்துக்கு மன்னாரில் இடம் ஒதுக்கீடு

### வேறு எங்கும் கடை விரிக்கத் தடை

மன்னார்,டிசெ.17

மன்னாரில் எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இந்த மாதம் 31 ஆம் திகதி வரை வியாபார நடவடிக்கைகளுக்காக மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் மாவட்டத்தின் வேறு எந்தப் பகுதியிலும் வியாபாரங்கள் மேற்கொள்ள மன்னார் நகர சபை தடை விதித்துள்ளது என்றும் மன்னார் நகர சபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நிரந்தர வியாபார நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட பண்டிகைக்கால வியாபாரங்களைத் தவிர தற்காலிகமாக வீதிகளில் போடப்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் இம்முறை தடை செய்யப்பட்டுள்ளன.

பண்டிகைக்கால வியாபார நிலையங்கள் அனைத்தும் இம்முறை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மாத்திரமே அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விதி முறைகளை மீறும் அனைத்து வியாபாரிகளுக்கு எதிராகவும், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தலைவர் மேலும் தெரிவித்தார். (எ-12)

## வர்த்தக நிலையங்கள் மீது அதிகாரிகள் திடீர் பாய்ச்சல்

### புதுக்குடியிருப்பில் சிக்கினர் 65 பேர்

முல்லைத்தீவு,டிசெ.17

புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் திடீர் பாய்ச்சலை மேற்கொண்டதால், பொருள்களின் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாத வர்த்தகர்கள் 65 பேர் மாட்டிக் கொண்டனர்.

கடந்த வாரம் புதுக்குடியிருப்பு பகுதியில் உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் உட்பட அனைத்து பெரிய சிறிய நடுத்தர வர்த்தக நிலையங்கள் மீதும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் திடீர்ப் பாய்ச்சலை மேற்கொண்டு பொருள்களின் விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாத வர்த்தக உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொண்டனர்.

குறிப்பாக கைவேலி, கோம்பாவில், புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் திடீர் சோதனையை மேற்கொண்டனர்.

இதேவேளை, விலைக் கட்டுப்பாடு அதிகாரிகளின் செயற்பாடு தொடர்பாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலப் போரினால் வர்த்தக நிலையங்கள் முழுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு வர்த்தக நிலையங்களை நடத்தி வரும் வேளை முன்னறிவித்தல் இன்றி திடீர் பரிசோதனையை மேற்கொள்வது நியாயமானதா எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அத்தோடு பரிசோதனையை மேற்கொள்ள வருபவர்கள் தமிழ் தெரியாமல் சிங்கள மொழியில் உரையாடுவதால் தங்களின் நிலை தொடர்பாக அவர்களுக்கு புரிய வைக்க முடியாத நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து செயற்படுவார்களாயின் எதிர்காலங்களில் இப்படியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படாது என்று வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (எ-400)

## திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் திருவாசக விழா 26,27 இல்

மன்னார்,டிசெ.17

திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் திருவாசக விழா எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் திருவாசக மடத்தில் ஆலய திருப்பணிச் சபைச் செயலாளர் புலவர் அ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் முதலாம் நாள் காலை நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்'' எனும் தலைப்பில் இளைப்பாறிய அதிபர் சைவப் புலவர் அ.செல்லத்துரையும், ''துணையிலி பிணநெஞ்சே'' எனும் தலைப்பில் இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கமும், ''சித்தம் அழகியார்'' எனும் தலைப்பில் திருவாவடுதுறை ஆதீன சமயப் பிரசாரகர் சைவப் புலவர் ஏ.அனுஷாந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

மேலும் திருவாசகப் பண்ணிசையை இளைப்பாறிய சங்கீத ஆசிரியர் கலாபூஷணம் வி.சிவஞானசேகரம் நிகழ்த்தவுள்ளார்.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் மாலை நிகழ்வில் தெய்வ வாசகம் தந்த திருவாதவூரர் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவை வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன், திருவாசகப் பண்ணிசையை சைவப்புலவர் ஏ.அனுஷாந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் காலை நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை ''நானோ இதற்கு நாயகமே'' எனும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கமும், ''ஆரொடு நோகேன்'' எனும் தலைப்பில் சைவப் புலவர் அ.செல்லத்துரையும் ''திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்'' எனும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்திய [illegible] திருவாசகப் பண்ணிசையை [illegible] வி.சிவஞானசேகரமும் நிகழ்ந்தவுள்ளனர். (எ)



[illegible]தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான இடர் [illegible] நிகழ்ச்சித் திட்ட செயலமர்வு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மன்னார் கிளையினால் நடத்தப்பட்டது. செயலமர்வில் பங்குபற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், திட்ட இணைப்பாளர்கள் காணப்படுகின்றனர். (எ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கு ஆள்கடத்தலை தடுப்பதற்கு கோத்தா தலைமையில் கூட்டுக்குழு

கொழும்பு, டிசெ.17

இலங்கையில் இருந்து படகுகள் மூலம் அகதிகள் ஆஸ்திரேலியா செல்வதைத் தடுப்பதற்கு கூட்டுச் செயலணிக் குழுவொன்றை அமைக்க இலங்கையும், ஆஸ்திரேலியாவும் முடிவு செய்துள்ளன.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஆஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியுரிமைத் திணைக்களச் செயலர் மார்ட்டின் பொவ்லெஸ் ஆகியோர் இந்தச் செயலணிக் குழுவுக்குத் தலைமை தாங்குவர் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை, ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர்கள் இந்தச் செயலணிக்குழுவை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

சட்டவிரோதக் குடியேற்றங்கள், ஆட்கடத்தல்களைத் தடுப்பது குறித்த நடப்பு விவகாரங்களைக் கையாள்வதற்கே இந்தச் செயலணிக்குழு உருவாக்கப்படவுள்ளது.

இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கர், இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில், அழுத்தங்களை எதிர்கொள்வதைத் தவிர்ப்பதற்கு இது போன்றதொரு செயலணிக்குழு இந்திய- இலங்கை அரசுகளின் உயர் மட்டத்தில் உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய இராணுவத் தளபதி இலங்கை வருகிறார்

கொழும்பு, டிசெ.17

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பக்ரம் சிங் நாளை மறுதினம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரையும் சந்திக்கவுள்ளார்.

இவருடன் இந்திய இராணுவத்தின் மூத்த அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றும் கொழும்பு வரவுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, கூட்டுப்படைத் தளபதி, முப்படைகளினதும் தளபதிகள் ஆகியோரை இவர் சந்திப்பார்.

இதேவேளை, வவுனியா பாதுகாப்புப்படைத் தலைமையகத்துக்கும் செல்லும் அவர், பூந்தோட்டத்தில் அமைந்துள்ள புனர்வாழ்வு நிலையத்துக்கும் சென்று முன்னாள் போராளிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதிவரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்பட்டது (ஐ)

# பல்கலை மாணவர் மீதான தாக்குதல் கண்டித்து பிரான்ஸில் கவனவீர்ப்பு

பரிஸ், டிசெ.17

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல்கள், கைதுகளைக் கண்டித்தும், அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் பல்கலைக்கழகப் பழைய மாணவர்கள் பிரான்ஸில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

தமிழ்க் கல்விச் சமூகமும், தமிழ்மக்களும் இலங்கை அரசாலும் அதன் படைகளாலும் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள் குறித்து, கவலையும் அக்கறையும் கொண்டு, வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களில் கல்விகற்று, தற்சமயம் பிரான்ஸில் வசித்துவரும் பழைய மாணவர்கள், இணைந்து, இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

பிரான்ஸ் நாடாளுமன்ற முன்றிலில், பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம் பித்து, மாலை 6 மணிவரை நடைபெற்ற மேற்படி ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

''சர்வதேசமே தமிழ் மக்களின் உரிமையைப் பெற்றுக் கொடு'', ''சர்வதேசமே தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து'' என்ற இரு பிரதான கோரிக்கைகளை முன்வைத்து, குறித்த போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள், குறிப்பாக கல்விச் சமூகம் சந்திக்கும் நெருக்கடிகள், அமைதியற்ற அச்சமூட்டும் சூழ்நிலைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக மனு ஒன்று, பிரான்ஸ் அரசிடம் கையளிக்கப்பட்டது. குறித்த மனுவை பல்கலைக்கழக பழையமாணவரான சிவகுமார் கையளித்தார்.

## அரசியல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வடபகுதியில் இடத்துக்கு இடம் அமைச்சர்களதும், ஜனாதிபதியினதும் கட்டவுட்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஏதாவது கட்டடம் கட்டப்படுகிறது என்றால் அதன் உயரத்துக்கு ஏற்றால் போல் அமைச்சர், ஆளுநரது படங்கள் பொறிக்கப்பட்ட கட்டவுட்கள்தான் எழுப்பப்படுகின்றன.

லட்சக்கணக்கில் கட்டவுட்களுக்காக பணம் செலவிடப்படுகிறதே தவிர, மக்களுக்கு இதன் மூலம் எந்த நன்மையும் கிடைப்பதில்லை. மக்களது வரிப்பணத்தையே இவர்கள் வீண்செலவு செய்துவிட்டு கதைவேறு பேசுகிறார்கள் - என்றார். (ஐ-4)

## சுயாதீனக்குழு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

''பிரதம நீதியரசர் தொடர்பான விசாரணைகளுக்கு நாடாளுமன்றமே பொறுப்பு. எனவே சுயாதீனக் குழுவை நியமிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கே ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்; பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு அல்ல'' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நீதிமன்ற...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் தங்களது புறக்கணிப்பை இடைநிறுத்தி வழமையான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.(ஐ-4)

## கருநரினா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

லிருந்த ஊர்காவற்றுறை மற்றும் வட்டுக்கோட்டைப் பிரிவு பொலிஸாரின் விசேட நீச்சல் பிரிவினர் மற்றும் கடற்படையினரும் அந்தப் பகுதி மீனவர்களுடன் இணைந்து கடலில் தேடுதல் நடத்தியுள்ளனர்.

நேற்றிரவு வரை குறித்த இளைஞன் மீட்கப்படவில்லையென ஊர்காவற்றுறைப் பொலிஸார் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தனர்.

வழமையைவிட நேற்றும், நேற்றுமுன்தினமும் கடல் கொந்தளிப்பு அதிகமாக இருந்ததாகவும் இதனால் கடலுக்குச் செல்ல அச்சமான சூழல் காணப்பட்டதாகவும் அந்தப் பகுதி மீனவர் ஒருவர் தெரிவித்தார். கடல் கொந்தளிப்பு அதிகமாக இருந்ததாலேயே குறித்த இளைஞன் அலையுடன் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரை உயிருடன் மீட்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைந்துவிட்டன என்று அதிகாரிகள் நேற்றிரவு தெரிவித்தனர். (உ-16)

## முன்னாள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அனுப்பிவையுங்கள்.

இது தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை. முறைப்பாடு பதிவாகும் பட்சத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க அமைச்சு தயாராகவுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## சர்வதேசத்தின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மாணவர்கள் தற்போது தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்கள். சிறையில் உள்ள மாணவர்களின் வீடுகளுக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் சென்று மிரட்டி வருகின்றனர்.

போரினால் தனிமைப்படுத்தப்பட்டு உறவுகளையும், வாழ்வாதாரங்களையும் இழந்த தமிழ் இளம் பெண்களை, இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று கட்டாயப்படுத்தி, பலவந்தமாக இராணுவத்தில் கொண்டுபோய் சேர்க்கின்ற அக்கிரமம் நடக்கின்றது.

அப்படி சேர்க்கப்பட்ட தமிழ்ப் பெண்களை எவரும் சென்று பார்க்க அனுமதிக்கப்படுவ தில்லை. இலங்கையில் தமிழ்ப் பெண்களின் நிலைமை மிகவும் கவலை தருகிறது.

தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளைத் திட்டமிட்டுச் செய்கின்ற இலங்கை அரசை தண்டிக்க வேண்டிய இந்திய அரசு, அதற்கு மாறாக அந்த அரசோடு தொடர்ந்து பொருளாதார ஒப்பந்தங்களைச் செய்தும், கடல் வழியாக மின்சாரத்தை இலங்கைக்குக் கொடுக்கும் திட்டத்தைச் செயற்படுத்த முனைந்தும் துரோகம் இழைத்து வருகிறது.

இவ்வாறான நிலையில், யாழ் பல்கலைக்கழக மாண்வர்களை உடனடியாக விடுதலை செய்ய மனித உரிமையில் அக்கறை உள்ள நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். - இப்படி அதில் வைகோ தெரிவித்துள்ளார்.

## கோத்தாவுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வர் வெலிக்கந்தவில் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சில் முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றது. இதன்போது புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே தடுத்துவைக்கப்பட்டுள்ள மாணவர்கள் நால்வரும் விடுதலை செய்யப்படுவர் என பாதுகாப்புச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய முக்கிய கட்சிகளிடம் கருத்துக் கேட்டபோது மேற்படி கட்சிகளின் பிரமுகர்கள் கூறியதாவது:-

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

எவரையும் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் வேலை அல்ல. எழுந்தமான போக்கில் பேசுவதே பாதுகாப்புச் செயலாளரின் இன்றைய வேலையாகவுள்ளது. கைது செய்யப்பட்ட மாணவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கவேண்டுமா அல்லது அவர்களுக்கு சிறைத் தண்டனை வழங்கப்படவேண்டுமா என்பதை நீதிமன்றம்தான் தீர்மானிக்கவேண்டும். பொலிஸார் நள்ளிரவுகளில் மாணவர்களின் வீடுகளுக்குள் புகுந்தே அவர்களை அச்சுறுத்திக் கைதுசெய்துள்ளனர். இது ஒரு தவறான செயல். அவர்களைச் சரணடையுமாறு மிரட்டியது இரண்டாவது குற்றம்.

கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். எனினும், ஜனாதிபதியின் தம்பியான தனக்கு எதையும் செய்யமுடியும் என்ற திமிரில் பாதுகாப்புச் செயலாளர் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டுள்ளார் - என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

**விக்கிரமபாகு கருணாரத்ன**

தனக்கு வழங்கப்பட்டுள்ள பதவி என்ன என்பதை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளாது செயற்படும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குத்தான் முதலில் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும். அவர்தான் அதிகார மமதையால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அரச அதிகாரியான கோத்தபாய எந்த அதிகாரத்தின் அடிப்படையில் மாணவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி விசாரணைகளை நடத்தினாலும், புனர்வாழ்வுக்கு உத்தரவிடும் அதிகாரம் அவருக்கில்லை. கோத்தபாயவின் இந்தச் செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன், மாணவர்களின் விடுதலைக்காகவும் குரல் கொடுப்போம். அன்று கல்வியில் பாகுபாடு காட்டியதால்தான் நாட்டில் போர் ஏற்பட்டது. எனவே, அரசு மாணவர் சமூகத்துடன் விளையாட முற்படக்கூடாது எனத் தெரிவித்தார் நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.

**மனோ கணேசன்**

சுமார் ஆயிரம் தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளிலும், தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு புனர்வாழ்வளித்து விடுவிக்குமாறு அல்லது குறைந்தபட்சம் பிணையிலாவது விடுதலை செய்யுமாறு நாம் பல தடவைகள் அரசிடம் கோரிக்கை விடுத்தோம். இதையெல்லாம் செய்யாத அரசும், அதன் அதிகாரிகளும் சுதந்திரமாகக் கல்விகற்கவேண்டிய மாணவர்களை அடித்து, பிடித்துக் கொண்டு சென்று புனர்வாழ்வளிப்பதாகக் கூறுவது காட்டுமிராண்டித்தனமான செயல்.

ஐ.நா. சபையில் பல தடவைகள் கண்டனத்துக்குள்ளாகியும் இலங்கை அரசு இன்னும் திருந்தவில்லை என்பதையே இவ்வாறான சம்பவங்கள் வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன - என்றார் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

யாழ். பல்கலைக்கழகத்தில் கைது செய்யப்பட்ட மாணவர்களுள் நால்வருக்கு புனர்வாழ்வளிக்கவென அரசு மேற்கொள்ளும் நடைமுறைகள் சட்டவிரோதமானவை.

கைதுசெய்யப்பட்ட மாணவர்களின் நலனில் அரசு உண்மையிலேயே அக்கறை கொள்ளுமாயின், அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதை விடுத்து, உடனடியாக அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டமை தவறானது. அவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன், அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறையான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் - குற்றம் நிரூபிக்கப்படாமல் மாணவர்களைப் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்க முடியாது - என்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

**ஹரின் பெர்னாண்டோ**

யாழ். பல்கலைக்கழகத்தில் கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் நால்வருக்கும் புனர்வாழ்வளிப்பதாகக் கூறி அவர்களைப் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைப்பது தவறான செயல். அரசின் இந்த நடவடிக்கையானது ஏன், எதற்கு என்பது புரியாத புதிராகவே உள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களை அச்சுறுத்தி அவர்களது உரிமைகளைப் பறிக்கும் வகையில் அரசு செயற்படுவதை எம்மால் ஏற்க முடியாது.

கடந்த 30 வருட காலம் நாட்டில் இடம்பெற்ற போரின் காரணமாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சில பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறார்கள். எனவே, அவர்களது கல்வி அபிவிருத்தி கருதி அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுதான் தற்போதைய சூழ்நிலையில் அவர்களுக்குத் தேவையானது.

அவர்களிடம் இருக்கும் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடவேண்டும். அதைவிடுத்து கைதுசெய்யப்பட்ட மாணவர்களை அச்சுறுத்தும் வகையிலும், அவர்களது உரிமைகளைப் பறிக்கும் வகையிலும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வது தவறானது.

அதை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது - என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. ஹரின் பெர்னாண்டோ.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வி.பவானந்தன், ஒன்றியத்தின் செயலாளர் ப.தர்சானந், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயந்த், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர் எஸ்.சொலமன் ஆகிய நால்வருமே தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஊருக்கே உபதேசம்... உனக்கில்லை என்ற நிலை தொடர வேண்டாமே...?

துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதிக்கும் சட்டங்கள் பற்றிய விவாதம் சமூகவலைத் தளங்களிலும் அனைத்துலக ஊடகங்களிலும் இடம்பெற்று வரும் வேளையில், மீண்டும் ஒரு தடவை அமெரிக்காவில் பெரும் கொடூர சம்பவம் ஒன்று இடம்பெற்றிருக்கிறது.

பாடசாலைச் சிறுவர்கள் தனிநபரான துப்பாக்கிதாரி ஒருவரின் கண்மூடித்தனமான தாக்குதலில் அநியாயமாக உயிரிழந்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்காவின் கனெக்டிகட் நகரில் உள்ள சாண்டிரைக் ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற இத் தாக்குதலில் 5 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட 20 பச்சிளம் சிறுவர்கள் உட்பட 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா வெற்றி அடைந்து அடுத்த மாதம் இரண்டாவது தவணைக்காகப் பதவி ஏற்க உள்ள வேளையில், அவரை அதிர்ச்சியில் உறையவைத்துள்ள இச்சம்பவம் அனைத்துலக அரங்கில் அமெரிக்காவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவல்லது.

நாளை செவ்வாய்வரை கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறு பராக் ஒபாமா அமெரிக்க மக்களைக் கேட்டுள்ளார். ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகள் இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ- மூனும் இதனை வன்மையாகக் கண்டித்துள்ளார். ஒன்றும் அறியாத அப்பாவிக் குழந்தைகளை இலக்குவைப்பது சிந்திக்க முடியாத பயங்கரமான குற்றம் ஆகும். இது மனிதத்துவத்தை, மனிதாபிமானத்தை மண்ணுக்குள் புதைப்பதாகும்.

1963இல் இடம்பெற்ற ஜோன் எவ்.கென்னடியின் படுகொலையில் இருந்து ஒரு மனநோய் கலாசாரம் அமெரிக்காவில் இருந்து வருகிறது. அதன் தொடர்தான் தற்பொழுது இடம்பெறும் சம்பவங்கள். அமெரிக்காவின் செல்வாக்கு மிக்க ஜனாதிபதிகளில் ஒருவரான ஜோன். எவ். கென்னடியை ஒஸ்வோல்ட் ஏன் சுட்டான் என்பதற்கு 45 வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னும் பதில் இல்லை.

அதேபோன்றுதான் அமெரிக்கப் பாடசாலைகளில் இப்போது நடத்தப்படும் துப்பாக்கிச் சூடுகளுக்கு, இன்னும் காரணம், பின்னணிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. துப்பாக்கிதாரி பாடசாலை வகுப்பறைக்குள் வந்து சரமாரியாகச் சுடுகிறான். பின்பு தானும் தற்கொலை செய்துகொள்கிறான். அல்லது பாதுகாப்புப் படையினரின் பதில் தாக்குதலில் கொல்லப்படுகிறான்.

கடந்த வெள்ளிக்கிழமை சாண்டிரைக் ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்ற சம்பவத்தில் 20 வயது நிரம்பிய ஒரு மர்ம நபர் இரு கைகளிலும் நவீன துப்பாக்கிகளுடன் இரு வகுப்பறைகளுக்குள் நுழைந்து அங்கு இருந்தவர்களை எல்லாம் சுட்டிருக்கிறான். நினைத்துப் பார்க்கமுடியாத மகா பயங்கரமான சம்பவம் இது. பல மைல்கள் தொலைவில் உள்ள ஒவ்வொரு மனிதனினதும் மனதைப் பிழிந்துள்ள மிகப் பயங்கரமான சோகம் பொங்கும் நிகழ்வு அது.

ரஷ்யா, இஸ்ரேல், ஐரோப்பிய நாடுகளில் படுகொலைகள் கடந்த காலங்களில் இடம்பெற்றாலும் பாடசாலைகளில் இடம்பெறும் சூட்டுச் சம்பவங்கள் அமெரிக்காவில்தான் அதிகம். உலகிலே தன்னை ஒரு பெரிய ஜனநாயக நாடு என்று கூறிக்கொள்ளும் அமெரிக்காவுக்கு இது பெரும் சவால். இத்தகைய கொலைகளைத் தடுக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அமெரிக்காவில் இது முதல் சம்பவம் அல்ல.

2005 மார்ச் மாதம் மின்னசோட்டாவில் உள்ள ரெட்லேக் நகரில் 16 வயது மாணவன் ஒருவன் தனது பாட்டனாரையும் மற்றும் ஒருவரையும் வீட்டில் வைத்துச் சுட்டுக் கொன்றபின்னர் பாடசாலைக்குச் சென்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 மாணவர்கள், ஓர் ஆசிரியர் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர்.

2007 பெப்ரவரியில் உதா மாகாணத்தில் உள்ள வணிக வளாகத்தில் 18 வயது மாணவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஐவர் பலியாகினர்.

2007 ஏப்ரலில் வேர்ஜினியாவின் டெக் பல்கலைக்கழக வகுப்பறையில் மாணவன் ஒருவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 32 மாணவர்கள் கொல்லப்பட்டனர். தாக்குதலை நடத்திய மாணவன் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

2007 டிசெம்பரில் ஒமாகா நகரில் உள்ள வணிக வளாகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

2008 பெப்ரவரியில் இல்லினொய்ஸ் பல்கலைக்கழக வகுப்பறையில் முன்னாள் மாணவன் ஒருவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

2009 ஏப்ரலில் பர்மிங்ஹாம் குடியேற்ற கல்வி மையத்தில் வியட்நாமைச் சேர்ந்த ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் பலியாகினர்.

அமெரிக்காவில் இத்தகைய கொடூர சம்பவங்கள் அதிகரிப்பதற்குப் பழிவாங்கும் மனப்பான்மை, போதைவஸ்து, தீவிரவாதக் கலாசாரம், மன அழுத்தம், புத்தி சுவாதீனமற்ற நிலைமை போன்ற காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன. துப்பாக்கிகள் தாராளமாகப் புழக்கத்தில் இருப்பது இக்கொலைகளுக்குத் தூண்டுதலாக அமைந்துவிடுகின்றது.

1996ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனியா மாநிலத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பலர் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் துப்பாக்கி உரிம விதிகளைக் கடுமையாக்கி, அந்நாட்டு அரசு கடுமையான புதிய விதியை நடைமுறையாக்கியது.

அமெரிக்காவில் சிறுவர் மீதான கொலைச் சம்பவங்கள் தொடர்வதால் ஒபாமா நிர்வாகம் இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசர, அதிவேக தேவை எழுந்துள்ளது.

பெரும் வல்லரசு என்ற நிலையில் நின்று, ஏனைய பல நாடுகளின் உள்விவகாரங்களில் மூக்கை நுழைக்கும் அமெரிக்கா, தனது நாட்டுப் பாடசாலைகளில் நடைபெறும் பள்ளிச் சிறார்களின் கொலைகளைத் தடுப்பதில் அக்கறை காட்டாதிருப்பது அதனிடம் ஏதோ ஒரு வகை சார்ந்த பலவீனம் உண்டு என்பதனையே அழுத்தித் தொட்டுக் காட்டுகிறது. இதனை ஒரு வகைச் சாபக்கேடு என்றும் கொள்ளலாம்.

உள்நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் பாராமுகமாக இருக்கும் ஒரு நாடு ஏனைய நாடுகளில் சட்டம், ஒழுங்கு குலைந்திருப்பதாகக் குறைகாண்பதிலும், அவற்றைத் தண்டிக்க வேண்டும் என்று குரலும், பல சந்தர்ப்பங்களில் அழுத்தமும் கொடுக்கும் அமெரிக்கா சிறுவர்களின் கொலைகளை பாரதூரமாகக் கருத, அவற்றை முனைப்புடன் தடுக்க முன்வருவது எப்போதோ? உனக்கில்லையடி கண்ணே, ஊருக்குத்தான் எனது உபதேசம் என்ற நிலை வேண்டாமே...!

## உள்ளூராட்சி சபைகளுக்கு தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.17

பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகர சபைகளில் ஏற்படும் வெற்றிடங்கள் தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பான சுற்றறிக்கை யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ராஜகிரிய சரண மாவத்தை தேர்தல் திணைக்களத்தால் இந்தச் சுற்றறிக்கை தனிச் சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் மேற்படி சுற்றறிக்கைக்கு, பதில் அனுப்பி வைப்பதில் சபைகளின் செயலாளர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச கரும மொழி தொடர்பான நடவடிக்கைகளுக்கு பிரத்தியேகமான ஏற்பாடுகளை மேற்கொண்டு தனி அமைச்சு உருவாக்கப்பட்ட போதும் தொடர்ந்தும் தனிச் சிங்கள மொழியில் சுற்றறிக்கை வந்த வண்ணமே உள்ளது என்று சபைத் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ம-50)

## கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு நாடளாவிய ரீதியில் 144 பேர் தெரிவு

அச்சுவேலி, டிசெ. 17

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் 144 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறந்த நிலை, மட்டுப்படுத்தப்பட்ட நிலை, இலங்கை அதிபர் சேவை தரம் I இல் இருந்து சேவை மூப்பு திறமை அடிப்படையில் ஆள் தெரிவு செய்யப்பட்டு இலங்கை கல்விச் சேவை தரம் III இல் உள்ளீர்ப்புச் செய்யப்படுகின்றனர்.

கடந்த வருடம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் ஆள் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு உயர்புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சை இந்த வருடம் முற்பகுதியில் நடைபெற்றது.

சட்ட ரீதியிலான மேன்முறையீடுகள் செய்யப்பட்டிருந்தமையால் தெரிவு தொடர்பான இறுதிப் பட்டியல் வெளியிடுவதில் தாமதங்கள் ஏற்பட்டு வந்தன.

கடந்த வியாழக்கிழமை தெரிவு செய்யப்பட்டவர்களின் இறுதிப்பட்டியல் வெளியாகியுள்ளது. நாடளாவிய ரீதியில் 144 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் தமிழர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைவாக உள்ளது.

இந்த வருடம் இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆளணியில் 410 பேரை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டு தெரிவுகள் நடைபெற்றன.

திறந்த நிலையில் 102 பேரை தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 42 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை அதிபர் சேவையில் இருந்து திறமை, சேவை மூப்பு அடிப்படையில் 123 பேரை தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 115 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் 185 பேரை தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 144 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உரிய ஆளணி எண்ணிக்கைக்கு உரியவர்களை தெரிவு செய்வதற்கு உரிய பரீட்சையில் தேவையான வெட்டுப்புள்ளியை பெற்றுக் கொள்ளாமையே காரணம் எனக் கூறப்படுகின்றது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் தெரிவு செய்யப்படவுள்ள ஆளணியில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் 45 வீதத்தினரும் அதிபர் சேவையில் இருந்து 30 வீதத்தினரும் திறந்த நிலையில் 25 வீதத்தினரும் தெரிவு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (ம-11)

## மாற்றுத் திறனாளிகள் தெற்கு சென்றனர்

வலி.வடக்கு, டிசெ. 17

இளைஞர் பரிமாற்ற வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட மாற்றுத் திறன் கொண்ட இளைஞர், யுவதிகள் 45 பேர் கடந்த வாரம் தென்னிலங்கை சென்று வந்துள்ளனர்.

ஐந்து நாள்களைக் கொண்ட இந்தப் பரிமாற்ற வேலைத் திட்டத்தில் யாழ்.மாவட்ட செவிப்புலன் அற்றோர் சங்க உறுப்பினர்கள், விழிப்புலன் அற்றோர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இவர்கள் மொனராகலையில் இடம்பெற்ற இளைஞர் பரிமாற்றத் திட்ட முகாமில் கலந்து கொண்டனர். மொனராகலையைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் 40 பேரும் இதில் கலந்து கொண்டனர்.

இங்கிருந்து சென்றோருக்குப் பொறுப்பாக நல்லூர், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த இளைஞர் சேவைமன்ற அலுவலர்களான ஆர்.யுவராஜ், எஸ்.சபேசன் ஆகியோர் சென்றிருந்தனர். (ம-86)

## நகரில் நிறுத்தியிருந்த லொறியில் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்.பஸ் நிலையம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் கதவுகளைத் திறந்து அதனுள் இருந்து 73 ஆயிரத்து 778 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்பகுதியில் இருந்து வந்து நகரில் வங்கி ஒன்றுக்கு அருகே லொறியை நிறுத்தி வைத்து விட்டுச் சென்றிருந்தனர். திரும்பி வந்து பார்த்த போதே லொறியிலிருந்த பொருள்கள் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது என்று முறையிடப்பட்டுள்ளது.

இதுதவிர தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்துக்கு வந்து தங்கியிருக்கும் தென்பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு அடித்து காயம் விளைவிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார். (ம-4)

## கைதிகள் உடைக்கு தட்டுப்பாடு

கொழும்பு, டிசெ. 17

சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் சிறைச்சாலை உடைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக பெரும்பாலான சிறைக் கைதிகளுக்கு அவர்கள் சிறைப்படுத்தப்படும் போது அணிந்திருந்த உடையுடனேயே இருக்க வேண்டி நேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் அணிவதற்கு வழங்கப்படும் சதுரக் கோடுகளுடனான துணியில் தைக்கப்பட்டுள்ள சாரத்துக்குப் பதிலாக சில சிறைக் கைதிகள் கட்டில் விரிப்புக்களைப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இவ்விதம், சிறைச்சாலை உடைகள் மாத்திரமல்லாது, சிறைக் கைதிகளுக்கான உணவுத்தட்டு, குவளை, தலையணை, பாய், துவாய், சவர்க்காரம் மற்றும் தேங்காய் எண்ணெய் கூட முறையாகக் கிடைப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

இதனால் அவர்கள் கடும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-22)

## 105 தேசிய பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வடமராட்சி, டிசெ. 17

நாட்டிலுள்ள 105 தேசிய பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்காக அரச சேவை ஆணைக்குழுச் சபையால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் வவுனியா இறம்பைக்குளம் மத்திய மகாவித்தியாலயம், மன்னார் புனித சேவியர் மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கும் கிழக்கு மாகாணத்தில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை, கல்முனை கார்மேல் பாத்திமா மத்திய மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை, பதியத்தலாவ தேசிய பாடசாலை, கந்தளாய் அக்ரபோதி தேசிய பாடசாலை, திருகோணமலை புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை புனித ஜோசப் கல்லூரி, திருகோணமலை ராஜகீய வித்யா லோக தேசிய பாடசாலை, மூதூர் மத்திய மகா வித்தியாலயம், கிண்ணியா மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கான பொதுத் தகைமைகளைக் கொண்டோர் எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கல்வியமைச்சு, இசுருபாய பத்தரமுல்லை என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-8)

## அமைச்சரவைக் கூட்டங்கள் இனி வியாழக்கிழமைகளில்

அடுத்த ஆண்டிலிருந்து அமைச்சரவைக் கூட்டங்களை ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் முற்பகல் வேளையில் நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

புதன்கிழமைகளில் அமைச்சர்கள் தத்தமது அமைச்சுக்களில் பொதுமக்களுடனான சந்திப்புக்களை மேற்கொள்வதால் அவர்களது வசதி கருதி ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

புதன்கிழமைகளில் மக்கள் சந்திப்புக்களை நடத்தி பிற்பகல் வேளையில் அமைச்சரவைக் கூட்டங்களுக்குச் சமுகமளிப்பதானது சிரமத்துக்குரியது என அமைச்சர்கள் பலராலும் அமைச்சரவைக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

அது தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபாலகத்தை சீராக இயக்கக் கோரிக்கை

அக்கராயன், டிசெ.17

ஜெயபுரம் உப தபாலகத்துக்கு என நிரந்தர கட்டடம் ஒன்றை அமைத்து தபாலகத்தைச் சீராக இயங்கச் செய்யுமாறு அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது உப தபாலகம் தற்காலிக இடம் ஒன்றில் வசதிகளின்றி இயங்கிவருகின்றது. ஜெயபுரம் உப தபாலகத்துக்கு என காணி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அதில் நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்து தபாலகப் பணிகளை விஸ்தரிக்குமாறும் அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-18)

## விழிப்புணர்வு நிகழ்வு நாளை

முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு முன்பிள்ளைப் பருவம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கரைச்சிப் பிரதேச சபையில் நாளை நடைபெறவுள்ளது. இதில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பங்கேற்கவுள்ளார்.

நிகழ்வுநண்பகல் 12.30 மணியில் இருந்து பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது. (ஐ)

## மணல் அகழ்வால் வீதி கடும் சேதம்

அக்கராயன், டிசெ.17

துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள அம்பலப்பெருமாள் குளத்தின் மேட்டு நிலப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழும் நடவடிக்கை காரணமாக அந்த வீதி சேறும் சகதியுமாக மாறியுள்ளது. இதனால் அந்த வீதியூடாக பயணிக்கும் மக்கள் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் மணல் ஏற்றுவதற்காக வந்து செல்கின்றன. இதனால் வீதி இரண்டடி ஆழத்துக்குக் கீழ் இறங்கி சேறும் சகதியுமாக மாறியுள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கவனம் செலுத்தி வீதியை திருத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)

## முல்லைத்தீவில் சுகாதார வாரம்

முல்லைத்தீவு, டிசெ.17

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதார விழிப்புணர்வூட்டல் கருத்தரங்குகளும் சிரமதானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்று மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கலைச்செல்வன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இதன்படி ஒட்டுசுட்டான் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான விழிப்புணர்வுக் கருத்தூட்டல் நிகழ்வு நடைபெற்றது. பிரதேச ரீதியாக சுற்றுப்புறச் சூழல் துப்புரவு, வர்த்தக நிலையத் துப்புரவு, நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிதல் போன்ற செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-500)



நெடுங்கேணி பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்காக குழாய் பொருத்த அமைக்கப்பட்ட கால்வாய்களில் கழிவுப்பொருள்கள் தேங்கி அசுத்தமாகக் காணப்படுகின்றன. (ஐ-135)

# வன்னேரி-பல்லவராயன் வீதி புனரமைப்பது எப்போது?

### நீண்ட காலக் கோரிக்கை உதாசீனம்

**புதிதாக வரும் கனரக வாகனங்கள் இந்த இடங்களில் புதைந்து விடுவதால் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்படுகிறது. மழை கூடுதலாகப் பெய்தால் பஸ் போக்குவரத்தும் தடைப்படுகிறது.**

அக்கராயன், டிசெ.17

அக்கராயனிலிருந்து வன்னேரிக்குளம் பல்லவராயன் வரையான 20 கிலோமீற்றர் வீதி, நீண்டகாலமாகத் திருத்தப்படாமையால் மக்கள் போக்குவரத்துக்கு சீரில்லாத நிலையில் காணப்படுகிறது. குறித்த வீதியைத் திருத்தித் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தப் பயனும் கிடைக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் இந்த வீதியைத் திருத்தித் தரும்படி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு முதற்கட்டமாக தற்காலிகமாக புனரமைப்பதான உறுதியளிக்கப்பட்டும் இதுவரை அந்தப் பணி நடைபெறவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருட மாரிகாலத்தில் இந்த வீதியில் ஏற்பட்ட குழிகள் தற்போது பெய்த மழையால் குளம் போல காட்சியளிக்கின்றன. குறிப்பாக ஆனைவிழுந்தான், வன்னேரி, ஐந்துகண்மதகுப் பகுதிகளில் பெரும் குழிகள் காணப்படுகின்றன.

புதிதாக வரும் கனரக வாகனங்கள் இந்த இடங்களில் புதைந்து விடுவதால் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்படுகிறது.

மழை கூடுதலாகப் பெய்யும் பட்சத்தில் பஸ் போக்குவரத்தும் தடைப்படுகிறது.

இது தவிர முழங்காவிலில் இருந்து கிளிநொச்சிக்கு அவசர நோயாளர்களை இடமாற்றுவதிலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு இந்த வீதியை உடனடியாகப் புனரமைத்துத் தரும்படி அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)

## மாற்றுவலுவுடையோருக்கு உதவுவது குறித்து வவுனியாவில் செயலமர்வு

மாற்று வலுவுடையோர் தொடர்பிலும் அவர்களுக்கு உதவுவது தொடர்பிலும் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

இதில் வவுனியா, மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர். வைன்ட்கார்ட் இன்ரர்நெஷனல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மாற்று வலுவுடையோர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அவர்களை சமூகத்துடன் ஒருங்கிணைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அவர்களை சமூகத்துடன் இணைத்து சமஉரிமை வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

மாற்று வலுவுடையோரின் செயற்திறன்களை வெளிப்படுத்துவது ஊடகங்களின் பொறுப்பு என இதன் போது வலியுறுத்தப்பட்டது. (ஐ)

## மழையின்மையால் பயிர்கள் அழிவு

முல்லைத்தீவு, டிசெ. 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட காலபோக மானாவாரிச் செய்கை மழையின்மையால் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. இதேவேளை நெல், உழுந்து, பயறு, கௌபி போன்ற பயிர்களும் மழையின்மையால் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இந்த முறை சோளமும் அதிகமாகப் பயிரிடப்பட்டுள்ள நிலையில் மழை சீரின்மையால் பயிர்கள் அழிவடைந்து வருகின்றன. (ஐ-500)

## போக்குவரத்து நெருக்கடி தீர்க்க 2 பஸ்கள் சேவைக்கு

### துணுக்காயில் ஜனவரியில் ஆரம்பமாகும் என்கிறார் பிரதேச செயலர்

**தனியார் பஸ் ஒன்று துணுக்காயில் இருந்து ஐயங்கன் குளம்–புத்துவெட்டுவான், திருமுறிகண்டி, வட்டக்கச்சி ஊடாக புதுக்குடியிருப்பு செல்லும்.**

அக்கராயன், டிசெ.17

துணுக்காய் பிரதேசத்தில் நிலவும் போக்குவரத்து நெருக்கடிகளை சீர் செய்யும் முகமாக ஜனவரி மாதத்தில் இருந்து அரச மற்றும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு அரச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்;

இதன்படி அரச பஸ் ஒன்று காலை 6.30 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து புறப்பட்டு ஒட்டுசுட்டான் மாங்குளம் வழியாக துணுக்காயை வந்தடையும். இந்த பஸ் மீண்டும் துணுக்காயில் இருந்து மு.ப.10.30 மணிக்குப் புறப்படும்.

இதேவேளை தனியார் பஸ் ஒன்று துணுக்காயில் இருந்து ஐயங்கன் குளம்-புத்துவெட்டுவான், திருமுறிகண்டி, வட்டக் கச்சி ஊடாக புதுக்குடியிருப்பு செல்லும் எனவும் அவர் தெரிவித்தார். இத்துடன் உள்ளூரில் போக்குவரத்து சேவையில் இடம்பெற தனியார் ஒருவரிடமிருந்து அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நீண்ட நாளாக பொது மக்கள் விடுத்த கோரிக்கைகளை அடுத்தே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ஐ-18)

## முல்லை மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி, வியாபாரம் மும்முரம்

### முழுக் குடும்பமே ஈடுபடும் நிலை

முல்லைத்தீவு, டிசெ.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதால் சமூகச் சீர்கேடுகள் தலைதூக்கி வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முல்லை மாவட்டத்தில் குறிப்பாக மீள்குடியமர்த்தப்பட்ட கிராமங்களில் கசிப்பு உற்பத்தியில் அதிகமானவர்கள் ஈடுபடுகின்றனர். கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தபோதும் கசிப்பு உற்பத்தியைக் கைவிடவில்லை. வயது வேறுபாடின்றி கசிப்புக்கு அடிமையாவதால், குடும்பம் சீரழிதல், சண்டை, கொலை, குடும்பப் பிரிவு போன்ற சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.

சிலர் கசிப்பு உற்பத்தியை வீட்டுக்குவீடு ஒரு தொழிலாகக் கொண்டு செயற்படுகிறார்கள். அத்துடன் காடுகளில் கசிப்பைத் தயாரித்து தமது மனைவி பிள்ளைகளை வியாபாரத்திலும் ஈடுபடுத்துகின்றனர்.

முத்துஐயன்கட்டு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி போன்ற பல கிராமங்களில் கசிப்பு உற்பத்தி அமோகமாக நடைபெறுகிறது. பொலிஸாரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டோ அல்லது அவர்களின் அனுசரணையுடனோ இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த பொலிஸார் தீவிரமாகச் செயற்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-500)

### தேவன்குளத்தின் கீழ் வரும் 526 ஏக்கர் கொண்ட

## வயல் நிலத்தைப் பிரித்துத் தருமாறு கோருகின்றனர் ஜெயபுரம் மக்கள்

**வன்னேரிக் குளத்தையும் தேவன் குளத்தையும் இணைத்து நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தினால் இந்தக் குளத்தின் கீழுள்ள வயல்காணிகளை விஸ்திரிப்பதன் மூலம் வயல் காணி அற்றோருக்கு காணி வழங்க முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

அக்கராயன், டிசெ.17

ஜெயபுரம் கிராம மக்கள் தமக்கு வயல் நிலம் அமைத்துத் தருமாறு கிளிநொச்சி அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். தேவன்குளம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவடைந்துள்ளதால் அந்தக் குளத்தின் கீழுள்ள 526 ஏக்கர் நிலத்தைத் தமக்கு பகிர்ந்து தருமாறும் அவர்கள் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

1980களில் தேவன்குளம் புதிதாக அமைக்கப்பட்டது. எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டதோடு, அதன் கீழுள்ள வயல் காணியும் செய்கை பண்ணப்படாது மந்துக் காடாக மாறியது.

இந்த நிலையில் இந்தக் குளத்தை மீளமைத்து அதன் கீழுள்ள காணிகளைப் பிரித்து வழங்குமாறு ஜெயபுரம் மக்கள் கோரியுள்ளனர். இதேவேளை, வன்னேரிக் குளத்தையும் தேவன்குளத்தையும் இணைத்து நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தினால் இந்தக் குளத்தின் கீழுள்ள வயல்காணிகளை விஸ்தரிப்பதன் மூலம் வயல் காணி அற்றோருக்கு காணி வழங்க முடியும் எனவும் ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர். (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து விதிமுறைகளை மாணவருக்குத் தெரியப்படுத்துக

## பாடசாலை காலைப் பிரார்த்தனையின்போது முன்னெடுக்குமாறு அதிபர்களைக் கோருகிறார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், டிசெ.17
பாடசாலை மாணவர்களுக்கு தினமும் இடம்பெறும் காலைப் பிரார்த்தனையின் போது போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பில் எடுத்துக் கூற வேண்டும்.

வீதி விழிப்புணர்வு பற்றிய எதிர்கால நலன்கருதி பாடசாலை அதிபர்கள் இதனை முன்னெடுக்க வேண்டும் என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்ட பல்வேறு தரப்பினருக்கும் விழிப்புணர்வு பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு விரிவுபடுத்தப்பட வேண்டும். மாணவர்கள் நடந்தும், சைக்கிள்களிலும் பெற்றோர், உறவினர்களுடன் மோட்டார் சைக்கிள்களிலும் பாடசாலை சென்று வருகின்றனர்.

குறிப்பாக நடந்து அல்லது சைக்கிள்களில் பயணம் செய்யும் மாணவர்களுக்குப் போக்குவரத்து விதிமுறைகள் அவசியமாகத் தேவைப் படுகிறது.

வாகன நெரிசல் அதிகரித்துள்ள தற்காலத்தில் போக்குவரத்து விதிமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்பட வேண்டிய கட்டாயத் தேவைகள் அதிகரித்துள்ளன.

வீதி விபத்துகளில் இருந்து மாணவர்கள் தம்மைப் பாதுகாக்க விதிமுறைகள் பெரிதும் உதவுகிறது. எனவே வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் பாடசாலை அதிபர்கள் தமது மாணவர்களுக்குத் தினமும் காலைப் பிரார்த்தனையின் போது எடுத்துக் கூற வேண்டும். இது சமூகப் பொறுப்புடைய செயற்பாடாகும்.

வாகனங்களைச் செலுத்துவோர் வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் முழுமையான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். வாகன சாரதிகளாகப் பயிற்சி பெறுபவர்களுக்கு உரிய முறையில் விதிமுறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## சனசமூக நிலையங்கள் முன்னேற்ற விவரங்களை உரிய காலத்தில் சமர்ப்பிக்குக

யாழ்ப்பாணம், டிசெ.17
2013 இல் வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களும் உரிய காலத்தில் பொதுக் கூட்டங்களை நடத்தி முன்னேற்ற விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

பொதுக் கூட்டம் இடம்பெறும் போது பிரதேச சபை செயலாளர், சனசமூக அபிவிருத்தி அலுவலர், பொறுப்பதிகாரிகளுக்கு அறிவித்தே செயற்படுத்த வேண்டும்.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரி ரி.எஸ்.பகீதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வருடாந்த பொதுக் கூட்டம் 2013 சனசமூக நிலையங்கள் எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள் பொதுக் கூட்டங்களின் அறிக்கை பிரதிகளை உரிய காலத்தில் சபையில் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

நிர்வாக சபைக் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒரு முறையேனும் நடத்துவதுடன் அந்தக் கூட்டங்களில் முன்னைய காலாண்டு செயற்பாடுகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்ய வேண்டும்.

அத்துடன் அடுத்து வரும் காலாண்டுக்கான செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன அறிக்கைகளையும் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கவேண்டும் என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-50)

### பயிர்ச்செய்கை குறித்து விவசாயிகளுடன் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ.17
நெடுந்தீவில் அடுத்த ஆண்டில் செய்கை பண்ணக்கூடிய பயிர்ச்செய்கைகள் குறித்து யாழ். விவசாயத் திணைக்கள அதிகாரிகள் விவசாயிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

விவசாயிகளுக்கு எள்ளு வழங்கப்படும் என அதன் போது தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டில் தோட்டச்செய்கைகளை மேற்கொள்வது குறித்தும் சவுக்கு மரம் நடுதல் குறித்தும் தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு பசளை மருந்துகள் வழங்கப்பட்டன. மானிய அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரம், சோலர் என்பனவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது. (ம-7)

### சண்டிலிப்பாய் கிராம சேவகர்கள் ஜனவரியில் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.17
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து கிராம சேவையாளர்களும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

25 பிரிவுகளுள் உட்பட்ட அனைத்து கிராம சேவையாளரும் உள்ளக ரீதியாக இடமாற்றம் செய்யப்படுவர் என்று பிரதேச செயலர் க.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட அரச அதிபரின் பணிப்புரைக்கு அமையவே இந்த இடமாற்றம் நடைமுறைக்கு கொண்டு வரப்படுகின்றது.

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் கிராம சேவையாளர் இடமாற்றம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



கொழும்புத்துறை துண்டி வீதியின் புனரமைப்புப் பணிகள் 20 வருடங்களின் பின்னர் மேற்கொள்ளப்படுகின்றன. துண்டிச் சந்தியில் இருந்து பாஷையூர் வரையிலான கடற்கரை வீதிகளை 'கார்பெற்' வீதியாக அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ம 135)

## தொழில் திணைக்கள மிகுதி கட்டடப் பணிகள் ஏப்ரலில்

யாழ்ப்பாணம், டிசெ.17
யாழ்.மாவட்டத் தொழில் திணைக்களக் கட்டடத்தின் ஏனைய இரண்டு மாடித் தொகுதிகளுக்குமான கட்டுமானப் பணிகள் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்ணையில் அமைந்துள்ள இந்தக் கட்டடத்தின் முதல் மாடி வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

மூன்றுமாடிகளைக்கொண்டு அமையவுள்ள இந்தக் கட்டடத்தின் ஏனைய இரண்டு மாடித் தொகுதிகளது பணிகள் ஏப்ரலில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கூறப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் தொழில் திணைக்களத்துக்கான கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன என்று வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார். (ம-17)

## கிராம சேவகர்களிடையேயான போட்டிகளில் வென்றோர்

வடமராட்சி,டிசெ.17
பருத்தித்துறை - வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவுகளிலும், மருதங்கேணி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளிடையே நடத்தப்பட்ட சிறந்த முகாமைத்துவ கிராமசேவையாளருக்கான போட்டியில் வெற்றி பெற்றவர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களை பருத்தித்துறை பிரிவில் புலோலி கிழக்கு கிராமசேவையாளர் கே.கந்தசாமி, அல்வாய் மேற்கு கிராமசேவையாளர் தி.ரங்கநாதன், புலோலி தென்மேற்கு கிராமசேவையாளர் த.வதனரூபன் ஆகியோரும்

மருதங்கேணிப் பிரிவில் குடத்தனை கிராம சேவையாளர் அ.விமலேசன், அம்பன் கிராம சேவையாளர் எஸ்.வித்தியாபதி, குடத்தனை வடக்கு கிராம சேவையாளர் [illegible] ஆகியோரும் பெற்றுள்ளனர். (ம-8)

### வீதி திருத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.17
பலாலி வீதியில் ஆஸ்பத்திரிச் சந்தியில் இருந்து ஆரியகுளம் சந்தி வரையான வீதி துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட இந்த வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருவதால் போக்குவரத்துச் சிரமம் குறைவடையும் என்று பயணிகள் கூறினர்.

இதேவேளை வீதியின் அருகில் உள்ள வடிகாலும் புனரமைக்கப்பட்டு வருகிறது. (ம-17)

### இந்திய வீட்டுத் திட்ட குளறுபடியை ஆராயக் குழு

யாழ்ப்பாணம்,டிசெ.17
நெடுந்தீவில் இந்திய வீடமைப்புத் திட்டத்துக்குப் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் குளறுபடிகள் நிலவுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நேரடியாக பரிசீலனை செய்வதற்கு இது தொடர்பான குழு ஒன்று இன்று நெடுந்தீவு செல்லவுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து அதனைச் சீரமைத்து வீட்டுத் திட்டம் உரிய பயனாளிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ம-7)

## மருதங்கேணி ப.நோ.கூ. சங்கத்தை மக்களிடம் ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.17
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபையைக் கூட்டி சங்கத்தை மக்கள் கையில் ஒப்படைக்குமாறு வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் கடந்த 2003 ஆம் ஆண்டின் பின்னர் நடைபெறவில்லை. அப்போதிருந்த இயக்குநர் சபைக்குப் பின்னர் இயக்குநர் சபைத் தெரிவும் நடைபெறவில்லை.

2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இயக்குநர் சபையால் இச்சங்கம் நிர்வகிக்கப்பட்ட போது இலாபகரமாக இயங்கியது. அத்துடன் பல்வேறு சேவைகளையும் இப் பிரதேச மக்களுக்கு வழங்கி வந்தது.

பொதுமக்களின் போக்குவரத்து வசதி கருதி ஆழியவளையில் இருந்து பருத்தித்துறை ஊடாக யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவையும் நடத்தி வந்தது. தற்போது இவ்வாறான சேவைகள் எதுவும் இல்லை.

இந்தச் சங்கம் தற்போது பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழேயே இயங்கி வருகிறது. எனினும் தொடர்ந்து நஷ்டத்திலேயே இயங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் இந்தச் சங்கம் மக்களுக்குப் பல்வேறு சேவைகளை வழங்க வேண்டும். இல்லையேல் இந்தச் சங்கத்தினால் மக்களுக்கு எந்தவித பயன்களும் இல்லை.

ஆகையால் சங்கத்தின் பொதுச் சபையைக் கூட்டி கிளைக்குழுத் தேர்தலை நடத்தி சங்கத்துக்கான இயக்குநர் சபையை மக்களிடமிருந்தே உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்படும் நிர்வாகத்தாலேயே சங்கத்தைத் திறம்பட இயங்கவைக்க வேண்டும். மக்களுக்குத் தேவையான சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்தச் சங்கத்துக்கான பொதுச் சபையை விரைவில் கூட்டி தேர்தலை நடத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை தாமதமின்றி எடுப்பார்களா என இந்தப் பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ம-8)

## இந்திய வீட்டுத்திட்ட நிபந்தனை ஒப்பந்தம்

### கொடுப்பனவு நான்கு கட்டங்களில்

யாழ்ப்பாணம்,டிசெ.17
இந்திய அரசின் வீட்டுத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீடு அமைப்பது தொடர்பான நிபந்தனை ஒப்பந்தங்கள் கிராம அலுவலர் பிரிவுகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீடமைப்பு நிபந்தனையை ஏற்றுக்கொண்டதில் இருந்து எட்டுமாத கால எல்லையில் வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டும்.

பயனாளிகள் 550 சதுர அடி அளவுக்கு மேற்படாத விஸ்தீரணம் கொண்ட வீட்டை நிர்மாணிக்க வேண்டும். வீட்டுக்கான கொடுப்பனவு நான்கு கட்டங்களாக பயனாளியின் வங்கிக் கணக்கு ஊடாக வழங்கப்படவுள்ளது. மொத்தம் ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.


வீடமைப்புத் தொடர்பான மாதிரி வரைபடம் மற்றும் மேற்பார்வை என்பன சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

வீடமைப்புத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளத் தவறிய பயனாளிகளுக்கான மேன்முறையீட்டு விசாரணை பிரதேச செயலக ரீதியாக நடைபெற்று தகுதியானவர் வீடமைப்புத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பயங்கரவாத தடை' சட்ட திருத்தத்தை எம்.பிக்கள் நிராகரிக்க வேண்டும்

## மனித உரிமைக் கண்காணிப்பகம் கோரிக்கை




நியூயோர்க், டிசெ.17

இந்தியாவில் நடைமுறையில் உள்ள சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் அமைப்பான மனித உரிமை கண்காணிப்பகம் கோரியுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமாகப் பயன்படுத்தப்படும் மேற்படி சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர நாடாளுமன்ற மக்களவை கடந்த 30 ஆம் திகதியே ஒப்புதல் அளித்துள்ளது.

தீவிரவாத அமைப்பு ஒன்றைத் தடை செய்யும் காலப் பகுதியை இரண்டு ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாக அதிகரிக்கவும் தீவிரவாத அமைப்புடன்தொடர்புடைய நபர்என்ற வரையறையை விரிவாக்கவும் குறித்த சட்டத் திருத்தம் வழிகோலியுள்ளது.

மேற்படி சட்டத் திருத்தம் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தின் மேலவையில் வாக்கெடுப்பு நடக்வுள்ள நிலையில் குறித்த அமைப்பின் கோரிக்கை வெளிவந்துள்ளது.

இதுகுறித்து மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான இயக்குநர் மீனாக்ஷி கங்குலி தெரிவித்ததாவது:-

இந்தியாவில் தடா,. பொடா போன்ற பல பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்கள் இருந்தன. அவை தற்போது இல்லை என்றாலும், 2008 ஆம் ஆண்டு மும்பைத் தாக்குதல் உள்ளிட்ட பல தொடர் தாக்குதல்களுக்குப் பின்னர் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

தற்போது மேலும் சில மாற்றங்கள் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் இதுபோன்ற சட்டங்கள் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யப் பட்டுள்ளதை நாம் காண்கிறோம். அதிலும் குறிப்பாக இஸ்லாமியர்கள், தலித்துகள், பழங்குடியினர் இதுபோன்ற கடுமையான சட்டங்களால் அதிகம் பாதிப்புக்குள்ளாகின் றனர். நிரபராதிகள் கூட பல காலம் சிறையில் இருக்க நேர்கிறது.

இதுபோன்ற சட்டங்கள் அரசை விமர்சிப்போரை மௌனிக்கச் செய்யும் ஆயுதமாகவும் பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளது. அதேபோல பயங்கரவாத அமைப்புக்களில் நேரடியாக உறுப்பினர்களாக இல்லாதவர்களைக் கூட புதிய திருத்தங்கள் காரணமாகக் கைது செய்யும் வாய்ப்புள்ளது. தீவிரவாதத்தால் கடுமையாகப் பாதிக்கப்படும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆனால் இதுபோன்ற சட்டங்களால் தீவிரவாதத்தைத் தடுக்க முடியாது.

தீவிரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றவுடனேயே பொலிஸ்துறை மீது சம்பந்தப்பட்டோர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. அதன் காரணமாக அவர்கள் கைதுகளை மேற்கொள்கின்றனர். உதாரணத்துக்கு, மகாராஷ்டிராவில் நடைபெற்ற ஒரு குண்டு வெடிப்புக்குப் பின் முஸ்லிம்கள் கைது செய்யப் பட்டனர், ஆனால் பின்னர் விசாரணையில் அந்தக் குண்டுவெடிப்பை செய்தது இந்துக்கள் என்று தெரிய வந்தது -என்றார்.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை விட கடுமையான சட்டங்கள் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# எதிர்மறை சிந்தனைகளால் பொருளாதார வளர்ச்சி பாதிப்பு

## பிரதமர் கவலை



டில்லி, டிசெ.17

எதிர்மறையான சிந்தனைகளால் நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் கவலை தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பு கருத்தரங்கில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பணவீக்க வீதம் பெருமளவில் உயர்ந்து விட்டது. இதனை 5 அல்லது 6 சதவீதமாகக் குறைக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8 விழுக்காடு என்ற அளவில் உள்ளது. தேசிய, மாநில ரீதியில் வளர்ச்சிக்காகக் பாடுபட வேண்டும்.

பொருளாதார சீர்திருத்தத்துக்காக எடுக்கப்பட்ட சில முடிவுகளில், அரசியல் ரீதியாக சிக்கல் இருந்தது. அந்த முடிவுகளை எதிர்ப்பவர்கள், நடைமுறைக்கு ஒத்துவராத பழைய சிந்தாந்தத்தைப் பின்பற்றுபவர்கள். சர்வதேச ரீதியில் 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை இந்தியா சமாளித்து விட்டது - என்றார். (வ)

# சத்தீஸ்கரில் மோதல்

## நக்சலைட்டுகள் 8பேர் சாவு


சத்தீஸ்கர், டிசெ.17

சத்தீஸ்கர் மாநிலத்தில் பொலிஸாருடன் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்ற மோதலில் 8 நக்ச லைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 9 பேர் உயிருடன் பிடிபட்டனர்.

காங்கேர் மாவட்டம், பாண்டே காட்டுப்பகுதியில் மாவட்ட பொலிஸாரும், சிறப்பு அதிரடிப்படையினரும் கடந்த இரு நாள்களாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் கொங்கே மற்றும் தாங்குட் கிராமங்களுக்கு இடையிலான பகுதியைக் கடந்த வெள்ளிக்கிழமை எட்டிய போது அவர்கள் மீது நக்சலைட்டுகள் தாக்குதல் நடத்தினர்.

பதிலுக்கு படையினர் சுட்டதில் 8 நக்சலைட்டுகள் உயிரிழந்தனர் என்றும் 9 பேர் உயிருடன் பிடிபட்டனர் என்றும் காங்கேர் பொலிஸ் கண் காணிப்பாளர் ராகுல் பகத் தெரிவித்தார். குறித்த மோதலில் பொலிஸார் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். . (வ)

# பால்தாக்கரேயின் தற்காலிக தகனமேடையை அகற்ற முடிவு



மும்பை, டிசெ.17

மும்பையில் உள்ள சிவாஜி பூங்காவிலிருந்து பால்தாக்கரேயின் தற்காலிக மேடையை அகற்ற சிவசேனா ஒப்புக் கொண்டுள்ளது.

சிவசேனா தலைவர் பால் தாக்கரே கடந்த மாதம் 17ஆம் திகதி காலமானார். மும்பையில் உள்ள சிவாஜி பூங்காவில் அவரது உடலுக்கு இறுதி மரியாதை இடம்பெற்றது. இதற்காக தற்காலிக தகன மேடை அமைக்கப்பட்டிருந்தது.

இறுதிச் சடங்குகள் முடிந்ததும் இந்த தற்காலிக மேடையை அகற்ற சிவசேனா மறுத்துவிட்டது. தற்காலிக மேடையை சமாதியாகக் கருதி தினந் தோறும் ஏராளமான சிவசேனா தொண்டர்கள் அஞ்சலி செலுத்தி வந்தனர்.

சமாதியைச் சுற்றி சிவசேனா தொண்டர்கள் 24 மணி நேரமும் பாதுகாப்புக்கு நின்றிருந்தனர். இதனால் மும்பை மாநகராட்சி அதிகாரிகளால் தற்காலிக மேடையை அகற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

இதற்கிடையில் குறித்த மேடையை அகற்ற 12 ஆம் திகதி வரை கெடு விதிக்கப்பட்டிருந்தது. அந்தக் கெடு கடந்த புதன்கிழமையுடன் முடிவுக்கு வந்ததனால் எந்தநேரமும் பொலிஸ் துணையுடன் பால்தாக்கரே சமாதி மேடை வேறு இடத்துக்கு மாற்றப்படலாம் என தகவல் பரவியது.

இந்தநிலையில் சிவாஜி பூங்காவிலிருந்து வேறு இடத்துக்கு மாற்ற சிவசேனா ஒப்புக் கொண்டுள்ளது.



டில்லிக்குச் சென்றுள்ள பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜை சந்தித்துப் பேசினார்.

# ஏழுமலையானைத் தரிசிப்போரைக் கணக்கிட விரைவில் நவீன இயந்திரம்

திருப்பதியில் ஏழுமலையான் கோயிலில் தினந் தோறும் வரும் பக்தர்களைக் கணக்கிட நவீன இயந்திரம் பொருத்தப்படவுள்ளது.

ஏற்கனவே கோயிலில் பக்தர்களைக் கண்காணிக்க கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில், கோயி லுக்கு வரும் பக்தர்களை கணக்கிட நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய இயந்திரம் பொருத்தப்படவுள் ளது.

பக்தர்களின் வருகையை அதிகாரிகள் தவறுதலாகக் குறிப்பிடுவதாகவும் இதனால் பல்வேறு நடை முறை சிக்கல்கள் ஏற்படு வதாகவும் இதனைத் தவிர்க்கவே இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தேவஸ்தான அதிகாரி எல்.வி. சுப்பிரமணியம் தெரிவித்தார். (வ)

# மதுரை ஆதீனத்தை அரசு ஏற்க தடை கோரிய மனு நிராகரிப்பு

மதுரை, டிசெ.17

மதுரை ஆதீனம் மடத்தை அரசே ஏற்க உத்தரவிடக் கோரிய வழக்குக்கு தடை கோரிய ஆதீனத்தின் இடைக் கால மனு, நித்தியானந்தாவின் மனு ஆகியவற்றை மதுரை நீதி மன்றம் நிராகரித்தது.

அறநிலையத்துறைஆணையாளர் தாக்கல் செய்த மனுவில் ''அருண கிரிநாதர், இளைய ஆதீன மாக நித்தியானந்தாவை நியமித்தார். அறக்கட்டளை ஆரம்பித்தார். இவை முறைப் படி நடைபெறவில்லை.

ஆதீன சொத்துக்களை தனிநபர்களிடம் விற்பனை செய்துள்ளனர். மட நிர்வாகத்தை அரசே ஏற்க உத்தரவிட வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தார். ஆதீனம் ஏற்கனவே 1984 இல் மடத்துக்கு எதிராக அரசு தாக்கல் செய்த மனு, 2 ஆவது கூடுதல் கிளை நீதிமன்றத் தில் நிலுவையில் உள்ளது. தற்போது நித்தியானந்தாவை நீக்கிவிட்டேன்.

அற நிலையத்துறை மனு மீதான விசாரணைக்குத் தடை விதிக்க வேண்டும் என்று இடைக்கால மனு தாக்கல் செய்தார். ஆதீனம், 'நித்தியானந்தாவும், அவரது ஆள்களும் மடத்துக்குள் நுழைய தடைவிதிக்கவேண்டும்,' என்று மற்றொரு வழக்கு தாக்கல் செய்தார்.

இதில், 'அற நிலையத் துறை ஆணை யாளரை எதிர்தரப்பாக சேர்க்க வேண்டும் என்று நித்தியானந்தா மனு தாக்கல் செய்தார். முதலாவது கிளை நீதிமன் றத்தில் நீதிபதி குரு வைய்யா முன்னிலையில், மனுக்கள் விசாரணைக்கு வந்தன.

அரசுதரப்பில்,'' அரசு 1984 இல் தாக்கல் செய்த வழக்கின் தன்மை வேறு. தற்போதைய வழக்கின் தன்மை வேறு' என்று வலியுறுத்தப்பட்டது. அற நிலையத்துறை மனு மீதான விசாரணைக்குத் தடை கோரிய ஆதீனத்தின் மனு, அற நிலையத்துறை ஆணையாளரை எதிர்மனுதாரராகச் சேர்க்க உத்தரவிடக்கோரிய நித்தியானந்தாவின் மனு இரண்டையும் நீதிபதி நிராகரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்வெளி ஆராய்ச்சியில் சீனா சாதனை

பீஜிங், டிசெ.17

விண்வெளியில் குறுங்கோள் ஒன்றின் புகைப்படங்களை எடுத்து அனுப்பியுள்ளது சீனாவின் சாங்கி-2 விண்வெளி ஓடம்.

சூரியனைச் சுற்றி வரும் குறுங்கோள்களை புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்வதற்காக சாங்கி-2 என்ற விண்வெளி ஓடத்தை சீனா அனுப்பியது. தற்போது பூமியிலிருந்து 70 லட்சம் கிலோமீற்றர் தூரத்திலுள்ள ''தௌடாட் டிஸ்'' என்ற குறுங்கோளைப் புகைப்படம் எடுத்து அனுப்பியுள்ளது.

குறுங்கோளிலிருந்து 3.2 கிலோமீற்றர் தூரத்தில் இருந்தபடி எடுக்கப்பட்ட அந்தப் படங்கள் துல்லியமாக இருந்ததாக சீன விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் பூமியிலிருந்து ஒரு கோடி கிலோமீற்றர் தூரம் வரை உள்ளவற்றை புகைப்படம் எடுக்கும் பணியில் சாங்கி-2 ஈடுபடுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

## மண்டேலாவுக்கு அறுவைச் சிகிச்சை

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு அறுவைச் சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறுவைச் சிகிச்சையின் மூலம் அவரது பித்தப் பையில் இருந்த கற்கள் அகற்றப்பட்டனஎன்று தெரிவிக்கப்பட்டது. அறுவைச்சிகிச்சையின் பின் அவர் நலமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பாக். விமான நிலையம் மீது தாக்கு

## 9 பேர் சாவு; 50 இற்கு மேற்பட்டோர் காயம்

**பாகிஸ்தானின் முக்கிய நகரான பெஷாவரில் உள்ள விமான நிலையம் மீதே தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதல் நடத்தினர்.**



இஸ்லாமபாத், டிசெ.17

பாகிஸ்தான் விமான நிலையம் ஒன்றில் தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதல் நடத்தினர். இதில் 9 பேர் உயிரிழந்தனர். ஐம்பது மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

பெஷாவர் நகரில் உள்ள விமான நிலையத்தின் மீதே தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். ரொக்கெட் தாக்குதலுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. விமான நிலைய பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே



கடும் மோதல் மூண்டது.

இந்த மோதல்களில் தாக்குதல் நடத்திய ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் முதல் ரொக்கெட் குண்டு விமான ஓடுதளத்திலும் மற்றொன்று வெளிப்பகுதியிலும் வெடித்தது.

காயமடைந்தவர்கள் விமான நிலையம் அருகே உள்ள கைபர் டீச்சிங் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகள் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

தற்போது விமான நிலையம் பாகிஸ்தான் விமானப் படையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.





அமெரிக்காவில் துப்பாக்கி நபர் ஒருவர் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த குழந்தைகளுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்துகின்றனர்.

## மழலைகள் மீது தாக்குதல் கண்ணீர் விட்டார் ஒபாமா

**நியூயோர்க், டிசெ.17**

**அமெரிக்காவின் நியூடவுன் பகுதியில் சாண்டி ஹூக் ஆரம்பப் பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 18 குழந்தைகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர்.**



இந்த கொடூர சம்பவத்தால் அமெரிக்கா சோகத்தில் மூழ்கியுள்ளது. நாளை 18 ஆம் திகதி வரை தேசியக் கொடிகளை அரை கம்பத் தில் பறக்க விட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.

உயிரிழந்த குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும் ஜனாதிபதி ஒபாமா உரையாற்றினார். தனது பேச்சுக்கு இடையில் நான்கைந்து முறை பேச முடியாமல் தடுமாறிய ஒபாமா கண்களில் பெருக்கெடுத்த கண்ணீரை கட்டுப்படுத்த முயற்சித்தார்.

கண்ணீருடன் ஒபாமா உரையாற்றுகையில்

''இந்த சம்பவத்தால் நமது இதயங்கள் நொறுங்கிப் போய் உள்ளன. இதுபோன்ற கொடிய சம்பவங்கள் நடந்த போதெல்லாம் நான் இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் அல்லாமல் ஒரு குழந்தையின் பெற்றோர் என்ற மனநிலையில் வேதனையடைந்துள்ளேன். இன்றும் அதே வேதனையை நான் மிக அதிகமாக உணர்கின்றேன். இன்றைய சம்பவத்தில் 5 முதல் 10வயதுக்குட்பட்ட அழகான சின்னஞ்சிறு மழலைகளை நாம் இழந்துள்ளோம். அவர்களுக்கென்று பிறந்த நாள், பட்டமளிப்பு விழா, திருமணம், குழந்தைகள் என்று வாழ்வின் இனிய தருணங்கள் காத்திருந்தன.

இவற்றில் எதையுமே சந்திக்காமல் இந்த கொடூர சம்பவத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு, உறவினர்களுக்கும் ஆறுதல் கூற முடியாமல் நமது இதயங்கள் நொறுங்கிப் போய் கிடக்கின்றன.

எல்லா பெற்றோர்களைப் போல் இன்று நானும் என் மனைவி மிச்சேலும் எங்கள் குழந்தைகளை கட்டி அணைக்கும் வேளையில் கனெக்டிக் சம்பவத்தில் தங்கள் குழந்தைகளை இழந்தவர்கள் எவ்வளவு வேதனைப் படுவார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

நாம் அனைவரும் ஒன்றுபடுவதன் மூலமே இவ்வாறான துயரங்களைத் தடுக்க முடியும். இந்த கொடிய குற்றச் சம்பவம் குறித்த விசாரணையில் மாகாண ஆளுநருக்குத் தேவையான எத்தகைய ஒத்துழைப்பையும் வழங்கவும், உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் அரசு தயாராக உள்ளது.'' - என்று தெரிவித்தார்.

### துப்பாக்கிச் சட்டத்தை கடுமையாக்க வேண்டும்

துப்பாக்கிச் சூட்டில் 28 பேர் உயிரிழந்த நிலையில் துப்பாக்கிகள் குறித்த சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும் என ஜனாதிபதி ஒபாமாவுக்கு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ளை மாளிகைக்கு இணையத்தளம் மூலம் இது குறித்த மனு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

''துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தடுக்கும் வகையில், கடும் கட்டுப்பாடுகளுடன் துப்பாக்கி சட்டத்தைத் திருத்தி அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த மனுவில் 43,000 பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

# துருக்கியை மிரட்டுகிறது சிரியா

## பாதுகாப்புக்கு விரைகிறது அமெரிக்கா

டமாஸ்கஸ், டிசெ.17

சிரியாவிடம் இருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக ஏவுகணைகள் சகிதம் துருக்கிக்கு விரைகின்றனர் அமெரிக்கப் படைவீரர்கள்.

சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்துள்ளது. இதனால் இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக துருக்கியில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்தநிலையில் துருக்கியின் எல்லையோர பகுதிகளில் சிரியா அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறது. சிரியாவுக்குப் பதிலடி கொடுக்க ஏவுகணைகள் மற்றும் இராணுவ உதவியை அளிக்கும்படி துருக்கி வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமெரிக்கா, 6 பேட்ரியாட் ஏவுகணைகள் மற்றும் 400 அமெரிக்கப் படைவீரர்களைத் துருக்கிக்கு அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளது.

இதற்கான உத்தரவில் இராணுவ அமைச்சர் லியான் பெனட்டா கையெழுத்திட்டுள்ளார். அதன்படி அமெரிக்கா, ஜேர்மனி, நெதர்லாந்து போன்ற நாடுகளில் இருந்து தலா 2 ஏவுகணைகள் அனுப்பி வைக்கப்படும், இவை நேட்டோ படையின் கண்காணிப்பில் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



### உலகம் அழியப் போகிறது

## எதிர்வு கூறியவர்கள் எண்ணுகின்றனர் 'கம்பி'

பீஜிங், டிசெ.17

எதிர்வரும் 21ஆம் திகதியுடன் உலகம் அழியப் போகிறது என ஊர் ஊராக சென்று பிரசாரம் செய்த சிலரை சீனப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாயன் நாள்காட்டியின்படி எதிர்வரும் 21ஆம் திகதி உலகம் அழியப் போகிறது என நம்பும் சீனர்கள் ஒன்றிணைந்து பல ஊர்களில் கூட்டம் நடத்துவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இவர்கள் சீனாவின் மத்திய பகுதிகளிலும், மேற்கு மாகாணங்களிலும் பல இடங்களில் இவ்வாறு கூட்டம் நடத்தியுள்ளனர். இந்தநிலையில் பொய்யான செய்திகளை பரப்புவதாகக் கூறி, இவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த விடயம் சீனாவில் மட்டுமல்லாது உலகம் முழுதிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

### அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவு

## எதிர்ப்புகளுக்கு மத்தியில் எகிப்தில் வாக்குப்பதிவு

அரசமைப்புத் திருத்த சட்ட வரைவு தொடர்பான பொது வாக்கெடுப்பு எகிப்தில் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தச் சட்ட வரைவை ஜனாதிபதி முர்சியும், அவரது முஸ்லிம் சகோதரத்துவ கட்சி ஆதரவாளர்களும் தீவிரமாக ஆதரிக்கின்றனர். அதே சமயம், மிதவாத முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், முற்போக்குவாதிகள் மற்றும் எதிர்க்கட்சிகள் இந்தச் சட்ட வரைவை கடுமையாக எதிர்க்கின்றனர்.

இந்தநிலையில் முதல் கட்ட வாக்குப்பதிவு கெய்ரோ, அலெக்ஸண்டிரியா, தாகாலியா, கார்பியா, ஷார்கியா, வடக்கு மற்றும் தெற்கு சினாய் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது. ஏனைய பகுதிகளில் டிசெம்பர் 22ஆம் திகதி அடுத்த கட்ட வாக்குப்பதிவு நடைபெறும்.

சட்டவரைவு தொடர்பாக அனைத்து தரப்பிலும் ஒருமித்த கருத்து எட்டப்படும் வரை, பொதுவாக்கெடுப்பை ஒத்திவைக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஜனாதிபதி முர்சி நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ் பாதிப்பால் மயங்கினார் ஹிலாரி



வோஷிங்டன், டிசெ.17

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் திடீரென்று மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. ஹிலாரி கிளிண்டன் கடந்த 4 ஆண்டுகளில் 112இக்கும் மேற்பட்ட நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

தற்போதும் தொடர் சுற்றுப்பயணங்கள் மேற் கொண்டு வரும் ஹிலாரி நேற்று முன்தினம் திடீரென்று மயங்கி விழுந்தார்.

உடனடியாக மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது வயிற்றில் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டதால் மயங்கியதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உடல் நலம் சரியாகும் வரை அவர் வீட்டில் இருந்தே பணிபுரிவார் என்று கூறப்படுகிறது. ஹிலாரி, ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு கடந்த வாரம் அமெரிக்கா திரும்பியதும் அவரது வயிற்றில் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அதனால் அவர் கடந்த வாரம் பணியாற்றவில்லை. தற்போது வட ஆபிரிக்க பயணத்தையும் ரத்துச் செய்துள்ளார்.

# நைஜீரிய ஹெலி விபத்தில் ஆளுநர் உயிரிழந்தார்

லாகோஸ், டிச. 17

நைஜீரியாவில் இடம்பெற்ற ஹெலி விபத்தில் மாகாண ஆளுநர் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் கடுனா மாகாண ஆளுநராக இருந்தவர் பாட்ரிக் இப்ராகிம் யகோவா. இவர் தென்மேற்கு பயெல்கா மாகாணத்தில் உள்ள போர்ட் ஹார்கோர்ட் என்ற இடத்துக்கு கடற்படை ஹெலிகொப்டரில் பயணம் மேற்கொண்டார்.

இவர் பயணித்த ஹெலிகொப்டர் பயெல்காவில் உள்ள நெம்பே என்ற இடத்தில் சென்றபோது தரையில் விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் ஆளுநர் பாட்ரிக் இப்ராகிம் யகோவா உயிரிழந்தார். அவருடன் பயணித்த தேசிய பாதுகாப்பு முன்னாள் ஆலோசகர் அண்ட்ரூ அஷாஷியும் உயிரிழந்தார். விபத்து குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.



எகிப்தில் நடை பெற்ற பொது வாக்கெடுப்பில் பொது மக்கள் சோதனையின் பின் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.

# அசாத்துக்கு ஆதரவளிப்பதை ரஷ்யா கைவிட வேண்டும்

## வலியுறுத்துகிறது அமெரிக்கா

வோஷிங்டன், டிசெ.17

சிரியா அதிபர் பஷார் அல்-அசாத்துக்கு ஆதரவு தருவதை ரஷ்யா கைவிட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் ஜே கார்னே தெரிவிக்கையில்,

''பொதுமக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களை அசாத் பயன்படுத்தினால் கடும் விளைவுகளைச் சந்திப்பார். இந்த விஷயத்தில் நாங்கள் விடுத்துள்ள எச்சரிக்கையை புறந்தள்ளிவிட்டு அவர் செயற்பட்டால், அதற்குரிய பயனை அவர் அனுபவிக்க நேரிடும். சிரியாவில் உள்ள பெரும்பாலான மக்கள், சுதந்திர, ஜனநாயக, ஒருங்கிணைந்த சிரியா அமைய வேண்டும் என்று விரும்புகின்றனர். அதைத் தான் நாங்களும் விரும்புகிறோம். இப்போது நடைபெறுகின்ற புரட்சியை திசை திருப்ப ஒரு தீவிரவாதக் குழு முயற்சிப்பதாக அறிகிறோம். அவர்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். நாங்கள் சிரிய மக்களுக்கு ஆதரவாக உள்ளோம்.

அந்த நாட்டு மக்களுக்கு ஆதரவாக, சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயற்பட ரஷ்யா முன்வர வேண்டும். அசாத் இல்லாத அரசியல் மாற்றம் ஏற்படுவது உறுதி.

சிரியா விவகாரத்தில் ரஷ்யா ஆக்கபூர்வமாகச் செயல்பட வேண்டும். அசாத்துக்கு ஆதரவாகச் செயல்படுவதைக் கைவிட வேண்டும்''- என்றார்.

துருக்கியில் இருந்து கிரேக்கம் நோக்கிய பயணம்:


# கவிழ்ந்தது கப்பல்; 18 பேர் சாவு

கிரேக்கக் கடல் பகுதியில் கப்பல் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் உயிரிழந்தனர்; 9 பேரை காணவில்லை.

துருக்கியிலிருந்து கிரேக்கத்தில் சட்டவிரோதமாகக் குடியேறுவோர் ஆபத்தான கப்பல் பயணத்தை மேற்கொள்வது சமீபகாலமாக அதிகரித்து வருகிறது.

வெள்ளிக்கிழமை 28 பேர் கொண்ட குழு துருக்கியிலிருந்து, கிரேக்கத்துக்கு கப்பலில் சென்றது. லெஸ்வோஸ் தீவு அருகே அந்தக் கப்பல் விபத்துக்குள்ளானது. இந்தச்சம்பவத்தில் 18 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். 9 பேரை காணவில்லை. உயிர் பிழைத்த 20 வயது இளைஞர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் கப்பலில் பயணம் செய்த அனைவரும் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.



# சேவை நலன் பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்தும்

36 ஆண்டுகள் கல்விப்பணியாற்றி
ஆசிரிய சேவையிலிருந்து ஒய்வு பெறுவதுடன்
57 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும்
திருமதி **கனகராணி பத்மநாதன்**
(ஆசிரியர், கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி)



சேவை விவரம்

| பாடசாலை | காலம் |
|---|---|
| கிளி/ செட்டியகுறிச்சி அ.த.க. பாடசாலை | 16.05.1977 - 07.11.1977 |
| கிளி/ பூநகரி மகாவித்தியாலயம் | 08.11.1977 - 15.01.1980 |
| யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை | 16.01.1980 - 31.12.1982 |
| மன்/ எத்துக்கால் றோ.க.த. வித்தியாலயம் | 01.01.1983 - 31.08.1984 |
| மன்/ கல்லொழுவ முஸ்லிம் வித்தியாலயம் | 01.09.1984 - 31.08.1985 |
| கிளி/ வேரவில் மகாவித்தியாலயம் | 01.09.1985 - 14.01.1989 |
| கிளி/ பூநகரி மகாவித்தியாலயம் | 15.01.1989 - 19.01.1992 |
| கிளி/ பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம் | 20.01.1992 - 31.12.1996 |
| கிளி/ ஞானிமடம் அ.த.க. பாடசாலை | 01.01.1997 - 05.05.1998 |
| கிளி/ சாமிப்புலம் அ.த.க. பாடசாலை | 06.05.1998 - 14.06.1998 |
| கிளி/ பூநகரி மகாவித்தியாலயம் | 15.06.1998 - 31.12.2007 |
| கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி | 01.01.2008 - 17.12.2012 |

இனிவரும் ஒய்வுக்காலம் இனிதே அமைய அவரது
குடும்பத்தினருடன் இணைந்து உளம் மகிழ பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
சேவைக்காலத்தில் தங்களுடன் பணிபுரிந்த
ஆசிரியர்களும், கல்விகற்ற மாணவர்களும்.

**சிப்சைட் லேன்,**
**வில்சன் வீதி, திருவையாறு.**
077 2555 479

(சி/2615)(45:6.7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**Dr.சி. கௌதமன்** B.Sc-(Hons) Civil Engineering (1 st Class), University Of Moratuwa)



கரம்பைக்குறிஞ்சி கிழக்கு, வரணியைச் சேர்ந்த
**சின்னத்தம்பி - வள்ளியம்மைப்பிள்ளை**
தம்பதிகளின் அன்புப் புதல்வன்
**சி. கௌதமன்**
அவர்கள் 13.12.2012 அன்று ஐக்கிய இராச்சியத்தின்
(UK), Belfast Queen's பல்கலைக்கழகத்தில்
Civil Engineering துறையில் கலாநிதிப்பட்டம் (Ph.D)
வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இவர் மேன் மேலும்
பல பட்டங்கள் பெற்று நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல கரவை வெல்லன்
விநாயகர் துணையினை வேண்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**வாழ்த்துவோர்:**
அப்பா, அம்மா,
அக்காமார் - கிரிஜாந்தி, கிருத்திகா
மைத்துனர் - சதீசன்
அண்ணா - கௌசிகன்
உறவினர், நண்பர்கள்

(267:9)(6.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(52)

நமக்கு யாராவது உதவி செய்யாவிட்டால் கவலைப் படாதீர்கள். அவர்களைப் பார்த்துச் சிரியுங்கள். நமக்கு வேறு யாரோ உதவி செய்யக் காத்திருக்கிறார்கள் என்று எண்ணுங்கள்.

புதிய விஷயங்களை நாம் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக தினசரிப் பத்திரிகைகளையும், உபயோகமான நாவல்களையும் படிக்க வேண்டும். உலக விஷயம் தெரியாமல் இருக்கக் கூடாது. யாராவது சவால் விட்டால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். எப்படிப்பட்ட நிலைமையையும் சமாளிக்க முடியும் என்று சொல்லி உறுதிப்படுத்துங்கள். எதைப் பற்றியும் சிந்தித்துப் பிறகு செயற்படுங்கள். திட்டமிட்டுச் செயற்பட்டால் வெற்றி கிடைக்கும்.

உண்மையைக் கண்டு ஓடாதீர்கள். எப்போதும் உண்மையைச் சந்தித்தாக வேண்டும். நாம் தவறு செய்திருந்தால் நம்மை நாமே திருத்திக்கொள்ள வேண்டும்.

மகிழ்ச்சியைத் தேடி அலைய வேண்டாம். மகிழ்ச்சி என்பது சிற்றின்பங்களில் இல்லை. உங்கள் கடமையை நீங்கள் செய்து கொண்டேயிருந்தால், மகிழ்ச்சி தானாக உங்களைத் தேடி வரும். எப்போதும் உணர்ச்சி வசப்படாதீர்கள், அமைதியாக எதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

ஒழுக்கத்தை எப்போதும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். ஒழுக்கம் தான் ஒரு மனிதனை மிகவும் உயர்த்தும். தவறுகள் செய்துவிட்டால் அஞ்சி ஓடாதீர்கள். அதனால் ஏற்படும் தண்டனையை ஏற்றுக்கொள்ளுங்கள். மீண்டும் அப்படித் தவறு செய்யாமலிருக்க அது உதவும்.

எப்படிப்பட்ட பிரச்சினையையும் தள்ளிப்போடாதீர்கள். முடிந்த அளவுக்குப் பிரச்சினைகளை அவ்வப்போது தீர்க்க வேண்டும். தள்ளிப் போடுவது கோழைத்தனம். நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம். என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நமது இலட்சியம் என்னவென்று தெரியாமல் எதையும் செய்யக் கூடாது.

எப்போதும் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். வீடு கட்ட எப்படி ஒரு பிளான் தேவையோ, அப்படியே ஒவ்வொரு செயலுக்கும் ஒரு திட்டம் தேவை. நாம் என்ன செய்தாலும் அதை நாம் மிகவும் விரும்பிச் செய்ய வேண்டும். நமக்குப் பிடிக்காத வேலையில் இறங்கக் கூடாது. நண்பர்களுக்கோ, மற்றவர்களுக்கோ நாம் என்ன கொடுத்தாலும், என்ன செய்தாலும் முழு மனத்துடன் மகிழ்ச்சியுடன் கொடுக்க வேண்டும் அல்லது செய்ய வேண்டும்.

நமக்கு இருப்பதே போதும் என்ற மன நிறைவு ஏற்பட்டால் நாம் மேலும் மேலும் உயர முடியாது. வாழ்க்கையில் நாம் அடைய வேண்டியவைகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை ஒவ்வொன்றாக அடைய வேண்டும் என்றே எண்ண வேண்டும். எப்போதும் வெற்றியே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். வெற்றியை நோக்கிப் போகும்போது எதிர்ப்படும் தடங்கல்களைக் கண்டு பயந்து ஓடக் கூடாது.

தியாக உணர்ச்சியுடன் செயலில் ஈடுபட வேண்டும். ஏதாவது ஒன்றைப் பெற மற்றொன்றைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கும். முடியாது, இல்லை என்ற வார்த்தைகளுக்கு அடிமையாகாதீர்கள். இவைகளுக்கு அடிமையானால் நீங்கள் கோழைகளாகி விடுவீர்கள்.

குடும்ப வாழ்க்கையை மகிழ்ச்சியாக இருக்கும்படி செய்யுங்கள். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியுடன் இருந்தால் தான் மற்றவர்கள் நம்மை மதிப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியில்லா விட்டால் நம் மனத்தில் அச்சம் ஏற்பட்டு விடும். மன அமைதி பெற தியானம் செய்யலாம். கடவுள் நம்பிக்கையுடன் தியானம் செய்யும் போது அமைதி தன்னால் கிடைக்கும்.

புதிதாக ஏதாவது செய்ய முடியும் என்ற உணர்ச்சி மனதில் ஏற்பட்டால், உடனே அதைச் செய்து முடிக்க வேண்டும். வெற்றி நமக்குக் கிடைப்பது உறுதி என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நம் மனதில் எப்போதும் இருக்க வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் அதிக ஊக்கம் காட்ட வேண்டும். ஏதோ கடமைக்காக, பணத்துக்காகச் செய்வதாக மட்டும் நினைப்பது மிகவும் தவறு.

நம் காரியங்கள் யாவினும் கை கொடுக்க உறவினர்களும் உற்ற நண்பர்களும் இருக்கும்போது, நாம் எடுத்த காரியம் யாவும் வெற்றிதான். ஆத்மார்த்தமாக ஒரு செயலில் ஈடுபடும்போது நம்முடைய உடல், உள்ளம், மூளை எல்லாம் குவிந்து அந்தச் செயலை முடிப்பதில் பங்கு கொள்கின்றன. மனம், வாக்கு, காயம் சுத்தியாக முனையும் எந்தக் காரியமும் சோடை போவதில்லை.

நம்மைச் சுற்றியுள்ள அனைவரையும் கவர வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையின் அடிப்படையில் நாம் செய்யும் காரியங்கள் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு பயனுடையதாகவே இருக்கும்.



நம்முடைய உழைப்பு, நம்மைச் சூழ்ந்தவர்களிடையே ஒரு விழிப்பையும், அனுதாபத்தையும் ஏற்படுத்தும். பயனில்லை என்று சொல்லாமல், ஊருக்கும் உலகத்துக்கும் உபயோகமான காரியங்களை நாம் செய்யும் போது ஏற்படும் மனத்திருப்திக்கு இணைப்பே கிடையாது.

**தமிழ்வாணன்** (முற்றும்)

# தமிழ் இலக்கிய வரலாற்றிலே படைப்பொன்று 19 ஆம் நூற்றாண்டில் தடை செய்யப்பட்டது

## யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

தமிழ் இலக்கிய வரலாற்றிலே முதன்முறையாக 19 ஆம் நூற்றாண்டிலேயே இலக்கிய படைப்பொன்று தடைசெய்யப்பட்டிருந்தது. அந்த இலக்கியத்தில் அரச அதிபர்களைப் பற்றி எழுதியிருந்தமையே தடைக்குக் காரணம் எனச் சொல்லப்பட்டது. இந்தப் புதிய தகவலை வெளியிட்டவர் யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆவார்.

கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவு விழா யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கூட்டுறவுசபைத் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுப் பேருரை ஆற்றும் போதே சிவலிங்கராஜா இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தடை செய்யப்பட்ட இலக்கியமானது ஒரு கும்மிப்பாட்டு ஆகும். 'அழகம்மா திருமணம்' என்ற தலைப்பில் அமைந்த கும்மிப்பாட்டாகும். அந்தக்கால அரச அதிபர்களைப் பற்றி அமைந்ததால் தடை செய்யப்பட்டது. இந்த இலக்கியம் யாழ். வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவருடையது. 'அழகம்மா திருமணம்' கும்மிப்பாட்டுக்காக அவர் 3 வருடம் சிறைவாசம் அனுபவித்தவர். 33 வயதில் அவர் இறந்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

அதே நூற்றாண்டில் குடாநாட்டு மக்களுக்காக 'உத்தியோக லட்சணபூமி' எனும் இலக்கியமும் தோற்றம் பெற்றது.

உலகில் முதன் முறையாக மருத்துவத்துறையை போதித்தவர் யாழ். மானிப்பாயைச் சேர்ந்த மருத்துவர் கிறீன் ஆவார். இவர் தமிழிலே மருத்துவத்தைப் போதித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

19 ஆம் நூற்றாண்டுக்கும் 20 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலங்களில் பல அறிஞர்கள் வாழ்ந்தார்கள். அவர்களுடைய இலக்கியப்படைப்புக்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை பற்றியும் பாத்திரங்களுக்கு ஏற்றவாறும் அமைந்துள்ளன. நக்கலாகவும் தங்களது உணர்வுகளை வெளிக்காட்டியுள்ளனர்.- என்றார். (எ-13)



வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி தரம் 5 மாணவர்கள் நுண்ணறிவுத்திறன் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். படத்தில் மாணவர்களுடன் கல்லூரி அதிபர் நோயல் வ.விமலேந்திரன் மற்றும் ஆரம்பப் பாடசாலை அதிபர் ஏ.டி.அதிசயநாதன். (ம-41)

## தேசிய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை பிரதேச சபை பொது நூலகங்களின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

**நாரந்தனை பொது நூலகப் போட்டி முடிவுகள்**

**கதைசொல்லல்**

1 ஆம் இடம்-த.டிலோபினா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி), 2 ஆம் இடம்-ரி.விதுஷா (சரவணை சின்னமடு றோ.க.ம.வி), 3 ஆம் இடம்-பு.சிறியாழினி (தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

**பேச்சுப்போட்டி**

1 ஆம் இடம்-அ.றெமோஜா (நாரந்தனை றோ.க.ம.வி), 2 ஆம் இடம்-கு.நிலாவேணி (தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), 3 ஆம் இடம்-சா.நிரோஜினி (தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

**சித்திரப்போட்டி**

1 ஆம் இடம்-அ.அஜந்தா (நாரந்தனை றோ.க.ம.வி), 2 ஆம் இடம்-சு.சாரங்கா (நாரந்தனை கணேசா வித்தியாலயம்), 3 ஆம் இடம்-கி.யோணேக்கா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி).

**கட்டுரைப்போட்டி கீழ் பிரிவு**

1 ஆம் இடம்-டெ.தர்ஸ்சன் (நாரந்தனை றோ.க.ம.வி), 2 ஆம் இடம்-கு.சுபாஜினி (நாரந்தனை றோ.க.ம.வி), 3 ஆம் இடம்-வி.விஜிதரன் (தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

**கட்டுரைப்போட்டி மேற் பிரிவு**

1 ஆம் இடம்-[illegible] (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி), 2 ஆம் இடம்-அ.வித்தியா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி), 3 ஆம் இடம்-சே.செறின் அனிற்றா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி).

**பொது அறிவுப் போட்டி**

1 ஆம் இடம்-கு.சுபாஜினி (நாரந்தனை றோ.க.ம.வி), 2 ஆம் இடம்-த.தனுசிகா (நாரந்தனை றோ.க.ம.வி), ம.யனோஜினி (நாரந்தனை றோ.க.ம.வி).

**அனலைதீவு பொது நூலக போட்டி முடிவுகள்**

**கதைசொல்லல்**

1 ஆம் இடம்- விவேதினி (அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), கோ.சர்மினி (அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை), 3 ஆம் இடம்- ச.சாணுஜா (அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை),

**பேச்சுப் போட்டி**

1 ஆம் இடம் - செ.டிலோஜினி, கு.ரட்சிகா (அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), 3 ஆம் இடம்-ஆ.நிரோஜன் (அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை),

**சித்திரப் போட்டி**

1 ஆம் இடம் -உ.துஸ்யந்தன், ர.நிதர்சன், 3 ஆம் இடம் - உ.யட்சணன் (மூவரும் அனலைதீவு சதாசிவம் ம.வி)

**கட்டுரைப் போட்டி கீழ் பிரிவு**

1 ஆம் இடம் - இ.நியுர்ஜன், 2 ஆம் இடம் - கோ.விஜீபா, 3 ஆம் இடம்- ம.விஜயகுமார் (மூவரும் அனலைதீவு சதாசிவம் ம.வி)

**பொது அறிவுப் போட்டி**

1 ஆம் இடம் - ம.விஜயகுமார் (அங்கத்துவ இல ஏ/249), 2 ஆம் இடம் - இ.நியுர்ஜன் (அங்கத்துவ இல ஏ/225), 3 ஆம் இடம்- ச.சுவேதிகா (அங்கத்துவ இல ஏ/252) (எ)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



கிளிநொச்சி மாவட்டம் ஜெயந்தி நகரைச் சேர்ந்த அமரசிங்கம் கேதீஸ்வரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் முன்னாள் உப தலைவரும் கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கம், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை, பாரவூர்திக் கூட்டுறவுச் சங்கம், கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம், வடமாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாசம் ஆகியவற்றில் முக்கிய பதவிகள். கூட்டுறவு வளர்ச்சிக்கு உழைத்தவர் ஆவார். (எ-18)

## 'கலைச்சாமரை' விருது

யாழ்ப்பாணம், டிசெ.17

திருமறைக் கலாமன்றத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கலாமன்றத்தில் கலைப் பணியை ஆற்றிய 11 பேருக்கு ''கலைச் சாமரை'' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கலாமன்றத்துடன் இணைந்து கலைத்துறையில் பங்காற்றிய மரியாம்பிள்ளை பேரின்பநாதன், எஸ்.அருள், த.அமிர்தநாதன், ஜி.அல்பிரட், ரி.பிலிப்பு, எஸ்.அன்ரன், ஜே.சாள்ஸ், என்.எம். நவரட்ணராஜா, கே.சிவபாதசுந்தரம், ந.குலசிங்கம், மாட்டீன் ஜெயராசா ஆகியோர் இந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ-14-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021 5671111
விநியோகம்: 021 5677222
தொலைநகல்
செய்தி: 021 5678844,
விளம்பரம்: 021 2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
இல. 9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

நெல்லியடிக் கிளை:
பருத்தித்துறை வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789, 021 226 2395

சாவகச்சேரிக் கிளை:
நகர சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா மொபைல்ஸ்' பழைய சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொபைல் ஸ்ரோர்ஸ்' பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கணனி' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவா ஸ்ரோர்ஸ்' தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி லைவ்சிற்றி' முல்லைத்தீவு நகர் : 0779598917, 'சன் ஸ்ரார்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹா புக் ஷொப்' 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## எண்ணப்படும் தற்கொலைகள்

இலங்கையில் கடந்த 9 மாதங்களில் 2 ஆயிரத்து 704 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவர்களில் கூடுதலானவர்கள் ஆண்கள். கடந்த மார்ச் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் இந்தத் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 2 ஆயிரத்து 92 ஆண்களும் 612 பெண்களும் அடங்குகின்றனர். இந்தத் தகவலை பொலிஸ் தலைமையகம் வெளியிட்டிருக்கிறது. அத்துடன் இறப்புக்கான காரணங்களாக மன அழுத்தம், சமூகத் தொடர்பின்மை மற்றும் அறியாமை என்பன குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

மாதம் ஒன்றுக்கு சராசரி 300 தற்கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்தத் தொகையை வைத்துக் கொண்டு இலங்கையில் வருடம் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 600 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனக் கணிக்கப்படுகிறது. தற்கொலை உயிரிழப்புகள் போக, தற்கொலை முயற்சிகள் பன்மடங்காக உள்ளன.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் சுமை நாட்டில் உள்ள அனைத்து மக்களையும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கிறது. பொருள்களின் விலை அதிகரிப்பு நாளுக்குநாள் அதிகரித்துச் செல்வதால் மக்கள் தமது அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கூட நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

உயர் தொழில் வகிப்போர் தவிர நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக் குடும்பங்கள் இலங்கையின் பொருளாதார நிலைமையை சமாளிக்க முடியாது திண்டாடுகின்றன. குறிப்பாக நாளாந்த கூலித் தொழிலாளர்கள் இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

தற்கொலைகளுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டபோதும் அது ஒவ்வொரு மனிதர்களுக்கும் எவ்வாறான வகையில் ஏற்படுகின்றன என்பது பற்றியும், அவற்றை எந்த வழிவகைகள் மூலம் தீர்க்கலாம் என்பது பற்றியும் எவரும் சிந்திப்பதில்லை.

ஒரு மனிதனுக்கு எதன் காரணமாக மன அழுத்தம் வருகிறது என்பது பற்றியும் சமூகத்துடனான தொடர்பு எவ்வாறு அறுந்து போகிறது என்பது பற்றியும் சிந்திக்கப்படுவதில்லை. இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுமிடத்து அறியாமை என்ற காரணம் தானாகவே இல்லாது போய்விடும்.

தற்கொலைகளின் வீதம் ஆண்கள் பக்கம் அதிகரித்திருப்பதற்கு இன்றைய பொருளாதார நிலை முக்கிய பங்கு வகிக்கின்றது. விலைவாசி உயர்வுக்கேற்ப ஊதியம் இல்லாமை நாளாந்த வாழ்க்கையில் நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாக தமது விருப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது மனிதர்கள் அந்தரிக்கின்றனர்.

இதன் ஆரம்பம் மன உளைச்சலுக்கும் மன அழுத்தத்துக்கும் ஒரு மனிதனைத் தள்ளிவிடுவதால் அவன் நெருக்கடியில் இருந்து விடுபட முடியாமல் இறுதியில் தற்கொலைக்குச் செல்கின்றான்.

நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்துக்குச் சென்று விட்டதாகவே மக்கள் உணருகின்றனர். இதிலிருந்து மக்களை மீட்க வேண்டும்.

தற்கொலைகளைப் பட்டியல் இடுவதை விடுத்து அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்ப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும்.

# குற்றப்பிரேரணை விடயத்தில் அரசு இறங்கி வரும் நிலை இல்லை

## இறுக்கமான போக்கு நீடிக்கும் அறிகுறி

சண்டே ரைம்ஸ் விமரிசனத்திலிருந்து
■ கோகுலன்

கடந்த புதன்கிழமை அலரி மாளிகையில் அமைச்சரவை கூட்டம் முறைப்படியாக ஆரம்பமாவதற்கு முன் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப்பிரேரணை தொடர்பான விடயங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றி அமைச்சர்கள் ஆராய்ந்தார்கள். சட்டத்தரணிகள் சங்கத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுவிருந்தது தொடர்பாக அமைச்சர்கள் தம் கவனத்தை முதலில் செலுத்தினார்கள்.

குற்றப்பிரேரணையை எதிர்ப்பதற்கு மேற்கொண்டும் எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து அந்தக் கூட்டத்தில் சட்டத்தரணிகள் ஆராய்ந்தார்கள். அதில் ஒரு தீர்மானம் புதிதாக பிரதம நீதியரசர் ஒருவர் நியமிக்கப்படும் வரை அவரை வரவேற்பதில்லையென்பதும் நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களும் வருமாறு:-

★ பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பாக நாடாளுமன்றத்தின் விசேட தெரிவுக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பாக மறுபரிசீலனை செய்வதற்கு சுயாதீனமானதொரு குழுவை நியமிக்கப்போவதாக ஜனாதிபதி தெரிவித்திருப்பதை கருத்தில் எடுத்து குற்றப்பிரேரணையை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்படி ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்வது.

★ ஜனாதிபதியோ அல்லது குற்றப்பிரேரணையில் கையெழுத்திட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ அதனைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது என்று தீர்மானிப்பார்களானால், உயர் நீதிமன்ற நீதிபதிகள் பதவி நீக்கம் செய்யப்படுவது தொடர்பான நடைமுறை சட்டங்களை உருவாக்கி சட்டமாக்க வேண்டும், அதே சமயம் குற்றப்பிரேரணை தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாயின் இயற்கை சட்டங்களின் விதிகளுக்கமைவாக அது நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

★ இயற்கைச் சட்டங்களின் விதிகளுக்கமைவாக நியாயமான ஒரு விசாரணையின்றி தற்போது பதவியிலிருக்கும் பிரதம நீதியரசர் நீக்கப்படும் பட்சத்தில், புதிதாக நியமிக்கப்படும் பிரதம நீதியரசரை சட்டத்தரணிகள் சங்கம் வரவேற்பதில்லை.

அமைச்சரவை கூட்டத்தில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் விஜயதாச ராஜபக்ஷ கடுமையாக விமர்சிக்கப்பட்டார். இதன் காரணமாக அந்தச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசு சார்ந்த சட்டத்தரணிகள் அவருக்கு எதிராக தீர்மானம் ஒன்றை முன்வைக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவியது.

குற்றப்பிரேரணையை எதிர்ப்பவர்களால் நாடுமுழுவதும் நடத்தப்பட்டு வரும் பரப்புரைகளை முறியடிக்கும் வகையில் ஒருங்கிணைந்த பரப்புரை ஒன்றை அரசதரப்பினர் முன்னெடுக்க வேண்டும் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா ஆலோசனை சொன்னார். இதற்காக அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றார் அவர். இவர்கள் வெளி மாகாணங்களில் நீதிமன்றங்களுக்கு வெளியில் எதிர்ப்பார்[illegible] மக்களுக்கு விளக்கமளிப்பதற்கான வேறு செயற்பாடுகளிலும் இறங்க வேண்டும் என்றார் அமைச்சர்.

அமைச்சர்களின் இந்த மூலோபாய ஆலோசனைக் கூட்டம் முடியும் தறுவாயில் வருகை தந்த ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் ஒரு குறுகிய குறிப்புரையில் நிலைமைகளின் முன்னேற்றம் குறித்து அரசு மிகக்கவனமாக இருக்க வேண்டும் என்றார். அதன் பிறகு அமைச்சரவைக்கான அறையில் வழமையான கூட்டம் இடம்பெற்றது.

### வடக்கு அபிவிருத்தி தொடர்பான அறிக்கை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அங்கு "2009-2012 மோதலில் இருந்து உறுதிப்பாட்டுக்கு" என்று தலைப்பிடப்பட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தார். இந்த அறிக்கை ஜனாதிபதியின் செயலணியிலிருந்து வந்த அறிக்கையாகும். இந்த செயலணிக்கு அமைச்சரே தலைமை வகிக்கின்றார். வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ள அபிவிருத்திப் பணிகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை அமைந்துள்ளது.

குறித்த பகுதியின் நீண்ட கால அபிவிருத்திகள் மற்றும் தேவைப்படும் உள்கட்டமைப்புப் பணிகள் பற்றியும் இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அறிக்கையை ஆங்கிலத்தில் சமர்ப்பித்த அமைச்சர் சிங்கள-தமிழ் பிரதிகள் தயாரானதும் விநியோகிக்கப்படும் என்றும் கூறினார்.

இவைகள் இவ்வாறு இருக்க பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை பற்றிய விடயங்களே அரசின் கவனத்தை பெரிதும் ஈர்த்து வருகின்றது.

### அரசியல், கொந்தளிப்பு

நாடாளுமன்றத் தெரிவுக்குழு பிரதம நீதியரசரை மூன்று குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாகக் கண்டிருப்பதானது தொடர்ந்தும் சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றது. கடுமையான விமர்சனங்களும் அதிருப்திகளும் தோன்றியிருந்த பின்னணியில் அரசு தனது நிலைப்பாட்டில் மென்மைப் போக்குக்குத் திரும்புவது போல் ஒரு கட்டத்தில் தோன்றியிருந்தாலும் நிலைமை அதிகார பூர்வமாக விளக்கப்பட்டதை அடுத்து மீண்டும் கடும் போக்கு வெளிப்பட்டுள்ளது. இந்த மென்மை மற்றும் கடும் போக்குக்கிடையில் அரசுக்குள்ளேயே அரசியல் கொந்தளிப்பு ஒன்று ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

கடந்தசெவ்வாய்க்கிழமை மேற்கொண்டு அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ள தாம் ஒரு சுயாதீனக் குழுவை நியமிக்கப்போவதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

கொழும்பு 7இல் கணக்காளர் நிறுவனம் ஒன்றின் கட்டடத் திறப்பு விழாவில் பேசிய போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கருத்தை வெளியிட்டார். தமக்கு முன்பதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கிளப்பியிருந்த பிரச்சினையொன்றுக்கு பதிலளிக்கும் முகமாகவே ஜனாதிபதி இதைக் கூறியிருந்தார். இந்தக் கருத்து பல தரப்புகள் மத்தியில் அதிர்வுகளை ஏற்படுத்துவதாய் இருந்தது. தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் மத்தியில் அமைதியின்மை தென்பட்டது. தாங்கள் ஏற்கனவே தீர்மானித்துள்ள விடயத்தை ஆராய வேறு ஒரு குழு எதற்கு என்பது அவர்களுக்கு புரியவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசு தரப்பு மற்றும் எதிர்த்தரப்பினர் மத்தியில் பெருமெடுப்பில் கவலைகள் வெளியிடப்பட்டன.

நாடாளுமன்றமே மிக உயர்ந்த பீடம் என்றிருக்கையில் தெரிவுக் குழுவின் தீர்வை வேறொருகுழு ஆராய்வதென்பது சட்டமியற்றும் சபையின் உயர்ந்த நிலை தொடர்பாக இது பெரும் பிரச்சினையைத் தோற்றுவிப்பதாக இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள்.

அத்துடன் அரசு அடிக்கடி கூறிவரும் நாடாளுமன்றமே அதி உயர்பீடம் என்ற கொள்கைக்கு இது எதிர்மாறாக இருந்துவிடப்போகின்றது என்பது அவர்களின் கவலை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது கடும் போக்கு நிலையில் இருந்து மறுபக்கமாகத் திரும்பி விட்டது போல் இருந்தது.

அரசின் ஆரம்ப நிலைப்பாடு வியாழக்கிழமை பத்திரிகை ஆசிரியர்களுடனான காலை உணவு அருந்தும் வேளை கூட்டத்தில் ஜனாதிபதியால் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டது.

ஜனாதிபதி அங்கு விரிவா கூறியதிலிருந்து ஒரு பகுதி வருமாறு:-

இப்போது ஏற்பட்டிருப்பது நீதித்துறை தொடர்பான ஒரு பிரச்சினை. இது பகிரங்கமாகக் கொண்டுவரப்பட்டுவிட்டதால் நாம் கவலைப்பட்டாலும் அது பற்றி பேசியாக வேண்டியிருக்கின்றது. இந்த விடயம் அவசியம் இல்லாமல் அரசியல் ஆக்கப்பட்டு விட்டது. அறிக்கை வந்ததின் பின்னர் அதில் என்ன குறிப்புகள் காணப்படுகின்றன என்பதை நாம் பார்க்கலாம். எதுவானாலும் இன்னுமொரு மாத காலத்துக்கு அது பற்றி நாம் பேசமுடியாது நாடாளுமன்றம் ஒரு மாதத்தின் பின்னர் அதுபற்றி விவாதித்து முடிவெடுக்கும். அறிக்கையின் மீது சட்டபூர்வமாக நடவடிக்கையை நான் எடுத்தாக வேண்டும் என்றாலும் இது குறித்து மேலும் தெரிந்து கொள்வதற்கு ஒரு சுயாதீனக் குழுவை நான் நியமிக்க விரும்புகிறேன். நடவடிக்கையில் இறங்குமுன் அதுபற்றி நான் ஆராய்வேன் எனது மனச்சாட்சிக்கு நான் பதிலளித்தாக வேண்டும். நான் எனது கடமையை சரியாகச் செய்தேன் என்று திருப்தி கொள்ள வேண்டும்.

தெரிவுக்குழுவின் தீர்வு குறித்து ஆராய சுயாதீனக்குழுவொன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டாலும் கூட அடுத்த மாதம் நடவடிக்கை எடுப்பது என்ற அரசின் தீர்மானத்தில் அது எந்த விதத்திலும் தலையீடு செய்வதாய் இருக்கமாட்டாது. அதாவது குற்றப்பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதிப்பதும் பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து நீக்குவதுவாகும் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் கிராமியக் கலைகள்

வ.அற்புதன்

மனிதனுக்குள் இயல்பாகத் தோன்றும் உணர்வுகளே கலையுணர்வு முதன்மை பெறுகின்றது. அன்று மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்தி பல கலைகளைத் தோற்றுவித்து அவற்றை இரசித்து அனுபவித்து மகிழ்ந்தான்.

அன்று தொட்டு உழைப்பும், ஓய்வும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தே வந்திருக்கின்றன. பசிக்காக மட்டுமே உழைத்து வாழ்ந்த மக்கள் தங்கள் ரசனையையும் மறந்ததில்லை. பழந்தமிழரின் உள்ளத்திலே ஏற்படும் மகிழ்ச்சி, அன்பு, கோபம், துக்கம், கவலை, ஏக்கம், காதல், கனிவு, போட்டி என தமது உணர்வுகளை கலைகளாக வெளிப்படுத்தினர். அத்தகைய பரிணாமங்கள் தான் நம் மூத்த குடிகளின் கைவரிசைகளாகவும், இம்மண்ணின் கலைகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இன்று இந்தக் கிராமியக் கலைகள் அருகிப் போய் வருவது கவலைக்குரிய விடயமாகவே இருக்கின்றது.

எனினும் ஒரு சில கிராமங்களில் தற்போதும் இந்தக் கிராமியக்கலைகள் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

### கும்மியாட்டம்

பெண்கள் வட்டமாகச் சுற்றி வந்து கைகளால் கொட்டி குனிந்து நிமிர்ந்து ஆடும் ஆட்டம் கும்மியாட்டம் எனப்படும். கும்மாய், கும்முதல், குழுமி என்பதிலிருந்து கும்மி என்று வந்தது. பழந்தமிழ் இலக்கிய நூலான அகநானூறு, சிலப்பதிகாரத்தில் "கொம்மை" என்ற சொற்களும் வருகின்றன. கோயில் விழாக்கள், பூப்புநிகழ்ச்சி, மழை பெய்ய வேண்டுதல் போன்ற வைபவங்களுக்கு கும்மி ஆடப்படுகின்றது.

### கோலாட்டம்

கோலாட்டத்தில் நிறங்கள் தீட்டப்பட்ட கோல்களைக் கொண்டு தாளத்துக்கும், இசைக்கும் ஏற்றவாறு ஒன்றோடு ஒன்று தட்டி ஒலியெழுப்பி பெண்கள் ஆடும் நடனம் இதுவாகும். கோலாட்டத்தில் நேர்கோட்டு வடிவம், பின்னல் வடிவம், வட்ட வடிவ முறை, கூட்ட வடிவ முறையில் என்று பல வடிவங்கள் உண்டு. பாடலுக்கு ஏற்பதனில், மேளக் போன்ற இசைக்கருவிகள் பயன்படுகின்றன. இவ்வாட்டத்தில் நாடகப்பாணியும் பயன்படுத்தப்படுகின்றது.

### ஒயிலாட்டம்

ஆண்கள் குழுவாக கைக்குட்டை வைத்துச் சுழற்றி ஆடும் ஆட்டம் ஒயிலாட்டம் எனப்படும். ஒயிலென்றால் அழகு, அலங்காரம், ஒய்யாரம், சாயம் எனப் பொருள்படும். மேலும் ஒயிலாட்டத்தின் அடவுகளை அடி, சாரி, தட்டு என மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். இவற்றுக்கு பயன்படும் இசைக் கருவி தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி என்பனவும் அத்துடன் காலில் சலங்கை கட்டியும் ஆடுவார்கள்.

### கரகாட்டம்

அலங்கரிக்கப்பட்ட செம்பு அல்லது பித்தளை குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு இசைக்கு ஏற்றவாறு குடம் கீழே விழாதவாறு பெண்கள் ஆடும் ஆட்டம் கரகாட்டம் எனப்படும்.



கரகம் என்ற வார்த்தைக்கு கமண்டலம், பூக்குடம், கும்பம், செம்பு, நீர்க்குடம் என்ற பல அர்த்தங்கள் உண்டு.

செம்பின் வாய்ப்பகுதியை தேங்காயால் மூடுவதற்கென்றே கட்டை வைத்திருக்கின்றனர். இதன் பின் மேற்பரப்பு எனப்படும் குடையை இதன்மேல் பொருத்தி வைப்பார். குடையின் மேலே கிளி, அன்னம், புறா போன்ற தக்கைப்பறவை உருவம் இருக்கும். தெய்வ வழிபாட்டிற்கு ஆடும் கரகம் "சக்திக்கரகம்" என்றும் தொழில்முறைக் கரகத்தை 'ஆட்டக்கரகம்' என்றும் சொல்வர். முன்பு ஆண்கள் பெண் வேடமிட்டு ஆடியதை இன்று பெண்களே ஆடுகின்றனர். இவ்வாட்டத்திற்கு நையாண்டி மேளம், சிறிய உடுக்கை, பெரிய உடுக்கை, சத்துக்குழல், செண்டை, பறை என்பன இசைக்கப்படுகின்றன.

### காவடியாட்டம்

முருக வழிபாட்டின் மரபிலே தோன்றியதே காவடியாட்டம். இவ்வழிபாடு ஈழத்திலே தொன்று தொட்டு வழிபடப்பட்டு வருகின்றது. காவடி குறுந்தடிகளால் செய்யப்பட்டு வளைந்த அமைப்பில் இருக்கும். இரு முனைகளிலும் பற்றுங்கள் இருக்கும். வண்ணக் கடதாசிகளாலும், வெட்டி வேராலும் காவடிகள் அலங்கரிக்கப்படும். காவடி எடுப்போர் நாக்குகளிலும், உதடுகளிலும் வேல் கொண்டு அலகு குத்திக்கொள்வதுண்டு. பாற்காவடி, சந்தனக்காவடி, மச்சக்காவடி, ஆட்டக்காவடி, துலாக்காவடி, தூக்குக்காவடி, தேர்க்காவடி எனப் பல காவடிகள் ஆடப்படுவதுண்டு. சமயக் கலையில் முகிழ்ந்த காவடியாட்டக்கலை பிற்காலத்தில் தொழிற் கலையாகவும் மாற்றம் பெற்றுவிட்டது. இதில் சுழன்றாடுதல், குனிந்து நிமிர்ந்து ஆடுதல், வளைந்து ஆடுதல், வில்லாடுதல், வரவேற்று ஆடுதல், கைவிரித்தாடுதல் ஆகியவை முக்கியமானவையாகும்.

### தெருக்கூத்து

தெருவில் நடத்தப்படும் கூத்து தெருக்கூத்து. நாடகமேடை போன்ற காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்த வெளியரங்கிலும் நடைபெறும் கூத்து தெருக்கூத்து எனப்படுகின்றது. கருப்பொருளாக புராண இதிகாசக் கதைகள், சரித்திர நிகழ்ச்சிகள், வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சியின் முன் வைக்கப்பட்டன. தற்போது காலத்துக்குப் பொருத்தமான கருப்பொருளை முன் வைத்து ஆடப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல கிராமியக் கலைகளை தம் வாழ்வியலோடு இணைத்து ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தவர்கள் எம் முன்னோர்கள்.

அவர்கள் கட்டிக் காத்த உணர்வுகளின் வெளிப்பாடாகிய இந்த அரும்பெரும் சொத்துக்களாகிய கலைகளைக் காக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களாகிய அனைவரிடமுமே இருக்கின்றது. ★

# அவலங்களுடன் ஓமந்தை வீட்டுத் திட்டம்

வானவன்

வவுனியா மாவட்டம் ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் அரச உத்தியோகத்தர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகளில் வீடுகளைக் கட்டிக் குடியேறுவதில் அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா பிரதேச செயலகத்தினால் வவுனியாவில் அமைந்துள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் 600இற்கும் மேற்பட்ட காணிகளற்ற உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கெனக் காணித்துண்டுகள் வழங்கப்பட்டன.

இதுவரை 200 காணித்துண்டுகளில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய காணிகள் சிலவற்றில் கிணறுகள் வெட்டப்பட்டு அத்திவாரமும் இடப்பட்டுள்ளது. ஆனால் சில காணிகளில் எந்தவித வேலைகளும் முன்னெடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளிலுள்ள மரங்களை வெட்டித் துப்புரவு செய்யும் பொருட்டு 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

பின்னர் தேசிய வீடமைப்பு அதிகார சபையிலிருந்து 5 லட்சம் ரூபாவும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியிலிருந்து 2 லட்சம் ரூபாவும் கடனாகப் பெறுவதற்குரிய ஒழுங்குகள் வவுனியா பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டன.



ஆனால் இந்தக் கடன் தொகைகளைப் பெறுவதில் அரச உத்தியோகத்தர்கள் பல பாடுபடுவதாகவே தெரிகின்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் மூன்று கட்டங்களாக கடன் வழங்கப்படுகின்றது. இதற்கு ஆறு மாதங்களாகின்றன. இதேவேளை இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்டு அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் கடனைப் பெறுவதற்கு இரண்டு மாதங்கள் ஆகின்றன. இதற்குப் பலமுறை அலைய வேண்டிய நிலையில் அரச உத்தியோகத்தர்கள் உள்ளனர். மூன்று அறைகள், சமையலறை, மலசலகூடம் உள்ளடங்கிய வீட்டையும் கிணற்றையும் அமைப்பதாயின் தற்போதைய நிலையில் ஆகக் குறைந்தது [illegible] லட்சம் ரூபா தேவைப்படுகின்றது. ஆனால் 7 லட்சம் ரூபா மட்டுமே கடனாக வழங்கப்படுகின்றது. இதற்கும் வட்டியுடன் சேர்த்து மாதாமாதம் 11 ஆயிரம் ரூபா உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படுகின்றது. இதனால் சம்பளத்தில் கழித்தது போக மீதிப்பணத்தில் வாழ்க்கை நடத்துவதில் இந்த உத்தியோகத்தர்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் கடன் தொகையாகக் கிடைத்தது போக மீதிப்பணத்தைத் திரட்டுவதில் சிரமங்கள் வேறு.

அத்துடன் சுற்றிவரக் காடு [illegible] பெற்றுள்ளது. சுமார் 6 கிலோமீற்றர் நீளத்தை உள்ளடக்கிய இந்தப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவுமே இல்லை. தினமும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. கிணறுகளுக்குப் போடப்பட்டுள்ள வாளி, கம்பி உட்பட கம்பிக் கட்டைகள், கம்பிகள், கல், மணல், சீமெந்து உட்பட பல பொருள்களும் திருடர்களின் கைவரிசைக்கு ஆளாகி வருகின்றன.

ஏ-9 வீதியில் ஓமந்தை பொலிஸ்நிலையம் அமைந்துள்ளது. ஆனால் பொலிஸாரின் கண்காணிப்புப் பணிகள் இங்கு இடம்பெறுவதில்லை. சுற்றிவரக் காடு அமைந்துள்ளதால் விஷ ஜந்துக்களின் நடமாட்டத்துக்கு இங்கு குறைவில்லை. பாம்புக் கடிக்கு ஆளானோர் வைத்தியசாலைக்குச் செல்வதாயின் வாகன வசதிகளும் இல்லை. வாகனங்கள் இங்கு வந்து செல்வதற்கான வசதிகளும் இதுவரை ஏற்படுத்தப்படாத நிலையே காணப்படுகிறது.

இங்குள்ள குறுக்கு வீதிகள் எவையும் உரிய வகையில் அமைக்கப்படாமையால் கட்டட வேலைகளுக்கு பொருள்களை ஏற்றிவரும் வாகனங்கள் புதையுண்டு நிற்கும் நிலையே காணப்படுகின்றது.

மேலும் மழை காலத்தில் கிடைக்கும் நீர் குளத்தைச் சென்றடையக் கூடிய வகையில் வடிகால்கள் அமைக்கப்படாமையால் வெள்ளம் இந்தப் பகுதியில் தேங்கி நிற்பதைக் காண முடிகின்றது. இதனால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளது. மேலும் வீதிகளினூடாக நடந்து செல்ல முடியாத நிலையில் சிலர் வழுக்கி விழுவதையும் காணமுடிகின்றது.

இத்தனைக்கும் மத்தியில் வீடுகளைக் கட்டிக் குடியேறியவர்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படுகின்றது. இதனால் இரவு வேளைகளில் அச்சத்துடன் பொழுதைக் கழிக்க வேண்டிய நிலையில் வீட்டு உரிமையாளர்கள் உள்ளனர். இருளைப் பயன்படுத்தி திருடர்களும் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். மேலும் அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் கல்வியைத் தொடர்வதில் இடர்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தக் குடியேற்றத்திட்டத்தில் சிறுவர் பாடசாலை, விளையாட்டு மைதானம், கடைகள் என்பன அமைக்கப்படாமையால் மருந்துப் பொருள்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. எனவே இனியும் தாமதிக்காது இந்தக் குடியேற்றத்திட்டத்துக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து தர வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

இது மேலும் தாமதமடையுமாயின் இந்த வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்ததன் நோக்கமே வீணாகிவிடுமென்பதை அரசும் அரச அதிகாரிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதற்கு என்ன வழி?

ஒருவர் தன்வழியே மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தார்.

அந்த வேளை அவரிடம் ஒருவன் சென்றான்.

''ஐயா! உங்களைக் கொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். அதற்கு ஒரு வழி சொல்லுங்கள் என்றான்.

அவர் உடனே அவனது கன்னத்திலே பளார் என்று அறைந்தார். அதன் பின்னர் இவன் வாயைத் திறக்கவில்லை. பேசாமல் விலகிப் போய் விட்டான்.

இந்தக் காலத்தில் எவரிடமும் போய் அப்படி ஒரு கேள்வி கேட்டாலும் இப்படி ஒரு அறைதான் பதிலாக விழும். ஆனால் அந்தக் காலத்தில் ஒருவர் ஒரு கேள்வி கேட்டார்.

அதற்கு நான்கு பேர் பதில் கூறினார்கள்.

சரி... அந்தக் காலத்தில் அவ்வாறான ஒரு கேள்வியை யார் கேட்டார் என்றால்...

தருமர்தான்.

பாரதப் போர் நடக்கின்ற நேரம்..

அந்தப் போர் ஆரம்பிக்கும் நேரத்திலே அருச்சுனன் போர் செய்ய மாட்டேன் என்று கூறினான். அதனாலே கண்ணன் அவனுக்கு கீதாசாரம் செய்ய வேண்டி ஏற்பட்டது.

சரி, இனிமேல் யுத்தம் ஆரம்பமாகிவிடும் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கும் நேரம்.. தருமர் என்ன கூறினார் என்றால்..

தன்னுடைய கவசத்தையும், ஆயுதங்களையும் கழற்றி வைத்துவிட்டு பீஷ்மரை நோக்கி நடந்து போகிறார்.

ஏன் அவர் அங்கே போகிறார் என்று யாருக்கும் விளங்கவில்லை. இருந்தாலும் அவருடைய சகோதரர்களும், கிருஷ்ணரும் அவர் பின்னால் போகிறார்கள்.

தருமர் நேராக பீஷ்மர் முன்னால் போய் நின்று ''நான் உங்களை எதிர்த்து போர் செய்ய வேண்டும் அதுக்கு தங்களுடைய ஆசீர்வாதம் வேண்டும் என்றார்.

இவர் இவ்வாறு கேட்டதும் பீஷ்மர் சந்தோஷப்படுகின்றார்.

''நீ என்னுடைய ஆசியைப் பெறாமல் யுத்தத்தை ஆரம்பித்திருந்தால்.. நீ தோற்றுப் போக வேண்டும் என்று சபித்திருப்பேன். ஆனால்.. இப்பொழுது நீ என்னுடைய ஆசியைப் பெற்றதனால்.. நீதான் வெற்றியடைவாய்!'' என்று கூறி, இன்னும் என்ன வேண்டும்! என்று கேட்டார்.

''உங்களைக் கொல்வதற்கு என்ன வழி'' என்று கேட்டார்.

''பின்னால் வா சொல்கின்றேன் என்றார். அதுபோல பின்னால் செல்கிறார். பிறகு தருமர் துரோணாச்சாரியாரின் ஆசியைப் பெற்றார். துரோணர் என்ன கூறினார் என்றால்..

''எங்கு தருமர் இருக்கிறாரோ அங்கு கிருஷ்ணர் இருப்பார். எங்கே கிருஷ்ணர் இருக்கின்றாரோ அங்குதான் வெற்றி! என்றார்.

அவரும் தன்னைக் கொல்வது எப்படி என்ற விபரத்தை சொல்லிக் கொடுக்கிறார்.

அதுபோல தருமர் கிருபாச்சாரியாரிடம் போகிறார்.

''உங்கள் ஆசி வேண்டும்'' என்கிறார். அவரும் ஆசீர்வாதம் செய்கிறார்.

அடுத்தபடியாக ''உங்களை எப்படிக் கொல்வது? என்று கேட்க விரும்புகிறார். ஆனால் வார்த்தைகள் வரவில்லை.

இதைக் கிருபாச்சாரியார் புரிந்து கொள்கிறார். புரிந்து கொண்டு கூறினார்: ''என்னை யாராலும் கொல்ல முடியாது.. ஆனால் உனக்குத்தான் வெற்றி என்கிறார்.

இந்த மூன்று பேருமே என்ன சொல்கிறார்கள் என்றால்..

''செஞ்சோற்றுக் கடனுக்காக, நாங்கள் துரியோதனன் பக்கம் தான் இருந்து போர் செய்ய வேண்டும். ஆனாலும் எங்கள் ஆசி உனக்குத்தான்!'' என்றார்கள்.

தருமர் இறுதியாக மாமா சல்லியனிடம் செல்கிறார். ஆசீர்வாதம் பெற்றுக்கொள்கிறார் பிறகு ஒரு வேண்டுகோள் வைக்கின்றார்.

அது என்ன என்றால்...

''கர்ணன்-அர்ஜுனனோடு சண்டை போடுகிற நேரம் வரும். அந்த நேரத்தில் கர்ணனுடைய உற்சாகத்தை நீங்கள் குறைக்க வேண்டும்! என்று கேட்டார்.

எந்தக் காரியத்தை செய்ய வேண்டும் என்றாலும் பெரியவர்கள் ஆசீர்வாதத்தை வாங்கித்தான் ஆரம்பிக்க வேண்டுமாம்.

தருமர் அதைத்தான் செய்தார். அதனாலேதான் வெற்றி கண்டார்.



இந்த காலத்திலேயெல்லாம் அவ்வாறு பெரியவர்களிடம் யாரும் ஆசீர்வாதம் வாங்குவது இல்லை.

எதிரியிடம் போய் உன்னைக் கொல்லுவதற்கு என்ன வழி என்றும் யாரும் கேட்டுக் கொள்வதில்லை!

அப்படிக் கேட்டாலும் இவன் உயிரோடு திரும்பி வரமுடியாது.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மறைக்கல்வியை நோக்காகக் கொண்டு ஆரம்பமான நாவாந்துறை றோ.க.வித்தி.



**லக்ஸ்மன்**

மறைக் கல்விப் பாடசாலையாக 1871 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை அதன்பின் கத்தோலிக்க மிஷனுக்குள் உள்வாங்கப்பட்டு நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையாக இயங்கியது. பாடசாலைக் கட்டடத்தை திருச்சபையே கட்டிமுடித்து ஒரு ஆரம்பப் பாடசாலையாக ஆண்டு ஐந்து வரை முதலில் இருந்து பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது க.பொ.த. சாதாரண தரம் வரை வகுப்புக்களைக் கொண்டுள்ளது.

தற்போது 752 மாணவர்களுடனும் அதிபருடனும் 42 ஆசிரியர்களையும் ஒரு பகுதி நேர ஆசிரியரையும் கொண்ட இந்தப் பாடசாலை வகை இரண்டுக்குள் அடங்குகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் மிகவும் கூடிய மாணவர் தொகையைக் கொண்ட இரண்டாவது மறைக்கல்விப் பாடசாலை இதுவாகும். மறைக் கல்விப் பாடசாலையாக இருந்த காலத்தில் இருந்து இங்கு அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளவர்களின் விவரங்கள் தெரிந்து கொள்ளக் கூடியதாக இல்லை. தற்போது அதிபராக பொறுப்பில் உள்ளவர் எல்.எக்ஸ்.அன்ரன்.

141 வருடங்களாக நாவாந்துறையின் கல்விக் கலசமாகத் திகழும் இந்தப் பாடசாலையின் வரலாற்றுச் சாதனையில் முன்னைய அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. கடலோரப் பிரதேசத்துக்குரிய பின்புலத்தைக் கொண்ட இந்தப் பாடசாலை அதற்குரிய தனித்துவத்துடன் புறநகர்ப்பகுதிகளுக்கான நாகரிகத்தையும் கொண்டுள்ளது. குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பச்சூழலைக் கொண்ட பிள்ளைகளே மிகவும் கூடுதலாக உள்ளனர்.

> **விளையாட்டுத்துறையில் முன்நிலையை எட்டிக்கொண்டிருக்கிறது. வருடந்தோறும் இடம்பெறும் பல்வேறு மட்டப் போட்டிகளிலும் மாணவர்களின் திறமைகள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன என்று இந்தப் பகுதி இளைஞர்கள் கூறுகின்றார்கள்.**

கஷ்டங்களின் மத்தியிலும் மாறிவரும் உலகின் சவால்களை வெற்றிகரமாக முகம்கொடுத்து திறன்மிகு மாணவரை உருவாக்குதல் என்னும் தூரநோக்கை உடையது. கடின உழைப்பே வெற்றி என்ற மகுடவாசகத்தைக் கொண்டு இயங்கும் இந்தப் பாடசாலை உரிய முறையில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

விதந்துரைக்கப்பட்ட தேர்ச்சிகளை பெறவும் சமூகப் பொருத்தப்பாட்டையும் சவால்களையும் எதிர்கொள்ளும் திறமையையும் மாணவர் மத்தியில் வளர்த்தெடுக்கும் இலக்கு நோக்கிய செயற்பாடுகளுடன் செயற்பட்டு வருகின்றது. வசதிகளற்ற நிலைகள் இருந்த போதும் வளர்ச்சியடைந்த பாடசாலைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இது குறித்து வறிய நிலையில் உள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர். அதற்கான வலுவூட்டல்களை அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கிறார்கள் என்று நாவாந்துறை மக்கள் திருப்தியடைகின்றனர்.

கடந்த ஆண்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 18.6 வீதமானவர்கள் சித்தியடைந்துள்ளனர். மிகவும் கூடுதலான மாணவர்கள் சித்தியடையவேண்டும் என முயற்சிக்கப்பட்ட போதும் தமது வாழ்க்கைத்தரத்துடன் பெற்றோர் திருப்தி அடைவதும் பாரம்பரிய தொழில்வசதி ஒன்று கைவசம் இருப்பதும் மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் பின்னடைவை ஏற்படுத்துவதாக அதிபர் கவலை தெரிவித்தார்.

ஆசிரியர்களின் திட்டமிட்ட வழிகாட்டலினால் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களின் தேர்ச்சி நிலை பெறுபேறுகளினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அரசின் சான்றிதழுக்கான எழுபது தேர்ச்சிப் புள்ளிகளை இந்த முறை 52 வீதமான மாணவர்கள் பெற்றுள்ளனர்.

விளையாட்டுத்துறையில் முன்நிலையை எட்டிக்கொண்டிருக்கிறது. வருடந்தோறும் இடம்பெறும் பல்வேறு மட்டப் போட்டிகளிலும் மாணவர்களின் திறமைகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன என்று இந்தப் பகுதி இளைஞர்கள் கூறுகின்றார்கள். உதைபந்தாட்டம் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டில் 16-17 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டத்தில் மாவட்ட மாகாண மட்டத்தில் சாதனை படைத்துள்ளதாகப் பாடசாலை வட்டாரம் பெருமகிழ்வுடனுள்ளது. இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனச் சுற்றுப்போட்டியிலும் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளது. கபடி, கரப்பந்து, மென்பந்து, துடுப்பாட்டம் ஆகியவற்றிலும் கலந்துகொண்டுள்ளனர். ஆண், பெண்களுக்கான இரு அணிகளுமே விளையாட்டுத்துறையில் சிறந்து காணப்படுகின்றன. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளும் சிறுவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைகின்றன.

கலைவிழாக்கள் தமிழ் ஆங்கில தினம் ஆகியவற்றில் மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்துகொள்கிறார்கள். கஷ்டமான நிலையிலும் கல்வியில் மேம்பாடு காண்பது போல் இணைப்பாடவிதானங்களிலும் ஆசிரியர்களின் செயற்பாடுகளில் அக்கறை சிறப்பாக அமைந்துள்ளது.

மாணவர்களின் எதிர்காலம் கல்வி உயர்ச்சிகளிலேயே தங்கியுள்ளது என்பதால் மேலதிக வகுப்புகள் ஊடாக அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஆசிரியர்கள் உதவுகிறார்கள். இதன் ஆரம்பம் நாவாந்துறைப் பகுதிக்கு இன்றியமையாதது என்பதை பின் தங்கிய பகுதியினரான நாம் உணருகிறோம். எமது கஷ்டநிலை காரணமாக பாடசாலைக்குப் பெரிதாக எம்மால் எதையும் செய்துவிடமுடியவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். முன்னைய அதிபர்களும் தற்போதைய அதிபர், ஆசிரியர்களும் எமது கஷ்டங்களைத் தெரிந்து கொண்டு பிள்ளைகளை கல்வியில் முன்னிலைப்படுத்த விரும்புகிறார்கள். அது எங்களுக்கு பெரும் ஆறுதலாக இருக்கிறது என்கிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பது வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்தோர் மீள் குடியமர்வு

## சாகாமத்தில் அமைச்சு நடவடிக்கை

திருக்கோவில்,டிசெ.17

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள சாகாமம் பகுதியில் 30 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட இயற்கை இடர், போர் ஆகியவற்றால் இடம்பெயர்ந்த குடும்பங்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த மீளக்குடியமர்வு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பிரதேசங்களில் 30 வருடங்களுக்கு முன்னர் 500 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியிருந்தன. தற்போது அந்தக் குடும்பங்கள் அகதிகளாகத் தொண்டர் நிறுவனங்களின் அனுசரணையுடன் நாடோடிகள் போன்று வாழ்க்கை நடத்தி வருகின்றன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீளக்குடியேற்றம் செய்வதற்கு முதற்கட்டமாக சாகாமத்துக்குளம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தை அண்டிய பகுதிகளில் தடாகங்கள் அமைக்கப்பட்டு அந்தத் தடாகங்களில் மீன் வளர்ப்பதற்கு 35 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அவர்கள் மீன் வளர்த்து அவற்றை விற்பனை செய்து வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அவர்களது வயல் நிலங்களில் பெரும்போக நெற் செய்கையில் ஈடுபடுவதற்கான உதவிகளும், விதை நெல்லும் கமத்தொழில் திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்பட்டு வருகின்றன.

மேட்டுநிலப்பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு 'திவிநெகும' வேலைத் திட்டத்தின் கீழ் உபகரணங்கள், விதை தானியங்கள் ஆகியன வழங்கப்பட்டன.

அடிப்படை வசதிகளான போக்குவரத்து, வைத்திய வசதிகள் ஆகியனவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




மட்டக்களப்பு நகரத்தின் மத்தியில் அகலமாக்கப்பட்டு காப்பெற் வீதியாக அமைக்கப்பட்ட நெடுஞ்சாலையின் நடுப் பகுதியில் பொருத்துக் கற்களைப் அமைத்து அழகுபடுத்தும் பணியில் நேற்றுமுன்தினம் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

## சமூக அபிவிருத்தி மன்றத்தில் திருட்டு

மட்டக்களப்பு,டிசெ.17

ஏறாவூரில் இயங்கிவரும் சமூக அபிவிருத்தி மன்றத்தை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த கணினியையும் அதன் உதிரிப்பாகங்களையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை திருடியுள்ளனர்.

திருடர்கள் பொருள்களை இடைவழியில் வைத்துவிட்டு தலைமறைவாகிச் சென்றுள்ளனர் என்று அந்த நிறுவனத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் எம்.ரீ.பெனாஸிர்பானு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் கைரேகை நிபுணர்களை அழைத்து திருடப்பட்டு கைவிட்டுச் சென்ற பொருள்களிலிருந்த கைவிரல் அடையாளங்களையும் அலுவலகத்திலுள்ள ஏனைய தடயங்களில் காணப்பட்ட அடையாளங்களையும் பதிவு செய்துள்ளனர். (ச)

## ஊடகவியலாளருக்கு செயலமர்வு



அம்பாறை,டிசெ.17

போரின் பின் பத்திரிகை அறிக்கையிடல் தொடர்பில் ஊடகவியலாளர்களின் பொறுப்புக்கள் எனும் தலைப்பில் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அம்பாறை மொன்டி ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில், தமிழ், சிங்கள மொழிகளில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தச் செயலமர்வில் மாகாண ஊடகவியலாளர் மற்றும் ஊடக ஒழுக்க நெறி, போரின் பின்னர் பத்திரிகையில் அறிக்கையிடல் மற்றும் அதன் சட்ட சூழ்நிலை தொடர்பில் ஊடகவியலாளர்களின் பொறுப்புக்கள் போன்ற தலைப்புக்களில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன, சிரேஷ்ட ஊடகவியலாளர் கருணதாஸ சூரியஆரச்சி உட்படப் பலர் கருத்துரை நிகழ்த்தினர்.

இந்தச் செயலமர்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, அம்பாறை மாவட்ட செயலாளர் நீல் த அல்விஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-30)

## பாரம்பரிய பிரதேசத்தைப் பாதுகாக்க வேறுபாடுகளை மறந்து முன்வருக

### ஆலையடிவேம்பு மக்களுக்கு அழைப்பு

ஆலையடிவேம்பு,டிசெ.17

ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள மக்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும் என்று ஆலையடிவேம்பு கால்நடை பால் பண்ணையாளர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.குணம் கப்புகனார் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

ஆலையடிவேம்பு தர்ம சங்கரி கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆலையடிவேம்பு பிரதேசத்துக்கான மேய்ச்சல் தரையாக 1976ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி 231ஆம் இலக்க வர்த்தமானி மூலமாக சாகாமம் பிரதேசத்தில் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் அளவை செய்து பிரகடனம் செய்யப்பட்டது. அதனை மேய்ச்சல் தரையாக மக்கள் பயன்படுத்தி வந்தார்கள்.

நாட்டில் ஏற்பட்ட அமைதி நிலையைத் தொடர்ந்து அந்தக் காணிகள் தங்களது வயல் காணிகள் என்று ஒருசாரார் அதனுள் பிரவேசித்து நெற்செய்கையில் ஈடுபட்டனர். இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தபோதிலும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் உயர்மட்ட அதிகாரிகளிடம் அதற்கான உத்தரவைப் பெற்றும் கூட எந்தவித நடவடிக்கையும் நடைபெறவில்லை என்பதற்கு உதாரணமாகத்தான் இன்று பிரதேச மட்டத்தில் அரச நடமாடும் சேவைகள் நடத்தப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதிகாரிகளும் மாடிகளைக் கொண்ட அலுவலகங்களும் இருக்கும் போது நடமாடும்சேவை இடம்பெறுவது வெறும் கேலிக்கூத்தாக இருக்கிறது.- என்றார். (ச)

## பொத்துவிலில் விழிப்புணர்வு கருத்தரங்கு

பொத்துவில்,டிசெ.17

தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பொத்துவில் பிரதேச வர்த்தகர்களுக்கும் நுகர்வோருக்குமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கு பொத்துவில் பொதுநூலகத்தில் அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ. குத்தூஸ் தலைமையில் நடைபெற்றது.

பொத்துவில் நகரில் மனித பாவனைக்குப் பொருத்தமற்ற பொருள்கள் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளால் அழிக்கப்பட்டன. தவறிழைத்த வர்த்தகர்களுக்கு இந்தக் கருத்தரங்கில்அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இந்தக் கருத்தரங்கில் பொத்துவில் பிரதேச வர்த்தகர்களும், நுகர்வோரும் கலந்துகொண்டனர். (ச)

## மீனவர்களின் குறைகளை கேட்டறிந்தார் அமைச்சர்



மட்டக்களப்பு,டிசெ.17

மட்டக்களப்பு, வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்துக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சென்ற கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட், மீனவர் சங்கத் தலைவர்களையும் மீனவத் தொழிலாளர்களையும் சந்தித்துள்ளார். அவர்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை, வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக அதிகாரிகளுடனும் இவர் கலந்துரையாடினார். (ச)

## திருட்டைக் கட்டுப்படுத்த விசேட கூட்டம்



மட்டக்களப்பு,டிசெ.17

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் கடந்த மூன்று வாரங்களாக இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட கூட்டம் குறுமண்வெளி சித்தி விநாயகர் ஆலய முன்றிலில் இடம் பெற்றது.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.ஆர்.மாணவடு தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், திருட்டை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பாக ஆராயப்பட்டது. இந்நிகழ்வில் கிராம சேவகர்கள், சிவில் பாதுகாப்பு [illegible] கலந்து கொண்டனர். (ச)

## உள்ளூராட்சி மன்ற அபிவிருத்தி சுனாமிக்குப் பின்னரே வேகத்தில்

### உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் சொல்கிறார்

மட்டக்களப்பு,டிசெ.17

உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தியை நோக்கிய செயற்பாடானது சுனாமிக்குப் பின்னர்தான் முழு வேகத்துடன் நடந்து கொண்டிருக்கிறது என்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் எஸ்.உதயகுமார் கூறினார்.

அம்பாறை, மொண்டி ஹோட்டலில் பாம் பவுண்டேசன் அமைப்பின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் நடைபெற்றுவரும் செயற்திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு பிரதேச சபை பகுதியிலும் வாழும் மக்கள் அந்தப் பிரதேச சபையுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணவேண்டும். இதற்கு சனசமூக நிலையங்களின் செயற்பாடு இன்றியமையாததாகும். இதற்காக வேண்டி அனைவரும் பாடுபடவேண்டும்.

**ஒவ்வொரு பிரதேச சபை பகுதியிலும் வாழும் மக்கள் அந்தப் பிரதேச சபையுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணவேண்டும். இதற்கு சனசமூக நிலையங்களின் செயற்பாடு இன்றியமையாததாகும்.**

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பிரதேசத்தில் இருந்துதான் அதிகளவான திட்டங்கள் கிடைத்துள்ளன. இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

சில இடங்களில் உள்ள பிரதேச சபைகள் இன்றும் இயங்காத தன்மையாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அது தற்காலச் செயற் பாட்டுக்குப் பொருத்தமில்லாத தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

உள்ளூராட்சி மன்றத்தின் செயற்பாடானது வசதிகளை செய்துகொடுப்பதிலே முன்னின்று உழைக்கும். மக்களின் நன்மைக்கும், வருமானத்தை அதிகரிப்பதற்கும் பாம் பவுண்டேசன் நிறுவனத்தினைப் பயன்படுத்தமுடியும்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷர்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரியும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**இடபர்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். புண்ணியத் தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் கட்டுப்பாடுகள் விலகும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனர்:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**கடகர்:** குடும்பத்தில் அமைதி நிலவும். சகோதர வகையில் நன்மை கிட்டும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**சிங்கர்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கன்னி:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். பிரபலங்களின் நட்பு கிட்டும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள்.

## நாளை

மார்கழி-03 செவ்வாய்க்கிழமை 18.12.2012
திதி: ஷஷ்டி பி.இ. 04.47 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப 01.33 வரை
சுபநேரம்: 10.53- 12.23 வரை
ராகுகாலம்: 03.23- 04.53 வரை
(விநாயகர் ஷஷ்டி விரதம்)

**துலாபர்:** உறவினர்கள் பாராட்டுவார்கள். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**விருச்சிகர்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மகரர்:** பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். சகோதர வகையில் பிரச்சினைகள் வரக்கூடும். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**கும்பர்:** வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென நினைப்பீர்கள். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம் அடைவீர்கள். உடல் நலத்தில் கவனம் தேவை. யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசாதீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப்பேசி வசூலிக்கப்பாருங்கள்.

**மீனர்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. சகோதர வகையில் நன்மை கிட்டும். பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 2 | 3 | | | 9 | | 7 |
| 4 | 3 | | | | 7 | | | |
| | | | | 4 | 9 | 5 | | 8 |
| | | | | 5 | | 4 | 9 | 6 |
| | | 6 | 8 | | 4 | 2 | | |
| 2 | 4 | 5 | | 1 | | | | |
| 6 | | 3 | 4 | 2 | | | | |
| | | | 6 | | | | 2 | 4 |
| 9 | | 4 | | | 3 | 8 | 6 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 1 | 2 | 9 | 4 | 5 | 8 | 7 |
| 4 | 2 | 8 | 3 | 7 | 5 | 6 | 1 | 9 |
| 9 | 7 | 5 | 6 | 1 | 8 | 4 | 3 | 2 |
| 6 | 4 | 7 | 8 | 3 | 1 | 2 | 9 | 5 |
| 8 | 3 | 9 | 4 | 5 | 2 | 1 | 7 | 6 |
| 1 | 5 | 2 | 9 | 6 | 7 | 8 | 4 | 3 |
| 7 | 8 | 6 | 1 | 2 | 3 | 9 | 5 | 4 |
| 2 | 1 | 3 | 5 | 4 | 9 | 7 | 6 | 8 |
| 5 | 9 | 4 | 7 | 8 | 6 | 3 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ...


# பாஷாண உத்வாஷண சபிண்டீகரண அழைப்பு

கடந்த (08.12.2012) சனிக்கிழமை
இரவு சிவனடி சேர்ந்த

அமரர் சிவஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள்
லோகநாதக்குருக்கள்

அவர்களின் பாஷாண உத்வாஷண
(கல்லெடுப்பு) நிகழ்வு நாளை (18.12.2012)
செவ்வாய்க்கிழமை காலை 5 மணிக்கு
அவரது இல்லத்தில் நடைபெற்று
நாளை மறுதினம் (19.12.2012)
புதன்கிழமை நண்பகல் நடைபெறும் சபிண்டீகரண
நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
உற்றார், உறவினர், நண்பர்கள்,
அனைவரையும் அழைக்கின்றோம்.




குருக்கள் பகுதி,
கரணவாய், கரவெட்டி.

குடும்பத்தினர்.
077 7393 075

(267515-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம் மற்றும் பதவியேற்பை நினைவு கூர்ந்து அனுராதபுரம் ருவான்வெலிசாய விஹாரையில் நிர்மாணிக்கப்பட்ட வலது குறைந்தவர்களுக்கான விசேட பாதையை அவர் திறந்து வைத்தார்.

## பெற்றோல் விலை அதிகரிப்பு; சாதாரண மக்களுக்கே பாதிப்பு

### திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கொழும்பு,டிசெ.17

பெற்றோல் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டமை வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சாதாரண மக்களின் உணர்ச்சிகளை தூண்டி விடும் செயல் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

70 வீதமான வாகனங்கள் பெற்றோலினால் இயங்குபவை. அவற்றில் 65 வீதமானவை மோட்டார் வாகனங்கள் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

பெற்றோல் விலை அதிகரிப்பின் காரணமாக மோட்டார் சைக்கிளை பயன்படுத்



தும் சாதாரண மக்களை அரசு மேலும் வறுமைக்குள் தள்ளி விட்டுள்ளது என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ச)

## சிவப்பு மழையால் நாய்கள் இறப்பா?

கொழும்பு,டிசெ.17

பொலநறுவை, திமுலாகல பிரதேசத்தில் உள்ள பல பாகங்களில் எந்தவித நோய்த் தொற்றும் இன்றி பெருந் எண்ணிக்கையான நாய்கள் இறந்துள்ளன.

கடந்த சில நாள்களாக மன்னம்பிட்டி பிரதேசத்தில் பெய்த சிவப்பு மழை காரணமாக நாய்கள் பாதிக் கப்பட்டிருக்கலாம் என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

எனினும் நாய்களின் இறப்பு தொடர்பில் தமக்கு தகவல் கிடைக்கப் பெறவில்லை என்று மன்னம்பிட்டி பிரதேசத்துக்குப் பொறுப்பான வைத்தியர் தெரிவித்தார்.

## இலஞ்ச, ஊழல் சட்டத்தில் மாற்றம்

கொழும்பு,டிசெ.17

இலஞ்ச, ஊழல் தொடர்பான சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது என்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

1954ஆம் ஆண்டு இலஞ்சம், ஊழல் தொடர்பான சட்டத்தின் படி அரச ஊழியர்களது குற்றச்சாட்டுகள் மட்டுமே பதிவாகின்றன.

இந்தநிலையில் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் தொடர்பான இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளும் உள்ளடங்கக் கூடியதாக இந்த மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது என்று இலஞ்ச ஊழல் ஒழிப்புத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களில் இலஞ்சம் பெறுதல் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளமையே இந்தத் தீர்மானத்தை எடுக்கக் காரணமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## குற்றப் பிரேரணையில் ஐ.நா. தலையிடாது

### திவயின தகவல்

கொழும்பு,டிசெ.17

குற்றப் பிரேரணை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையீடு செய்யாது என்று 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு எவ்வித தலையீடும் செய்யப்போவதில்லை.

உள்நாட்டு, வெளி நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் குற்றப் பிரேரணை தொடர்பில் ஏற்கனவே பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், இது உள் விவகாரப் பிரச்சினை என்பதனால் இந்தப் பிரச்சினையில் தலையீடு செய்யப் போவதில்லை என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக திவயின சுட்டிக் காட்டியுள்ளது. (ச)

# சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்குச் சிறந்தது

### அச்சப்படத் தேவையில்லை என்கிறார் ஐ.தே.கட்சியின் எம்.பி. மங்கள சமரவீர

கொழும்பு,டிசெ.17

சமஷ்டி ஆட்சியே இலங்கைக்கு தேவைப்படுகிறது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

வாராந்த செய்தி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நீக்குவதற்கு பதிலாக கூடுதல் அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பகிரும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்

13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு போதுமானவை அல்ல. தேவையானால், தெற்கில் மாகாண சபை முறைமையை இரத்துச் செய்ய ஐக்கிய தேசியக்கட்சி இணங்கும் என்று அவர் கூறினார்.

இலங்கைக்கு தேவையானது சமஷ்டி ஆட்சி முறை. 2000 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவ்

**13 இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு போதுமானதல்ல.**

வாறான தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்கவே முயற்சி செய்தார்.

நாட்டை சமஷ்டி நாடாக மாற்றுவதற்கு அச்சமடையத் தேவையில்லை. சமஷ்டி ஆட்சியே இலங்கைக்கு தேவைப்படுகிறது என்று



அவர் கூறினார்.

ஐக்கிய இராச்சியமாக இருக்கும் பிரிட்டனில் ஸ்கொட்லாந்து, வேல்ஸ் பிராந்தியங்களில் தனியான நாடாளுமன்றங்கள் இருக்கின்றன என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)

## கார்ப் பந்தய வாகன இறக்குமதி அரசுக்கு பெரும் நட்டம்

கொழும்பு,டிசெ.17

கார்ப்பந்தயத்துக்கான வாகன இறக்குமதியில் அரசுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட்டமையால் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேர கார்ப் பந்தயப் போட்டிகளுக்காக கார்ல்டன் மோட்டர் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் 19 வாகனங்களை இறக்குமதி செய்துள்ளது.

அரசின் புதிய வரிச் சலுகை அடிப்படையில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதனால் சுமார் 200 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. குறித்த நிறுவனம் வெறும் துறைமுகக் கட்டணங்களை மட்டும் செலுத்தி இந்த வாகனங்களை இறக்குமதி செய்துள்ளது.

இதேவேளை, கார்ப் பந்தயம் நடத்தும் நோக்கில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. போட்டிகளின் நிறைவில் மீள் ஏற்றுமதி செய்யப்படும் என்று கார்ல்டன் மோட்டர் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த உறுதிமொழியை நூறு வீதம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (ச)

## மதுபோதையில் வாகனம் செலுத்தியோர் மாட்டினர்

கொழும்பு,டிசெ.17

மதுபோதையில் வாகனம் செலுத்திய 7 சாரதிகளை கண்டி போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

கண்டி நகரில் பொலிஸார் நேற்றுமுன்தினம் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோதே இந்த சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு கண்டி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

## கஞ்சா பொதிகள் சிக்கின

அநுராதபுரம் புதிய பஸ் நிலையத்திலிருந்து திருகோணமலைக்கு கொண்டு செல்வதற்காக வைத்திருந்த 1 கிலோ கிராம் எடையுள்ள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன. புல்மோட்டை பொலிஸ் விசேட பிரிவின் உப பொலிஸ் பரிசோதகருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், சந்தேகநபர்களைப் பின்தொடர்ந்த பொலிஸார் அநுராதபுரம் புதிய நகர பஸ் தரிப்பிடத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் புதிய நகர பஸ் தரிப்பிடத்தில் ஹொரவப் பொத்தானைக்குச் செல்லவிருந்த பஸ்ஸில் வைத்து கஞ்சா [illegible] செய்யும்போதே சந்தேக நபர்களை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர். (ச)

## விஞ்ஞான வினாத்தாள் முன்பே வெளியானதா?

### சி.ஐ.டி விசாரணை

கொழும்பு,டிசெ.17

தற்போது நடைபெற்று வருகின்ற ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியாகி விட்டனவா? என்பது தொடர்பிலான விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் ஆசிரியரால் வழங்கப்பட்டுள்ள மாதிரி வினாத்தாளில் உள்ள கேள்விகளில் 18 கேள்விகளும் படங்களும் விடைகளும் பரீட்சையின்போது வழங்கப்பட்ட வினாத்தாளில் உள்ள கேள்வி,பதில் படங்களும் ஒரேமாதிரியாக இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதனையடுத்தே இது தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விஞ்ஞான பாடத்துக்கான பரீட்சை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பிப்பதற்கு முன்னர் கம்பஹா பிரதேசத்திலேயே இந்த மாதிரி வினாத்தாள் குறித்து ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கோப் அறிக்கையின் பரிந்துரை உதாசீனம்

கொழும்பு,டிசெ.17

கோப் அறிக்கையின் பரிந்துரைகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன என்று அரச வியாபாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்டோருக்கான வரிகள் அரச நிறுவனங்களினால் செலுத்தப்படுகின்றன.

அரசநிறுவனங்கள்,திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் நிலவும் இவ்வாறான முறைகேடுகளினால்அதிகளவு நட்டம் ஏற்படுகிறது என்றுஅரச வியாபாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Christmas Dinner Party
Tuesday 25 December 2012 @ 7.00pm
## Hotel Green Grass
Rs.999/=

* Buffet Dinner
* Santa Claus Entertainment,Games & Gifts For Kids
* Children Under 12 years- free of Charge

for more info 021 222 4385 / 0777 807 568

(tickets available at Hotel Reception, ... Pharmacy, Louise Hotel)

(26835)


# வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
**செல்லப்பா ஐயாத்துரை**



மலர்வு
28.12.1932

உதிர்வு
17.11.2012

கடந்த 17.11.2012 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.12.2012) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இல.26,துரவடி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(25812)(2.6.7)

# தமிழக மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்

கச்சதீவுக்கு அருகே தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தி யுள்ளதாக இந்திய ஊட கங்கள் தகவல் வெளியிட் டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கடலில், மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது கற்களை வீசித் தாக்கியுள்ளனர். மேலும், மீனவர்களின் 5 படகுகளில் இருந்த மீன்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். அத்துடன் மீன் பிடிக்கும் வலை களையும் வெட்டிச் சேதப்படுத்தியுள் ளனர்.

இந்தநிலையில், மீன வர்கள் கரை திரும்பிக் கொண்டிருந்த நிலையில், நேற்று அதிகாலை சுமார் 20 படகுகளில் இருந்து மீன்கள் மற்றும் ஜி.பி.எஸ். கரு விகளை இலங்கை கடற் படையினர் எடுத்துச் சென் றதாக மீனவர்கள் தெரிவித் தனர்.

அவர்கள் வைத்திருந்த கைபேசிகளை யும் பறித்துச் சென்றதாக குற்றம்சாட்டப் பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையின் மேற்படி தாக்குதலால் நூற்றுக்கணக் கான மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவம் இந்திய கடல் எல் லைக்குள் நடைபெற்றதாக மீனவர்கள் குறிப் பிட் டுள்ளதாக மேற்படி ஊடகங் களில் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ)

# பெண்ணைத் துன்புறுத்திய இலங்கையருக்கு சிங்கப்பூரில் தண்டனை

சிங்கப்பூரில் பெண் ஒருவரை துன்புறுத் திய இலங்கையர் ஒருவருக்கு மூன்று வருட சிறையும், 9 கசை அடிகளும் வழங்கி நீதிமன் றம் தீர்ப்பளித்துள்ளது.

அவருக்கு ஆயிரம் சிங்கப் பூர் டொலர் அப ராதமும் விதிக்கப் பட்டுள்ளது.

சிங்கப்பூரின் செரங் கூன் நகரில் உள்ள விருந்தகம் ஒன்றில் பணியாற்றிய ரூப சிங்க ஆராச்சிகே அணில்பெரேரா என்ற அவர், விருந்தகத் துக்கு வந்த பெண் ஒருவரை இவ்வாறு வன்புணர்வுக்கு உட் படுத்த முயற்சித்ததா கக் குற்றம் சுமத் தப்பட் டிருந்தது. கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி அவர் கைது செய்யப்பட் டார். நேற்று முன் தினம் அவரது வழக்கு விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட் டது. (வ)

## காணி, வீடு விற்பனைக்கு

யாழ் . மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் இரண்டு அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: செ.நாகேஸ்வரி, 63, 5ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 162 64 62

(26872) (6.7.4)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி மத்திய பகுதியில் A-9 வீதியில் 5 பரப்பு (13 ஆயிரம் சதுர அடி) காணி உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0777441863

(26743)(2.6.7)

# மரண அறிவித்தல்



## திருமதி மனோன்மணி ராசா

யாழ். கலட்டியைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வதிவிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய மனோன்மணி ராசா 13.12.2012 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், தம்பையாவின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சிதம்பரம் தம்பதியரின் மருமகளும் ஜெயச்சந்திரன்,காலஞ்சென்றவர்களான மல்லிகாதேவி, சந்திராதேவி மற்றும் கமலாதேவி, மனோகரதாஸ், விமலாம்பாள் ஆகியோரின் தாயும் சகுந்தலாதேவி, வைத்தியநாதன், மகேந்திரன், வல்லிபுரம், ராசலக்சுமி, சிவசுப்பிர மணியம் ஆகியோரின் மாமியும் மாதுரி, ஜெனித்தா, சுபாஸ்கரன், யாழினி, சுபாஜினி, நிருபன், ரஜிகரன், மனோஜா, ரசோஜினி, ஜீவகுமார், கீர்த்தனா, சுபாஸ்கரன், டயானி, பவித்திரன், ரம்யா, மிதுனா ஆகியோரின் பேர்த்தியும் ஆரதி, ராகவி, சாரங்கி, சுவேதா, சங்கவி, அஜித், அனுஸ்ரீ, அபிஷா, நிவிஷா, சந்தியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.12.2012) திங்கட்கிழமை கனடா நேரப்படி பி.ப ஒரு மணிக்கு Elgin mills cemetery, 1591, Elgin mills Rd, Richmond Hill இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
மணி(மகன்) - பிரான்ஸ் - 33149 980 438
கமலா(மகள்) - கனடா - 905 239 5090
ரஞ்சன்(மகன்) - கனடா - 647 284 8494
விமலா(மகள்) - சுவிஸ்- 41444 514 4228

தகவல் :
குடும்பத்தினர்.
(கனடா)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


# யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில் கஜமுகாசுரன் சங்காரத் திருவிழா

இன்று காலை 7 மணிக்கு பூசைகள் தொடர்ந்து பஞ்சமுக அர்ச்சனை. மாலை 5 மணியளவில்

**கஜமுகாசுரன் சங்காரத் திருவிழா**

ஆரம்பமாகும்.

**நாளை விநாயக ஷஷ்டி**

முற்பகல் 10மணிக்கு விஷேட அபிஷேகம் மாலை 5 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனையும் தொடர்ந்து பஞ்சமுக பிள்ளையாரின் வெளி வீதி உலாவும் இடம் பெறும்.

பிள்ளையார் பணியில் நிற்கும் தொண்டர்கள்.

(சி/2631) (6.7.4)


## AAT புதிய பிரிவுகள் ஆரம்பம்

**கணக்கியல் துறையில் சிறந்த வேலைவாய்ப்பை பெற விரும்புகிறீர்களா!**

Spectra skills இல் AAT கற்கை நெறியை பூர்த்தி செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் தொழில் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறோம்.

தற்போது புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகின்றது. O/L பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களும் இக் கற்கை நெறியை தொடரலாம்.

**Spectra Skills**
19, Stanley Road, (People's Bank, 2nd Floor), Jaffna.
Tel: 021 222 1422, 021 222 1423.

(26836) (6-7-10)

இதோ!
## சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔடதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw,
(Reg.No. 6382) AR/No..228.

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
ஆரியகுள சந்திக்கு அருகில் T.P. 021 222 2567


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
18 - 11 - 1935

உதிர்வு
17 - 11 - 2012



## திருமதி நாராயணசாமி தங்கரத்தினம்

கடந்த 17.11.2012 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (17.12.2012) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு எரிந்த அம்மன் ஆலயத்திலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப் பதுடன், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பூதராயர் ஒழுங்கை,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.
ஆ.அருட்பிரகாசம்
வட்டுவாகல், முல்லைத்தீவு.
தொ.பே.: 077 219 7814

(சி/?)(6.11)


# முன்னைய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது

யாழ் **கலாலயா** பயிற்சியகம்
Yaarl **Kalaalayah** Academy
Jaffna

பெருமாள் கோயிலுக்கு அண்மையாக இயங்கி வந்த மேற்படி பயிற்சி நிலையம் தனது ஆரம்பக் கால இடமாகிய யாழ். போதனா வைத்தியசாலைக்கு பின்புறமாகவுள்ள விக்ரோறியா வீதியில் தற்போது இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

- இயக்குநர் -

(சி/2191) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## பி.பி.சி. செய்தியாளரின் ஆங்கில நூல் தமிழில் 'ஈழம் : சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்'

### சென்னையில் நேற்றுமுன்தினம் வெளியீடு

பி.பி.சியின் முன்னாள் செய்தியாளர் பிரான்செஸ் ஹரிசன் எழுதிய 'மரணங்கள் இன்னமும் எண்ணப்படுகின்றன' என்ற நூல் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை நூலாசியர் பிரான்செஸ் ஹரிசன் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்காவில் போரின் இறுதிக் கட்டத்தில் உயிர் தப்பியவர்களின் கதைகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டு அண்மையில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட இந்த நூல் அனைத்துலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே இதனைத் தமிழிலும் வெளியிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

போரில் உயிர்தப்பிய முன்னாள் போராளி, ஒரு தாதி, ஒரு துறவி, மற்றும் ஆசிரியர் உள்ளிட்ட ஏனையவர்கள் அளித்த தகவல்களை அடிப்படையாக வைத்து இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

போரில் உயிர் தப்பியவர்களின் கதைகள் மட்டுமன்றி விடுதலைப் புலிகளை விமர்சிக்கும் கருத்துக்களும் இதில் இடம்பெற்றுள்ளதாக பிரான்செஸ் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இந்த நூலை என். கே.மகாலிங்கம் ' தமிழாக்கம் செய்துள்ளார். ஈழம் : சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்' என்னும் தலைப்பில்




காலச்சுவடு வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டது.

இந்த நூலின் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு சென்னையில் இடம்பெற்றது.

## கெற்பேலியில் மருத்துவ முகாம் 200 இற்கும் மேற்பட்டோர் பயன்

தென்மராட்சி, டிசெ.17

தேசிய சுகாதார வாரத்தையொட்டி நேற்றுமுன்தினம் கெற்பேலி அ.த.க. பாடசாலையில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனை முகாமில் 200 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ பரிசோதனை முகாமில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, யாழ்ப்பாணம் மார்பு நோய் சிகிச்சை நிலையம் ஆகியவற்றின் வைத்திய அதிகாரிகளும் சாவகச்சேரி பிரதேச சபையின் ஆயுள்வேத வைத்தியரும் கலந்துகொண்டு நீரிழிவு, கண், பல், தோல், காசம், மலேரியா, குருதியில் வெல்லச் சத்து போன்ற பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

நீரிழிவு பரிசோதனையில் பெரும் எண்ணிக்கையானோருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டிருந்தமை கண்டறியப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கண் பரிசோதனையில் விழிவெண்படலத்தில் பூப்படர்வு ஏற்பட்ட 15 இற்கும் மேற்பட்டோருக்கு விஷன் 2020 திட்டத்தின் கீழ் இலவச சத்திரசிகிச்சை யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

முகாமில் கலந்துகொண்டோருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஊட்டச்சத்து குளிசைகளும் பூச்சி மருந்துகளும் வழங்கப்பட்டன.

இந்தப் பகுதியில் முதன்முறையாக பல்வேறு சிகிச்சைப் பிரிவுகள் நடத்தப்பட்டதால் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டது.

முகாமில் கெற்பேலி, பாலாவி, வெள்ளாம்போக்கட்டி, உசன், விடத்தற்பளை, மிருசுவில், தவசிகுளம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டனர். (3-9)

## தெல்லிப்பழையில் கண் சிகிச்சை மீண்டும் ஆரம்பம்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் கண் சிகிச்சை நிலையம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணங்களால் தற்காலிகமாக கண்சிகிச்சை நிலையம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் இந்தக் கண் சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பிரதி வியாழக்கிழமை தோறும் சிகிச்சையைப் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (3-36)

## காரைநகர் பிரதேச சபையில் 2013 பட்ஜெட் நிறைவேற்றம்

காரைநகர் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பட்ஜெட் உறுப்பினர்களின் முழுமையான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்த பட்ஜெட் அடுத்த வாரத்தில் இடம்பெறும் விசேட கூட்டத்தில் ஆராயப்பட்டு அதற்கான திட்டங்கள் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சபையின் உப தலைவர் ச.துர்க்கேஸ்வரன் தெரிவித்தார்.

குறிப்பாக காரைநகரில் பஸ் தரிப்பிடம் மற்றும் வீதிகளுக்கு வீதி விளக்குகள் அமைப்பதில் கவனம் செலுத் தப்படவுள்ளது.

ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு வசதியாக நிதி வளமும் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி ஊடாக பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (3-17)

## நெடுந்தீவில் கூட்டுறவு உணவகம் திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

நெடுந்தீவு பல நோ.கூ. சங்கம் இன்று திங்கட்கிழமை புதிய உணவகம் ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளதாக தலைவர் அ.பெ.அரியநாயகம் தெரிவித்தார். நெடுந்தீவில் நீண்ட காலமாக உணவகம் ஒன்று இல்லாத நிலையில் வெளியிடங்களில் இருந்து வரும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இதனையடுத்தே சங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-7)

## நெடுந்தீவில் வறிய மக்களுக்கு கியூமெடிக்கா உதவி

யாழ்ப்பாணம், டிசெ.17

நெடுந்தீவில் உள்ள மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு கியூமெடிக்கா நிறுவனம் உணவுப் பொருள்களை நிவாரண உதவியாக வழங்கியது.கடந்த வியாழக்கிழமை கியூமெடிக்கா நிறுவனத் தலைவர் வண. இராஜசூரியர் குறிப்பிட்ட உதவிப்பொருள்களை வழங்கினார்.

இருநூற்றிஐம்பது குடும்பங்கள் இந்த உதவிகளைப் பெற்றுக்கொண்டன. வீட்டுக்கான கூரைத் தகடுகளையும் சட்டங்களையும் விரைவில் வறிய குடும்பங்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்



### திருமதி சண்முகராசா சிவயோகம் (ஞூரி)

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா, உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா சிவயோகம் நேற்று முன்தினம் (15.12.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் மருமகளும், சண்முகராசாவின் (தவம்) அன்பு மனைவியும், ரமேஸ், வாணி, சுரேஸ், காலஞ்சென்ற ரதீஸ் மற்றும் சுகி, வித்தியா ஆகியோரின் அன்புத் தாயாரும், கேதீஸ்வரன், யூலி, ஜீவா ஆகியோரின் மாமியும், சிந்து, சுகன்யா, நிலக்ஷன், லக்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2012) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்,
ரமேஸ் (தொடர்பு இலக்கம்).

No.48, New Market,
Vavuniya.

## தேங்காய் தாக்கும் உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ.17

வட்டுக்கோட்டை உடுக்கியவளை பிள்ளையார் திருக்கோயில் பெருங்கதைப் படிப்பு இன்று திங்கட்கிழமையும் தேங்காய் தாக்கும் உற்சவம் நாளை செவ்வாய்க் கிழமையும் நடைபெறவுள்ளது. சுவாமி ஆலயத்தில் இருந்து எழுந்தருளி மூளாய் வீதி வழியாக வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்த சுவாமி ஆலயம் அடைந்து தீர்த்தக் கோயிலில் தேங்காய் தாக்கும் வைபவம் இடம்பெறும்.

## திருவாசக புராணப் படிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

திருவாசக புராணப் படிப்பு நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் முற்பகலும் பண்ணாகம் விசுவத்தனை ஆலயத்தில பிற்பகலும் புராணப் படிப்பு நடைபெறவுள்ளது. தொடர்ந்து பத்து தினங்கள் இந் நிகழ்வு இடம்பெறும். (3-28)

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்
29.04.1945

மறைவு
29.12.2011

### திருமதி சுப்பிரமணியம் இராஜேஸ்வரி

திதி: 17.12.2012

அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி எமைவிட்டு
சென்றதேனோ!
கருணை நிறைந்த உங்கள் முகம் காண
கவலையுடன் தேடுகின்றோம்

இறையடி தொண்டு செய்தால் தானோ....!
இறைவன் தங்களை தன்னோடு கொண்டு சென்றான்

துயர் உற்ற வேளையில் எம் துயர் துடைத்தீர்கள்
இன்று எங்கள் துயர் பகிரவோ எம்மோடு
தாயே! நீங்கள் இல்லை....!

ஆண்டொன்று ஆனதம்மா உங்கள்
அரவணைப்பை நாங்கள் இழந்து
அம்மா உங்கள் நீங்காத
நினைவலைகளுடன்
இறைவனைக் கேட்கின்றோம்
கருணை நிறைந்த கடவுளே மீண்டும் ஒரு கருவறை
தந்தால் எம் அன்னையின்
வயிற்றில் உதிக்கும் வரத்தைத் தந்திடுவாய்!

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.
குணசேகர் (மகன் - கண்ணன்) 077 7361 870

சூசையப்பர் வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி.
(26414)(45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகளைத் தாண்டி...



சு.சுபா
4ஆம் கட்டை,
மானிப்பாய்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, உனக் கேன் தனி வாழ்வு, இணைந்தே செயற்படு, ஒன்றிணைந்தே குரல் கொடு, ஓங்கிடும் உன் பலம், கலங்கிடாதே உன் காலங்கள் யாவும் காவியத்தில் முடியும். பலம்கொண்ட மாந்தர்க்கு பூமி யிலே பயன் உண்டு. ஓங்கியே வளர்வாய். நன்மைகள் உனக்குண்டு." பொதுவாகப் பெண்கள் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்படுவதன் காரணமாக ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாது போகிறார்கள்.

பெண்களது ஆசைகள், சிந்தனைகள் மறுக்கப்படுகின்றன. வாழ்க்கை பற்றிய தேடுதல்களுக்கும், சுயதொழில் பற்றிச் சிந்திப்பதற்கும் முடியாமல் உள்ளது. மேலும் ஆக்கபூர்வமான ஆளுமைகள் இருந்தும் அவற்றை வெளிப்படுத்த முடியாத நிலையில் பெண்கள் இருக்கின்றார்கள். இதனால் இந்தப் பெண்கள் தங்களது ஆற்றல்கள், திறமை கள், உணர்வுகள், விருப்பங்கள் போன்றவற்றை வெளிப்படுத்த தயங்குகின்றனர். இவற்றை வெளிப்படுத்த வேண்டும். நாளாந்தம் பெண்களுக்கு நடக்கும் பிரச்சினைகளை சமூகத்துக்கு உணர வைக்க வேண்டும்.

இவ்வாறு பெண்கள் இருப்பதற்குக் காரணம் பெண்களுக்கு நடக்கும் வன்முறைகளும், சமூகப் பார்வைகளுமே. இவை பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றது. மற்றும் பெண்களுக்கெனப் பல பழமொழிகளைச் சொல்லி அவர்களை அடக்கி வைக்கும் நிலைமைகளும் அன்று தொடக்கம் இன்றுவரை இருந்துவருகின்றது.

அதாவது பெண்கள் எந்த வேலையைச் செய்ய முற்பட்டாலும் உடனே கூறுவார்கள் "பெட்டைக் கோழி கூவி பொழுது விடியுமா?" "பெண் புத்தி பின் புத்தி" இவ்வாறான பழமொழிகள் பெண்களை இரண்டாம் பட்சமாக சுட்டிக் காட்டுகின்றன.

இவ்வாறான பார்வைகள் சமூகத்தில் ஏன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. சமூகம் பெண்கள் மீது கொண்டுள்ள கருத்துத்தான் என்ன? இதிலிருந்து விடுபட ஏன் இன்னும் சமூகம் யோசிப்பதில்லை? சமுதாயம் பெண்கள் மீது கொண்ட பார்வை காலம் காலமாக இப்படித்தான் இருந்து வருகின்றது.

இதனை ஒரு வரையறையாக வைத்துள்ளார்கள். பெண்ணானவள் தலைகுனிந்து நடக்க வேண்டும். மேலும் தன் கணவனை இழந்த பெண் சுபகாரியங்களுக்கு முன்னுக்கு வரக் கூடாது போன்ற கருத்துக்களைக் கண்முன்னே காண முடிகின்றது. இவ்வாறு உள்ள எமது சமுதாயம் முழுமையான ஒரு முற்போக்கான சமுதாயமாக வருவதற்கு புரிந்துணர்வு வேண்டும்.

வீடுகளிலும், வீதிகளிலும், வேலைத்தளங்களிலும், கிராமங்களிலும், நகரங்களிலும் சிறுவர்கள் துஷ்பிரயோகம், பெண்ணடிமைத்தனம், பாலியல் பலாத்காரம், பால் நிலைப் பாகு பாடு என பல்வேறு பிரச்சினைகள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டு வருவதை நாம் காண்கிறோம்.

தவிர பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை அடக்கம், ஒடுக்கமாய் வளர்த்து எந்தவித கஷ்டமும் இல்லாத ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கக் கூடிய ஒரு நிலையை உருவாக்குகின்றோம் என நினைத்து அவர்களை ஒரு வரையறைக்குள்ளே வைத்திருப்பர்.

இந்த நிலையில் பெண்கள் தங்கள் உண்மையான ஆளுமைகளை வெளிக்கொணரும் போது குடும்பத்தாரை மீற வேண்டும். சமூகத் தவரை மீற வேண்டும். இவ்வாறான தடைகளைத் தாண்டுவது பெரும்பாலான பெண்களால் முடியாத காரியமாகி விடுகிறது. மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் சமூகத்திலிருந்து விலகி வாழ்தல் முடியாத காரியம். இவ்வாறான போக்குகளினாலும் பெண்களினது ஆற்றல்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்த முடியாத மோசமான நிலை ஏற்பட்டு வருவதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது.

அது மாத்திரமின்றி நாம் ஏதோ ஒரு சோகப் பாட்டைப் பாடினாலோ, அல்லது வானொலியினூடாகக் கேட்டு ரசித்தாலோ சமுதாயம் உடனே வாழ்க்கையில் என்ன காதல் தோல்வியோ? அல்லது எவனாவது ஏமாற்றி விட்டானா? என்ற ஒரு ஏளனக் கேள்விகளை கேட்பதை நாம் கண்டும், உணர்ந்துமுள்ளோம்.

இவ்வாறாக கேட்பவர்கள் மத்தியில் உண்மையிலே பெண்கள் தங்களது உணர்வுகளையோ அல்லது, விருப்பங்களையோ வெளிப்படுத்த சமூகத்தின் மத்தியில் பயப்படுகின்றார்கள். சமூகத்தின் மத்தியில் நல்ல திறமைகளை வெளிப்படுத்துகின்ற பெண்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் இன்றும் எமது சமூகத்தில் உள்ளனர். இப்படியான காரணங் களால் பெண்களது ஆக்கங்கள் தணிக்கை களுடன்தான் வெளிவருகின்றன.

ஆகவே இவ்வாறான நிலைமைகள், போக்குகள், இன்றைய சமூகத்திலிருந்து விடுபட வேண்டும். அப்போதுதான் எமது பெண்களின் உணர்வுகளின் வெளிப்பாடுகள் வெளியில் வரும். பண்பாட்டின் கூடுதலான அம்சங்கள் உயர் சாதியினராலும், ஆண் தலைமைத்துவக் கருத்தியலினாலும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆகவே இவ்வாறான கீழ்மையிலிருந்து மீளவும், கௌரவத்தை நிலை நாட்டவும், தொடர்ச்சியாக போராடவும்வேண்டியுள்ளது.

ஆகவே எல்லா விதமான நாடுகளிலும் பெண்கள் தமக்கெதிரான ஒடுக்கு முறைக்கு முகம் கொடுப்பவர்களாக இருந்து வருகின்றனர். இன்றைய காலகட்டத்தில் நேரத்திற்கு நேரம் பெண்ணின் வாழ்வியல் நடைமுறைகள் மாறிக்கொண்டிருக்கும் வேளையில் இதுவரை காலமும் கட்டிக்காக்கப்பட்டு வந்த கலாசாரம் சிதையாமல் உண்மையான அனுஷ்டானங்களை, விடுதலைப் போக்கினை அடைய வேண்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற வாக்கிற்கு இணங்க எமது பெண்களினூடாக மேலே கூறப்பட்ட நிலமைகளில் இருந்து சமூகம் மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் தமது குரல்களை, தமது உரிமைகளை, தொடர்ச்சியாக உயர்த்த வேண்டும். சமூகத்தின் பெண்களின் துயர் தோய்த்த நிலையைக் கண்டு கோஷங்கள் எழுப்பப்பட்டு வர வேண்டும்.

எனவே பெண்கள் தங்களது ஆற்றல்கள், திறமைகள், உணர்வுகள், விருப்பங்கள் போன்றவற்றை வெளிப்படுத்த வேண்டும். அதேவேளை பெண்களின் பிரச்சினைகளை சமூகத்துக்கு உணரவைக்க வேண்டும். இதற்குத் தடையாக உள்ள எமது பிரதேச சமூகப் பார்வைகளை எடுத்துக் காட்டி இவ்வாறான சமூகத்தின் மத்தியிலிருந்து பெண்கள் விடுபட முன்வர வேண்டும்.


# பெண்களே! புரிந்து கொள்ளுங்கள்



மனிடராய் பிறந்த அனைவருமே இந்த உலகில் சவாலான வாழ்க்கைக்கு முகம் கொடுத்துத்தான் வாழ வேண்டிய நியதி. அதிலும் ஆண்களை விட பெண்களுக்குத்தான் பிரச்சினைகள் அதிகம். தாயாக, தாரமாக, சகோதரியாக பல அவதாரங்களாக இருப்பவர்களுக்கு வாழ்க்கையைப் புரிந்து கொள்வது என்பது சிக்கலான விடயந்தான். அதிலும் நவீன யுகத்தில் பெண்கள் மேல்நிலையில் இருந்தும் கூட, ஒரு பெண்ணால் தன்னைத் தானே புரிந்துகொள்வது கஷ்டமான விடயமாகவே இருக்கிறது. உங்களுக்கு பிரச்சினைகள் இல்லாமல் வாழ்க்கை இருக்காது. உங்களுக்கு பிரச்சினையிலிருந்து தப்பிப் போக எவ்வளவு சக்தி இருக்கிறதோ அதே அளவு சக்திதான் பிரச்சினையை எதிர்கொள்ளவும் தேவைப்படும். கோபம், வைராக்கியம், பொறுமையின்மை எல்லாமே உங்கள் வாழ்வை ஒளி இழக்கச் செய்துவிடும். முக்கியமாக அடுத்தவர் மனநிலையைப் புரிந்து வாழப் பழகிக் கொள்ளுங்கள், நல்ல நண்பர்கள் நல்ல புத்தகங்கள் இவை எல்லாம் உங்கள் மனதிற்கு அமைதி தரக்கூடியவை.

இன்றைய சூழலில் பெண்கள்தான் வாழ்க்கையில் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமல் மனதளவிலும், உடலளவிலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மென்மையானவர்கள் பெண்கள் என்றாலும், எல்லா விடயத்திலும் அதனைக் காட்ட முடியாது. அதற்காக எடுத்ததற்கெல்லாம் டென்ஷன் ஆகாதீர்கள். எனக்கு என்ன பிரச்சினை என்பதைப் புரிந்து கொண்டு செயற்படுங்கள். வாழ்க்கை விசித்திரமானது. அதை வாழப் புரிந்து கொள்பவர்களுக்கே புகழும் மகிழ்ச்சியும் கிடைக்கின்றது.

விமலதர்சினி மத்தியாஸ்
மானிப்பாய்.





திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# அம்மா...!

எழுதுவதற்கு வார்த்தைகளில்லை
எவராலும் மறக்க முடிவதில்லை
அம்மா என்றால் இப்படித்தான்
என்று சொல்லுவதை விட
அவர் காட்டுவுள் எல்லாம்
அன்பு செல்லமான கண்டிப்பு
கோபம் என்றாலும் என்னில்
நிலைமாறாத கரிசனை
அவர் என்றும் தன்னிலையிலிருந்து
அணுவளவும் மாறியதில்லை
அம்மாவின் தியாகங்கள்
நினைத்துப் பார்த்தால் கண்களில்
கண்ணீர் முட்டும் ரணங்களில்

நினைவுகள் அம்மாவிடம்
செல்கையில் வலிகள் ஆறும்
யாருக்கும் கெடுதல் நினைத்ததில்லை
அனுசரிப்பதில் அவருக்கு ஈடில்லை
சிரித்த முகம் காண நான்
என்ன தவம் செய்தேனோ தெரியவில்லை
கொடுத்து வைத்தவள் என்றும் நான்



சிந்துஜா துலசிங்கம்
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி,
2 ஆம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் இனஅழிப்பை கண்டும் காணாமலும் இருப்பது மனித உரிமை மீறலே

தமிழர்கள் மீது நடைபெறும் இன அழிப்பை கண்டும் காணாமல் இருப்பது அந்தக் குற்றத்தை அனுமதிப்பதற்குச் சமனாகும் .அந்த வகையில் பல்கலைக் கழக மாணவர் மீதான தாக்குதல் சம்பவமும் கைதுகளும் மனிதவுரிமை மீறலாகும் . இனவழிப்பை கண்டும் காணாமல் இருப்பது மானிடத்துக்கெதிரான குற்றமாகும் என குர்டிஷ் அமைப்புக்களின் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசின் மற்றும் துருக்கிஅரசின் ஒரே மாதிரியான அணுகுமுறையும் தெளிவாக சுட்டிக்காட்ட முடிகின்றது. இரு அரசுகளின் இனவழிப்பு அரசியல் எந்தவித அரசியல் பின்னணியிலும் மற்றும் அறத்தின் நெறியிலும் நியாயப்படுத்த முடியாது. ஜேர்மனியில் உள்ள குர்டிஷ் அமைப்புகளின் சம்மேளனமாகிய நாம் எமது மௌனத்தின் ஊடாக எவ் விதத்திலும் இவ் விடயத்தில் குற்றவாளிகளாக நிற்காமல் , தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவை தெரிவிகின்றோம் .

அடையாளங்கள் பாதுகாக்கப்பட்ட மற்றும் மேன்மைபடுத்தப்பட வேண்டும். பண்பாடு, மொழி ஒருமைப்படுத்தப்படுவதால் ஓர் இனம் அல்லது அதன் பரம்பரை அதன் தனித்துவத்தை மற்றும் வைராக்கியத்தை இழக்கின்றது.

மாணவர்களின் கைதை அதே நேரத்தில் தமிழ் மக்களின் மீது ஒடுக்குமுறையை மேற்கொள்ளும் இலங்கை அரசை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கும் இந்த வேளையில் அவர்களை தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம் .

அதேநேரத்தில் சர்வதேச ஜனநாயக மனிதநேய சக்திகளை ஒருங்கிணைந்து தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வண்ணம் தமது குரல்களை எழுப்பும்படி வேண்டிக்கொள்கின்றோம். மற்றும் ஈழத் தமிழ் மக்கள் அவை கடந்த காலங்களாக ஒடுக்குமுறைக்கெதிரான விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையில் பல்வேறு ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்களை முன்னெடுகின்றது . கடந்த ஆண்டுகளில் குர்டிஷ் மக்களின் விடுதலைக்கான போராட் டங்களில் ஈழத்தமிழ் மக்கள் அவை இணைந்து ஆதரவு கொடுத்திருந்தது .

அதே போல் மாணவர்களின் கைதை கண்டித்து ஜேர்மனியில் நடைபெற்றகவனவீர்ப்பு நிகழ்வில் குர்டிஷ் இளையோர்கள் , ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்பினரோடு இணைந்து கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது . ஒடுக்கப்பட்ட பல்லின மக்கள் சர்வதேச ரீதியான ஓர் ஒருமைப்பாட்டை உருவாக்குவது மிக அவசிய மானது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## மரண அறிவித்தல்கள்

### பரமசாமி ஆனந்தவல்லி (நாகம்மா)



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், இல.54, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி ஆனந்தவல்லி இயற்கையை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு பரமசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு - மரகதம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கோபாலசிங்கத்தின் அருமைச் சகோதரியும், சுசிலாதேவி (கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சண்முகதாஸ் மற்றும் மோகனதாஸ் (செட்டி, சுவிஸ்), கோகிலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், குணபாகன் (உரிமையாளர், தம்பிப்பிள்ளையும் மைந்தரும், யாழ்ப்பாணம், கால் நடைவளர்ப்போர் சங்கத் தலைவர்), நளினி (சுவிஸ்), காசிப்பிள்ளை - நித்தியானந்தன் ஆகியோரின் மாமியும், விஸ்வரூபன், மோகனரூபன், லவரூபன், குகாசினி (C.G.C), தினேஸ் (S.J.C), சிவானி, ஆரணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2012) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் துண்டி இந்துமயானத்துக்கு எடுத்தச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.54, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை. (26882)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

### நவரத்தினம் முத்துலஷ்மி



புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தி கல்வயல் றோட், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் முத்துலஷ்மி நேற்று முன்தினம் (15.12.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துக் குமாரு- அப்பாத்தை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற செல்வரத்தினம் சரோஜினியின் மைத்துனியும், மணியம்லஷ்மி, திருகுமாரவேலு, காலஞ்சென்றவர்களான முத்துவேலு, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வக்குமார்(லண்டன்), செல்வரஞ்ஜினி (லண்டன்) ,செல்வரஞ்சன்(லண்டன்) ,செல்வ ஜேந்தினி (பிரான்ஸ்), செல்வநந்தன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், துஸ்யந்தினி (லண்டன்), ஜெயந்திரபாலா (லண்டன்), காயத்திரி (லண்டன்), பவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், வனோஜன், தர்ஷானி, நிஷாலினி, சஞ்சேய், சஞ்சிவித், சாம்பவி, சுபிலினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (17.12.2012) திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
திரு. வல்லிபுரம்
நவரத்தினம்(கணவர்), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நுணாவில் மத்தி,
கல்வயல் றோட் ,சாவகச்சேரி. (26825)(3)

### சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி

(ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர் மகாஜனாக்கல்லூரி)



ஜார்வத்தை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் கருகம்பனையை வசிப்பிடமாகவும் தற்போது இளவாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி 15.12. 2012 சனிக்கிழமை அதிகாலை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், மலைமகள் (பொட்ஸ்வானா), திருமால் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பஞ்சலிங்கம் (பொட்ஸ்வானா), நவராணி( பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகாமிப்பிள்ளை (கொழும்பு), செல்லத்துரை (கொழும்பு), சுந்தரம் (தெல்லிப்பழை), சிவஞானம்(பிரான்ஸ்) ஆகியோரின்அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அருளானந்த மூர்த்தி, வேலுப் பிள்ளை மற்றும் இராஜேஸ்வரி (கொழும்பு), சரோஜினிதேவி(பிரான்ஸ்), பத்மநாதன்(வவுனியா), பத்மராணி(கனடா), றஞ்சிதநாதன்(கனடா), ஞானபுஷ்பம்(கனடா), ரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத் துனரும், கிருபாலிங்கம் (கனடா),சசிகலா (வவுனியா) தேவகி (கனடா), ரவீந்திரன்(கனடா), ஜெயேந்திரன்(கனடா) ஆகியோரின் அன்பு சகலனும், தரணிதரன், சுஜேந்தினி (பொட்ஸ் வானா), கார்த்திகன், கஜாந்தி, கஜீனா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம்(19.12.2012) புதன் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொப்பிலாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
இளவாலை வடக்கு, இளவாலை. (26876) (6.7.4)
குடும்பத்தினர்.

## குடிதண்ணீர் பிரச்சினை தீருமா?

நெடுந்தீவு, மாதகல் கிழக்கு, சாந்தை, வட்டக்கச்சி கிழக்கு, வட்டக்கச்சி மத்தி ஆகிய பிரதேசங்களுக்குப் பிரத்தியேகத் திட்டங்களின் கீழ் கிராமிய மட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்.

இதற்காக ஒதுக்கப்பட்ட 2.42 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி விரைவாக பயன்படுத்தி குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படுமா?

இவ்வாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் உதவி பொது முகாமையாளர் எந்திரி தி.பாரதிதாசனிடம் கேள்வி எழுப்பினார்.

மூன்றாவது காலாண்டு அபிவிருத்திக் கூட்டம் யாழ்.மாநகர சபையின் நூலகக் கேட்போர் கூடத்தில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி தலைமையில் இடம்பெற்றது.

அக்கராயன், இயக்கச்சி ஆகிய பிரதேசங்களிலும் இந்தக் கிராமிய மட்டக் குடிதண்ணீர் திட்டம் சேர்க்கப்பட வேண்டியுள்ளது.

எனவே 2000 பயனாளிகளுக்கான குடிதண்ணீர் திட்டமும், 550 பயனாளிகளுக்கான சுகாதார திட்டத்துக்கும் ஏற்ற வேலைகளை மிக வேகமாக துரிதப்படுத்தி [illegible] வடமாகாண பிரதம செயலாளர் மேலும் தெரிவித்தார். (ம-41)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### கதிர்காமு முருகேசு (சிவபாதம்)



தோற்றம்
18 ★ 12 ★ 1955

மறைவு
17 ★ 12 ★ 2005

எங்கள் குடும்ப விளக்காய்
வாழ்ந்திட்ட எங்கள் தம்பியே
உறவுகள் இருந்தாலும்
நீர் இருக்கிற மாதிரி இல்லை தம்பி
என்றும் உன் பாசம் எங்களை
விட்டு அகலாது தம்பி

அன்பின் சகோதரிகள்,
இராசமலர், நாகேஸ்வரி,
மருமகன், மனைவி.

நாகர் கோயில், கிழக்கு,
நாகர் கோயில். (சி/2633)(3.14)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் தங்கராசா

(ஓய்வுபெற்ற அதிபர், யா/ நீர்வேலி தெற்கு இ.த.க.பாடசாலை, நீர்வேலி)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தங்கராசா நேற்று (16.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் புஸ்பராணி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், திலகவதி, செல்வராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஜெகதீஸ்வரன் (ஓய்வுபெற்ற படவரைஞர்), மலர்தேவி (ஆசிரியர், கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), வத்சலாதேவி (ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற ரவீந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயராசா, ஜெகநாதராசா, அருணாசலம், குணதீசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2012) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (26878)(3.8)

தகவல்:
த.செல்வராணி
(மனைவி)

### திருமதி செல்லத்துரை இராசம்மா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை இராசம்மா கடந்த 13.12.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற தம்பிப்பிள்ளை செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சின்னையா-லட்சுமிப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான யோகநாதன், துரைராசா மற்றும் பரமேஸ்வரி, காலஞ் சென்ற சுசீலா மற்றும் பரமலிங்கம்(கனடா) , மாசிலாமணி (கனடா), தர்மராஜா (அஸ்திரேலியா), கனகேஸ்வரி (கனடா), காலஞ் சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் சின்னம்மா, காலஞ் சென்ற செல்லம்மா மற்றும் சிறிபத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான தங்கம்மா, கோவிந்தபிள்ளை , பொன்னுத்துரை , செல்லம்மா ,நல்லம்மா,கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், வசந்த குமார்,(லண்டன்), இரத்தினகுமார் (டென்மார்க்), இந்திர குமார் (பிரான்ஸ்) வசந்த குமாரி, சந்திர குமார் (லண்டன்), சூரிய குமார்(கனடா) ஆகியோரின்பாசமிகு தாயாரும், சரோஜினி (லண்டன்) , தவலட்சுமி (டென்மார்க்) , தவஜோதி (பிரான்ஸ்), காலஞ் சென்ற தவபாலன் மற்றும் யாமினி( லண்டன்), புனிதவதி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2012) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப் பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.85/9,ஆனந்தன்வடலிவீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (26873) (6.7.4)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானமுருகன் சம்பியன்



யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று பி.ப. 4 மணியளவில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது முதல்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் மிகுந்த உற்சாகத்துடன் மோதிக்கொண்டதால் ஆட்டம் ஆரம்பம் முதலே ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

இரு அணியினரும் தத்தமது அணிக்கான கோலினைப் பெறும் நோக்குடன் எதிர் அணியினருடைய கோல்பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனால் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் முதலாம் பாதி ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது..

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் முதல்பாதி ஆட்டத்தில் விட்டதவறை நிவர்த்தி செய்து எதிரணியின் கோல்பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். இதன்போது மயில்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெகன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான கோலினை அடித்தார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பான நிலையை எட்டியது. எப்படியாவது தமது அணிக்கான கோலினைப் பெற்றிடவேண்டும் என்ற நோக்கோடு நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியினர் தமது ஆட்டத்தினை வேகப்படுத்தி எதிர் அணியினருடைய கோல்பரப்பில் நுழைந்து கோல்பெற எடுத்த முயற்சிகள் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியின் பின்கள வீரர்களால் தடுக்கப்பட்டன.

மயிலங்காடு ஞானமுருகன் தனது ஆட்டத்தை வேகப்படுத்த அணியின் இரண்டாவது கோலினை அடித்தார்.

கடைசி நிமிடம் வரை நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியினர் தமது அணிக்கான கோலினைப் பெற வேண்டும் என போராடிய போதும் அவர்களால் எதுவித கோல்களையும் பெறமுடியவில்லை.

ஆட்டம் முடிவடைவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கையில் ஞானமுருகன் அணிக்கு ஒரு தண்டனை உதை வழங்கப்பட்டது. அதனை அணியுடைய தலைவர் சேகர் கோலாக்கி தனது அணியினுடைய 3 ஆவது கோலினைப் பெற்றுக்கொடுத்தார். இதனால் ஆட்டநேர முடிவில் 3:0 என்ற கோல்கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றிபெற்று சம்பியனானது. (23)

# இன்றைய ஆட்டங்கள்



வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**மாலை 6 மணி**

நியூபைட் விளையாட்டுக் கழகம் எதிர் சன்சையின் விளையாட்டுக் கழகம்

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதி சக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள முதலாவது காலிறுதியாட்டத்தில் மோதவுள்ள அணியின் விவரம் வருமாறு-

**பி.ப 4 மணி**

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகம் (23)

# வென்றது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம்,டிசெ.17

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் பி.ப. 3 மணியளவில் இடம்பெற்ற ஆடடமொன்றில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், ஈஸ்ரர் ஈகிள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (23)

# அல்வாய் நண்பர்களிடம் வீழ்ந்தது ஊரெழு றோயல்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கால் இறுதி ஆட்டமொன்றில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 3 கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றிதோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது. இதில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (23)

# கிண்ணம் சென்.ஜோன்ஸ் வசம்



யாழ்ப்பாணம், டிசெ.16

நெடுந்தீவு பிரதேசத்தல் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே உதைபந்தாட்ட வீரர்களின் திறமையை வளர்க்கும் வகையில் நடத்தப்பட்ட பிரதேச செயலக கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் மைதானத்தில் இடம்பெற்றது. இதில் சென்.ஜோன்ஸ் கழக 'ஏ' அணி கிண்ணம் வென்றது.

இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக 'சி' அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் ஆரம்பமுதலே இரு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் பெறும் நோக்கோடு எதிர் அணியினுடைய கோல்ப் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்ததால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இதன் போது சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழக 'சி' அணி வீரன் தனுராஜ் தனது அணியினுடைய முதலாவது கோலை அடித்தார். எப்படியாவது பதிலுக்குத் தமது அணிக்கான கோல்களைப் பெற்றிட வேண்டும் என்ற நோக்கோடு சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியினர் எதிர் அணியின் கோல்ப்பரப்பை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர் இதன் போது அன்ரனி பெர்னாண்டோ தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி அணியினுடைய முதலாவது கோலை அடித்தார். ஆட்டத்தின் முதற் பாதி இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றதினால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம்பாதியாட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் தமது அணியினுடைய ஆட்டத்தை வேகப்படுத்தித் தமது அணிக்கான கோல்களைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் போது சென். ஜோன்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி வீரர் அன்ரனி பெர்னாண்டோ அணியினுடைய இரண்டாவது கோலை அடித்தார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.


சென். ஜோன்ஸ் விளையாட்டுக்கழக 'சி' அணியினர் கோல்களைப் பெற முயற்சிகளை மேற்கொண்டு எதிர் அணியினுடைய கோல்ப்பரப்பை நோக்கி முன்னேறினர். இவர்களுடைய முயற்சி அனைத்தும் எதிர் அணியினுடைய பின்கள வீரர்களினால் தடுத்தாடப்பட்டது. தமது ஆட்ட வியூகத்தில் மாற்றத்தை மேற்கொண்டு தமது அதிரடியாட்டத்தை வெளிப்படுத்தி முன்னேறிய சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி வீரன் யூட்நிறோசன் தனக்கு கிடைத்த சந்தரப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி மூன்றாவது கோலை அடித்தார். சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 3:1 என்ற கோல் கணக்கினால் முன்னிலை வகித்தது .இதனால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது. சென். ஜோன்ஸ் விளையாட்டுக்கழக 'சி' அணியினர் கோல்களைப் பெறவேண்டும் என்று கடைசி நிமிடம் வரை போராடினர். அவர்களின் போராட்டத்தின் பயனாக ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடம் இருக்கையில் தனுராஜ் தனக்குக் கிடைத்த சந்தரப்பத்தை பயன்படுத்தித் தனது அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார்.

ஆட்டமுடிவில் சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழக 'ஏ'அணி 3:2 என்ற கோல்க்கணக்கில் வெற்றியீட்டி சம்பியனானது.

இந்தப் போட்டித் தொடரில் அதிக கோல்களை அடித்த வீரராக சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியைச் சேர்ந்த அன்ரனி பெர்னாண்டோ தெரிவு செய்யப்பட்டார். பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் கா.றெக்சியனும் சிறப்பு விருந்தினராக நெடுந்தீவு பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஆகியோர் அன்னபாக்கியம் கலந்து கொண்டனர். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், டிசெ17

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுகளுக்கிடையே ஆண்,பெண் இருபாலருக்குமான சதுரங்கச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற அணி வீரர்களின் பெயர் வருமாறு-

**ஆண்கள் பிரிவு**

முதலாமிடம் கல்வி அமைச்சு அணியைச் சேர்ந்த சி. வித்தியாதரன்

இரண்டாமிடம் சுகாதார அமைச்சு அணியைச் சேர்ந்த ஆர்.கே பகீரதன்

மூன்றாமிடம் பிரதம செயலாளர் கொத்தணி அணியைச் சேர்ந்த ஜீ.குகன்

**பெண்கள் பிரிவு**

முதலாமிடம் சுகதார அமைச்சு அணியைச் சேர்ந்த யு.துஸ்யந்தி

இரண்டாமிடம் உட்கட்டமைச்சு அமைச்சு அணியைச் சேர்ந்த எஸ்.கவிதாம்பிகை

மூன்றாமிடம் உள்ளூராட்சி அசைச்சு அணியைச் சேர்ந்தக ககஜித்தா (23)

# சமநிலை நோக்கி நகரும் ஆட்டம்




இந்திய அணி இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் பெற்றுக் கொண்ட 330 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடி 326 ஓட்டங்களை 9 இலக்குகளை இழந்து பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்துவதாக அதிரடியாக அறிவித்தது. பதிலளித்து ஆடத் தொடங்கிய இங்கிலாந்து அணி நேற்றைய நாள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான நான்கு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாக்புரில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பீற்றர்ஸன், ரூட் தலா 73 ஓட்டங்களையும், பரியர் 57, சுவான் 56 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சாவ்லா 4, சர்மா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி ஆரம்பத்தில் திணறிய போதும் டோனி - ஹோக்லி இணையின் உதவியுடன் ஓரளவு கௌரவ இலக்கை நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவு வரையில் பெற்றிருந்தது. ஹோக்லி 103, டோனி 99 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர்.

இந்திய அணி நேற்றுமுன்தினம் மூன்றும் நாள் ஆட்ட நேர நிறைவில் 8 இலக்குகளை இழந்து 297 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அஸ்வின் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

அஸ்வின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் ஓஜா 3 ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணி தனது 9 ஆவது இலக்கையும் இழந்தது. தொடர்ந்து களமிறங்கிய இசாந் சர்மா நிதானமாக தடுத்தாடினார். இந்திய அணி இங்கிலாந்து அணியை விட 4 ஓட்டங்களால் பின்தங்கிய நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்துவதாக திடிரென அறிவித்தது.


களத்தில் அஸ்வின் 29, சர்மா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர். பந்து வீச்சில் அண்டர்சன் 4, சுவான் 3 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தனர்.

4 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி சீரான இடைவெளிகளில் தனது இலக்குகளை இழந்தது. அணித் தலைவர் குக் 13, கொம்ரொன் 34, பீற்றர்ஸன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இருந்தும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரொரட் அரைச் சதம் கடந்தார்.

இங்கிலாந்து அணி நேற்றைய நாள் முழுவதும் மெதுவான ஆட்டத்தை வெளிப்படுத்தியே ஓட்டங்களைச் சேர்த்தது. ஆட்ட நேர நிறைவில் 3 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் ரொரட் 66, பெல் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் இறுதிநாளாகும். (5)

# டோனியின் துரதிஷ்டமும் சாதனை






இந்திய டெஸ்ட் வரலாற்றில் முதன் முறையாக 99 ஓட்டங்களில் 'ரன் அவுட்' ஆன முதல் அணித் தலைவர் என்ற சாதனையை டோனி படைத்தார்.

1. சர்வதேச அளவில் 99 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்த 12 ஆவது அணித்தலைவர் டோனி.

2. இந்தியாவில் டெஸ்டில் 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்த வீரர்களில் வரிசையில் எட்டாவதாக இணைந்தார் டோனி. இதில் கங்குலி இருமுறை (இங்கிலாந்து, இலங்கை) இப்படி ஆட்டமிழந்தார்.

3. மொத்தம் 73 டெஸ்டில் 3883 ஓட்டங்கள் எடுத்துள்ள டோனி, இந்திய மண்ணில் 2000 (36 டெஸ்ட்) ஓட்டங்களை கடந்தார்.

4. இங்கிலாந்து அணிக்கு எதிராக டோனியின் அதிகபட்ச (99) ஸ்கோர் இது தான். இதற்கு முன்னர் 2007, ஓவலில் 92 ஓட்டங்கள் எடுத்தார்.

5. முதன் முறையாக டோனி டெஸ்ட் அரங்கில் 200 அல்லது அதற்கு மேல் பந்துகளை(246) சந்தித்தார். இதற்கு முன் கொல்கத்தாவில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 2010 இல் 187 பந்துகளை (132 ஓட்டங்கள்) சந்தித்துள்ளார்.

இரண்டாவது ஜோடி

டோனி, ஹோக்லி இணைந்து 198 ஓட்டங்கள் எடுத்தனர். இது இங்கிலாந்துக்கு எதிராக ஐந்தாவது இலக்குக்கு எடுக்கப்பட்ட இரண்டாவது அதிகபட்சம். 1984-85 இல் ரவிசாஸ்திரி, அசார் இணைந்து, கொல்கத்தா டெஸ்டில் ஐந்தாவது இலக்குக்கு 214 ஓட்டங்கள் எடுத்தனர்.

மேலும் இந்த மைதானத்தில் எந்த ஒரு இலக்குக்கும் எடுக்கப்பட்ட, இரண்டாவது அதிகபட்ச (198) ஓட்டங்கள் இது தான். தென்னாபிரிக்காவின் அம்லா, கலிஸ் ஜோடி 2010 இல் 340 ஓட்டங்கள் எடுத்தது. (5)

# செல்சி அணி வெற்றி



ஜப்பானில் 9 ஆவது பீபா கழக உலக கிண்ண உதைபந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதில் செல்சி அணி 3-1 என்ற கணக்கில் மான்டெர்ரி அணியை வீழ்த்தியது.

உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதியில் மான்டெர்ரி, செல்சி அணிகள் மோதின. தொடக்கம் முதல் செல்சி அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.

முதல் பாதியின் 17 ஆவது நிமிடத்தில் செல்சி அணிக்காக மாடா ஒரு கோல் அடித்தார். மான்டெர்ரி அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

இரண்டாவது பாதி தொடக்கத்தில் செல்சி அணியின் டாரஸ் (46 ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். 48 ஆவது நிமிடத்தில் டார்வின் மற்றொரு கோல் அடிக்க செல்சி அணி 3-0 என்று முன்னிலை பெற்றது.

மான்டெர்ரி அணிக்கு 90 ஆவது நிமிடத்தில் ஜீசஸ் டி நிக்ரிஸ் ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார்.

முடிவில், செல்சி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது. (5)

# 'ரி-20' தலைவராக டு பிளஸி

நியூசிலாந்துக்கெதிரான 'ரி-20' தொடருக்கான தென்னாபிரிக்க அணியின் அணித்தலைவராக டு பிளஸி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாத இறுதியில் தென்னாபிரிக்கா செல்லவுள்ள நியூசிலாந்து அணி மூன்று சர்வதேச 'ரி-20', இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது.

'ரி-20' போட்டிக்கான தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

ஒரு நாள் மற்றும் 'ரி-20' போட்டிக்கு அணித்தலைவராக இருந்த டீ வில்லியர்சின் சுமையை குறைக்க தெரிவுக் குழுவினர் டு பிளஸியை புதிய அணித்தலைவராக நியமித்தனர்.

ஹென்றி டேவிஸ், குயின்டான் டி காக், ஆரோன் பங்கிசோ, கிறிஸ் மோரிஸ் உள்ளிட்ட புதுமுகங்களுக்கு இடம் கிடைத்துள்ளது.

'ரி-20' அணி வீரர்கள் விபரம்:

டுபிளஸி (அணித்தலைவர்), டீ வில்லியர்ஸ், ரிச்சர்ட் டெவி, ரொபின் பீட்டர்சன், பர்ஹான் பெஹர்டியன், டேவிட் மில்லர், ரோரி கிளைன்வெல்ட், ஹென்றி டேவிஸ், குயின்டான் டி காக், ஆரோன் பங்கிசோ, கிறிஸ் மோரிஸ், மோர்னி மோர்கல், பர்னல், ஸ்ரெயின், ரொசோபே.

டெஸ்ட் அணி வீரர்கள் விபரம்:

கிரேம் ஸ்மித் (அணித்தலைவர்), ஹசிம் அம்லா, டீ வில்லியர்ஸ், டுபிளஸி, கலிஸ், டீன் எல்கர், ரோரி கிளைன்வெல்ட், மோர்னி மோர்கல், அல்விரோ பீட்டர்சன், ரொபின் பீட்டர்சன், பிலாண்டர், ருடோல்ப், டேல் ஸ்ரெயின். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டில்ஷான் சதம் ஆட்டம் ஆஸி. வசம்

ஆஸ்திரேலியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் 3 ஆம் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி முழுமையான ஆதிக்கத்தைப் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்ட நிறைவில், 4 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 336 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

5 ஆவது இலக்குக்காக திலகரட்ண டில்ஷான், அன்ஜலோ மத்தியுஸ் ஆகியோர் 161 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தனர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக திலகரட்ண டில்ஷான் 147 ஓட்டங்களையும் அன்ஜலோ மத்தியுஸ் 75 ஓட்டங்களையும் பிரசன்ன ஜெயவர்தன 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பீற்றர் சிடில் 5 இலக்குகளையும் நதன் லயன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

114 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி நேற்றைய நாள் முடிவில் இலக்கு இழப்பின்றி 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன்படி அவ்வணி 141 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

எட் கோவன் 16 ஓட்டங்களுடனும் டேவிட் வோணர் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது காணப்படுகின்றனர்.

ஹோபார்ட்டில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 450 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(5)

# ஆக்ரோஷமாக ஆடுங்கள்



இந்தியாவிற்கெதிரான கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர்கள் ஆக்ரோஷமாக ஆட வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும், பாகிஸ்தானின் துடுப்பாட்ட ஆலோசகருமான இன்ஸமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

டிசெம்பர் 25 ஆம் திகதி ஆரம்பித்து இடம்பெறவுள்ள 2 'ரி-20' போட்டி கொண்ட தொடருக்கும், 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டி கொண்ட தொடருக்குமான துடுப்பாட்ட ஆலோசகராகச் செயற்படும் இன்ஸமாம், பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களுக்கு தனது ஆலோசனையை வழங்கியுள்ளார்.

இந்தியாவிற்கெதிராக எந்த அணி ஆக்ரோஷமாக ஆடுகிறதோ அவ்வணி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தும் என்று இன்ஸமாம் தெரிவித்துள்ளார்.

தன்னைப் பொறுத்தவரை தனது அனுபவங்களை பாகிஸ்தான் வீரர்களுடன் பகிர விரும்புவதாகவும், இந்தியாவிற்கெதிரான தொடரில் அவர்கள் விளையாடும் போது அவர்களுக்கு உதவியாக தனது அறிவுரைகள் அமையும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் வீரர்கள் இந்தியாவுக்கெதிராக அதிகமான போட்டியில் பங்குபற்றியுள்ளதாகத் தெரிவித்த இன்ஸமாம் உல் ஹக், அழுத்தமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள அவர்களைப் பழக்கப்படுத்துவதே தனது நோக்கம் எனத் தெரிவித்தார்.

இந்தியாவுக்கெதிரான தொடரில் யார் அழுத்தங்களை சிறப்பாக எதிர்கொண்டாலும் அவர்கள் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துவர் என்று இன்ஸமாம் மேலும் தெரிவித்தார்.

(5)

# உலகக் கிண்ணத்துடன் இந்திய வீரர்களுக்கு மெத்தனம்

இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்கள் தொடர்ந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இதனால் இந்திய வீரர்களை முன்னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான கவாஸ்கர் கடுமையாகச் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், கடந்த ஆண்டு நடந்த உலகக் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றியது. இந்த வெற்றிக்குப் பின்னர் இந்திய வீரர்கள் சிலர் மெத்தனமாகி விட்டனர்.

அவர்களின் செயல்பாடுகள் மிகவும் சாதாரணமாகி விட்டது. அவர்களின் இந்த செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள இயலாது. இந்த மெத்தனம் தான் இந்திய அணி தொடர் தோல்விக்குக் காரணமாகும்.

மூத்த வீரர்களான சச்சின், சேவாக் தொடர்ந்து ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் திணறி வருவது ஏமாற்றமான விடயம். இங்கிலாந்து அணியின் புதுமுக வீரர் ஜோ ரூட்டை பார்த்து இந்திய வீரர்கள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். அவர் பிரையர், சுவானுடன் இணைந்து சிறந்த இணைப் பாட்டத்தைக் கொடுத்தார்.

மிகவும் கடினமான இந்த ஆடுகளத்தில் ஜோ ரூட் சிறப்பாக ஆடியது பாராட்டத்தக்கது. இது மாதிரியான



சிறந்த ஜோடியின் ஆட்டம் இல்லாததே இந்திய அணிக்கு உள்ள பிரச்சினையாகும். இந்திய அணியின் மோசமான தோல்விக்கு பயிற்சியாளர் டங்கன் பிளச்சரும் ஒரு காரணம்.

தோல்விக்கு அவரும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கடந்த காலங்களில் பிளட்சரின் செயல்பாடு சிறப்பானதாக இல்லை எனவும் கூறியுள்ளார்.

(5)

புதிய முகவரி
ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை - வைர வியாபாரிகள்
இல: 217, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083,
0714182480

தவறிவிட்டது
மூங்கிலாறுக்கும் விசுவமடு 12 ஆம் கட்டை சந்திக்குமிடையில் காணி உறுதிப்பத்திரம் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும் (சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: குறிஞ்சி புத்தகசாலை விசுவமடு. 0770822785, 0775013998
(சி/2637)(3.14)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

German Swiss மொழிகள்
தமிழ் மொழி பெயர்ப்புடன் அடுத்த புதிய வகுப்புகள் 21.12.2012 அன்று ஆரம்பம். Goethe institute exam இக்கு ஏற்றவாறு CD book விளக்கத்துடன் Germany யிலிருந்து வந்த ஆசிரியரால் நடைபெறுகிறது.
தொடர்பு: 10 Palaly Road, Jaffna.
(ஆரிய குளத்துக்கு அருகில்)
(25257)(3.14) Miss. Kajenthini 0771604823

Pharmacy இக்கு ஆள் தேவை
வல்வெட்டித்துறையில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள Pharmacy ஒன்றுக்கு Pharmacy certificate உடைய ஒருவர் தேவை.
(இதற்கு இருபாலாரும் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0777865520
(25559)(3.14)

காணி உடன் விற்பனைக்கு
நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு மிக அருகில் கோயில் வீதியில்,
1 1/2 பரப்பு சதுர வடிவான காணி இருபக்க மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு. (67' நீளம் 65' அகலம் )
* அத்துடன் ஒரு பரப்பு 2குழி காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
(67' நீளம் 45' அகலம்) தரகர் தேவையில்லை)
தொடர்பு: 0755546000, 0729586931. நல்லூர்

HOTEL NOKIYA
நா சுவைத்திட மனம் நிறைவடைய மனம் மகிழ்ந்திட
HOTEL NOKIYA வின்
இன்றைய SPECIAL ருசிக்குடா
சூப் free>
மலாயன் Special கொத்து
உங்களின் தேவைக்கேற்ப அலுவலகம், தொழிலகம், இல்லங்கள், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்.
இல-110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(26883)(9.14) தொடர்பு- 0779258957

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.